Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්  டிச 08 - 14, 2005

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 641

## மாற்றங்களை வேண்டி நிற்கும் மஹிந்தவின் சிந்தனை

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு

இன்னொருவர் பார்வையில்...

நயன்தாராவின் நறுக்ஸ்

சுடச் சுடச் சினிமா

நமீதாவின் தாராளம்


வாசகர்களுக்கு பரிசு கூப்பன் உள்ளே!



## விழித்தெழும் மலையகமும் வீழ்ச்சிபெறும் தலைமைகளும்

அலசல்

# ஆன்மீகம்



## அவதாரம்

ஒவ்வொரு யுகத்திலும் தர்மம், அதர்மம் என இரு பிரிவுகள் தோற்றம் பெறுவதும் இவற்றுக்கிடையே ஒரு பிரளயமே ஏற்படுவதையும் அறிய முடிகிறது. இதன் முற்பகுதியிலே அதர்மத்தின் கை ஓங்கி தன் பலத்தாலும் அடக்குமுறையாலும் கொலை, கொள்ளை, சித்திரவதை என அதர்மம் கொட்டமடிக்கும். இவ்வேளையிலே தர்மத்தின் பக்கம் சார்ந்திருப்போர் பல துன்பங்களையும் அழிவுகளையும் எதிர்கொள்வர். இப்படியாக அதர்மத்தின் கொடுமைகள் எல்லை தாண்டிப் போகும்போது தர்மத்தை நிலைநாட்டவும் அதன்வழி நடப்பவர்களைக் காப்பாற்றும் பொருட்டும் இந்துக்களின் வழிபாட்டில் சிறப்புற்று விளங்கும் சக்தி, விஷ்ணு போன்ற சக்திகள் அவதாரங்களை எடுத்து அதர்மத்தையும் அதற்கு துணை நின்றவர்களையும் சங்காரம் செய்து நல்லவர்களைக் காப்பாற்றுவதை அறிகிறோம். குறிப்பாக கீதையிலே "அதர்மம் எங்கு தலைதூக்குகின்றதோ அங்கெல்லாம் நான் யுகம் தோறும் அவதரிப்பேன்" என்கிறார் கிருஷ்ணர். இன்று கூட உலகிலே பெரும்பாலும் கொடியவர்களின் பிடியிலே சிக்கி கொலை, கொள்ளை, சித்திரவதை என இவ்வுலகம் சீரழிகிறது. தர்மமும் அதன்வழி நடப்பவர்களும் கொடூரமாக துன்புறுத்தப்படுகிறார்கள். இத்தகைய கொடிய அதர்மவாதிகளை அடக்கி தர்மத்தின் வழி நடப்பவர்களைக் காப்பாற்ற இன்றைய கலியுகத்திலும் இறைவன் ஏதோ ஒரு வடிவில் அவதாரம் எடுப்பார் என்று நம்புவோமாக. எனவே மக்களாகிய நாமும் எந்நிலையிலும் அதர்மத்திற்கு துணைபோகாமல் தர்மத்தின் வழி நடந்து நிலையான பேரின்பத்தை அடைவோமாக.

**- சிவா, வவுனியா.**

## ஆபத்தில் காப்பேன்

"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு,
நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை
மகிமைப்படுத்துவாய்" சங்கீதம் 50.15

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே அடிமைகளாக இருந்தபோது, கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டார் என்று வேதம் சொல்லுகின்றது. ஆம் அன்பான ஆண்டவரின் பிள்ளைகளே, ஆபத்துக் காலத்திலே தேவனை நோக்கிக் கூப்பிடும்போது, எம்மை விடுவிப்பதற்காக அவர் எதையும் செய்வார். யாத்திரகாமம் புத்தகத்தை வாசிக்கின்ற போது, தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக்கொள்ள எத்தனையோ அற்புதங்களைச் செய்கின்றார், மீட்டுக்கொள்கின்றார்.

அதே கர்த்தர்தான் ஜீவனுள்ள தேவனாக இன்றும் என்றும் இருக்கின்றவராகவே இருக்கின்றார். அற்புதங்களின் தேவனாகிய அவர். எம்மை எந்த ஆபத்தில் இருந்தும் விடுவிக்க வல்லவராக இருக்கின்றார்.

"நான் உம்முடையவன் என்னை இரட்சியும்" சங். 1.19:94 என்று உரிமையோடு ஆண்டவரைக் கூப்பிடுவோம். உன்னதமானவர் ஆபத்தில் இருந்து விடுவிப்பார். ஆமென்.

**-எஸ்.தேவகுமார், இராகலை.**

## நோயாளிகளைக் காண்பது

நோயாளிகளைச் சென்று விசாரிப்பவருக்கு நிச்சயமாக பாவங்கள் நீக்கப்படுகின்றன.

நோயாளிகளைக் காணச் செல்பவர்கள் அல்லாஹ்வின் பேரருளில் மூழ்கியிருக்கிறார்கள். மேலும் நோயாளியை விசாரிக்கச் செல்வதால் நீ மணம் பெற்றாய். உனது நடைகளும் மணம் பெற்றன. சுவர்க்கத்தில் ஒரு மாளிகையும் நீ சித்தப்படுத்திக் கொண்டாய் என்று வானவர் சப்தமிடுகின்றனர்.

நித்திய நோயாளி அல்லாஹ்வின் விருந்தாளி. அவருக்கு எழுபது ஷஹீதுகளின் நன்மையை இறைவன் வழங்குவான்.

நீ ஒரு நோயாளியைக் காண செல்வாயானால் உனக்காக அவரிடம் துஆச் செய்யும்படி கேட்டுக் கொள்! ஏனெனில் நோயாளிகளின் து ஆ அமர்களின் துஆ வுக்கு ஒப்பானது.

மேற்கண்டவை நோயாளிகளைப் பற்றி திரு நபி (ஸல்) அவர்கள் கூறியதாகும்.

**-முஹம்மது ஹஸனீ, கல்முனை - 07.**

## கவிதைப் போட்டி இல.638



பரிசுக்குரிய கவிதை

### சாத்தியம்

கட்சித் தாவல்
படுகொலைகள்
ஆட்கடத்தல்
எல்லாமே சாத்தியம்
கத்தைக் கத்தையாகக்
கரன்சி நோட்டைக்
காலடியில்
போட்டுவிட்டால்.

அ. சந்தியாகோ,
கண்டி

## கவிதைப் போட்டி இல.641



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 14.12.2005.

கவிதைப் போட்டி இல.641
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### யதார்த்தம்

வரியென்னும்
வசூலிப்பால்
பாமரனின்
குருதி குடிக்கும்
கொடுங்கோண்மை
(ஏக) தலைவனின்
இறுதி நிலையும்
இதுதான்!!

*- க.கமால்தீன்,*
*ஏறாவூர் - 03.*

### தருமம்

ஆடி நீ அடங்கும் போது
ஓடி நீ உழைத்ததெல்லாம்
உடன் வந்து சேராது
தேடி நீ தருமம் செய்
சீக்கிரம் வந்து விடும்!

*- வி.சுவர்ணா,*
*ஆரையம்பதி - 01.*

### சுரண்டல் பணம்

வியர்வையின் பரிசாக
இருந்திருந்தால்
சட்டைப்பையில்
இருந்திருக்கும்
சுரண்டல் பணம் இது.
ஆதலால் இறங்கிவிட்டது
பையிலிருந்து
பாதத்திற்கு!

*- செல்லத்தம்பி பிரதீபன்,*
*மாணிக்கமடு.*

### கஞ்சன்

பணத்துக்கு இருக்கும்
பயங்கர சக்தியை
இறப்பிலும் உணர்த்தும்
இவனொரு 'கஞ்சன்'.

*- எம்.சி.கலீல், கல்முனை.*

### சுவையான வாழ்க்கை

"குணம் கொண்ட
பேர்களுக்கு
சுவையாகும்
வாழ்க்கை
பணம் (வெறி) கொண்ட
மனிதருக்கு
சுமையாக மாறும்!"

*- நா.ஜெயபாலன், பிபிலை.*

### பணம்

அன்று குணம் தான் வாழ்க்கை
இன்று பணம் தான் வாழ்க்கை
நாளை பிணம் தான் வாழ்க்கை
இது கலியுக காலம்

*- த.ஜெசிக்கா, யாழ்ப்பாணம்.*





### எமன்

பணம் இல்லாதவன்
பிணம் என்றார்களே
ஓடி ஓடிப் பணம் சேர்த்தேன்
மனிதனாக வாழ
என்ன கொடுமை;
அதுவே எமனாக மாறி
என்னைப் பிணமாக்கி
விட்டதே!

*- சபிறா சத்தார்,*
*வாழைச்சேனை.*

### காசு

காசு நம் கட்டுப்பாட்டில்
இருந்தால்
வாழ்வு சிறக்கும்.
காசு நம்மைக்
கட்டுப்பாட்டில் வைத்தால்
வாழ்வு பறக்கும்.

*- சீ.தங்கவடிவேல்,*
*மட்டக்களப்பு.*

### சுமை

பணம் பணம்!
உன்னை சுமக்கும்.
பணத்தை நீ
சுமந்த போது!!

*- ஆர். நிரோஷ், நீர்கொழும்பு.*

### கற்றுக் கொள்

ஊரும் உலகும்
உறவும் பெண்ணும்
பார்ப்பது
உன் குணத்தை அல்ல
பணத்தை;
இது உன்னிடம்
இருக்கும் போதே
கற்றுக்கொள்

*- ஆர்.லக்சுமி வாசன்,*
*புசல்லாவ.*

## உங்கள் பக்கம்

### மின் விளக்குகள் இல்லாது றஹ்மத்புர மக்கள் விசனம்

முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கொத்தாந்தீவு - றஹ்மத்புரம் கிராமத்தில் கடந்த வருடம் தொடக்கம் இன்று வரைக்கும் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமை குறித்து இக்கிராம மக்கள் கவலையடைகின்றனர்.

கடந்த வருடம் கற்பிட்டி பிரதேச சபையால் இக் கிராமத்திற்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. பின்பு ஒரு மாத காலத்தினுள் அது தானாகவே செயலிழந்து போனது. இன்று வரைக்கும் செயலிழந்த வண்ணமே காணப்படுகின்றது. இது தொடர்பாக உங்கள் பக்கம் பகுதியில் ஏற்கனவே செய்தி வெளிவந்தும் எவ்வித முன் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை என்பது கவலைக்குரியதாகும்.

இரவானதும் இக்கிராமம் இருள் சூழ்ந்த வண்ணம் காணப்படுகின்றது. இதனால் மக்கள் பெரிதும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். இரவு நேர தொழுகை (தராவீஹ்) மற்றும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமப்படுகின்றனர். இரவு வேளைகளில் ஆண்கள், பெண்கள் பிரயாணத்தை மேற்கொள்வதற்கு அஞ்சுகின்றனர்.

எனவே றஹ்மத் புரம் கிராம மக்களின் அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றான இம் மின் விளக்குகளை உடனடியாக பொருத்தித் தருமாறு பொறுப்புவாய்ந்த அதிகாரிகளை றஹ்மத்புரம் கிராம மக்கள் முரசினூடாக வேண்டிக் கொள்கின்றனர்.

**-முல்லை றஸீஹா,**
**றஹ்மத்புரம்.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


## வாசகர் சாலை

### தேடி நிற்கிறோம்!

அன்புடன் தினமுரசுக்கு!
நான் முதன் முதலில் பிரான்ஸில் இருந்து எழுதும் கடிதம் இது. நான் தாய்நாட்டில் இருக்கும் போதும் உன்னைப் பாக்காமல் இருக்கமாட்டேன். இங்கு வந்த பின்னும் சற்றே பிந்தினாலும் ஒழுங்காகக் கிடைக்கின்றாய். மிக்க சந்தோஷம், மகிழ்ச்சி. என்னைப் போலவே இங்குள்ள அனைவரும் உன்னைத் தேடி வாசித்து நாட்டு நடப்பு, உண்மை விபரங்கள் அறிகின்றோம். உன்னைப் பற்றி எழுதுவதற்கு இன்னும் எவ்வளவோ உண்டு. தொடர்ந்து தொடர்பு கொள்ளுகின்றேன்.

*-நிரோஷன், பாரிஸ்.*

### சேவை தொடரட்டும்!

அன்புடன் முரசுக்கு!
மென்மேலும் தினமுரசின் சேவை தொடர வேண்டும். ஆக்கபூர்வமான தகவல்கள், செய்திகள், கருத்தாழமிக்க தகவல்கள் மேலும் மேலும் வழங்க வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

*-கல்முனை கலீல், சவூதி அரேபியா.*

*அன்பு முரசே!*
கொட்டும் முரசு ஒலித்திடும்
ஓசை சிறிது தூரம்
மட்டுமே; ஆனால்
தினமுரசு ஒலித்திடும் ஓசை
உலகெங்குமே! இதைச்
சொல்வதில் எனக்கு எந்த
ஆட்சேபனையும் இல்லை.

*-வை.எச்.சம்சுடீன்,*
*கல்முனை.*

### வீர நடை போடு!

வருக முரசே!
முரசே நீ வரும் நாளை எதிர்பார்த்து
என் விழிகள் தவம் கிடக்கின்றன.
உன்னைப் பார்க்க என் உள்ளம்
துடிக்கின்றது.
முரசே! உள் முகக் கவர்ச்சியில்
கிறங்கித்தான் போகின்றேன்.
முரசே! உன் மனதைத் திறந்தால் என்ன
அதிசயம்!
உலகத்தை உன்னுள் அல்லவா
அடக்கியுள்ளாய்.
ஒவ்வொன்றும் என்னை வியக்க வைக்கின்றது.
தடைகள் பல வந்தாலும் இன்றுபோல் என்றும்
வீர நடை போட வாழ்த்தும் உன்னவள்.

*-ந.வதனி, உடுவில்.*

இனிய தினமுரசே!
உன் உள்ளடக்கங்களைப் பார்த்து என் நெஞ்சினுள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்கின்றன. எப்படித்தான் நீ இவ்வளவு காலமும் உன் பணியைச் சிறப்பாக செய்கின்றாயோ? என்றென்றும் புதுப்பொலிவுடன் வந்து என் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகின்றாய். என்றும் உன் பணி தொடர என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

*-கே.நந்தினி, வவுனியா.*

# சிவாஜிலிங்கத்தைக் கொல்ல பிரபாகரன் சதி!

**அம்பலமாகும் அந்தரங்கம்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவாஜிலிங்கத்தைக் கொலை செய்வதற்குப் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் தனது இயக்க கொலைக் கும்பலை அனுப்பி வைத்தாரென்ற தகவலை சிவாஜிலிங்கம் எம்.பி.யே தெரிவித்தார். சிங்களத் தனியார் தொலைக்காட்சியொன்று நடத்திய அரசியல் நிகழ்ச்சியொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார். 1986ஆம் ஆண்டு தன்னைக் கொல்வதற்குப் பிரபாகரன் ஆட்களை அனுப்பி வைத்தாரென்றும் இதனையடுத்துக் கொழும்பிற்குத் தப்பிவந்த தான், அங்கு தலைமறைவாக வாழவேண்டி ஏற்பட்டதாகவும் சிவாஜிலிங்கம் கூறினார். ரெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தையும் பிரபாகரனே கொலை செய்வித்தாரென்றும் சிவாஜிலிங்கம் கூறினார். இக் கலந்துரையாடலில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ஐ.தே.க.வின் ரோஹித அபேய குணவர்த்தன, ஜே.வி.பி.யின் விஜித ஹேரத் ஆகியோரும் கலந்து கொண்டனர். தன்னைக் கொல்ல பிரபாகரன் ஆட்களை ஏவி விட்டாரென்று சிவாஜிலிங்கம் கூறியதும், "இதனால்தான் பிரபாகரன் மீது நம்பிக்கை வைக்க முடியாமலிருக்கிறது" என்று அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே கூறினார்.

## நான்காவது ஈழ யுத்தத்துக்கு புலிகள் முஸ்தீபு

### படையினரைத் தாக்கி பொதுமக்களை பழிவாங்குவதே அவர்களின் திட்டம்

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண புதிய ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு கால அவகாசம் வழங்கப் போவதாகப் பிரபாகரன் தனது பிறந்த தின உரையில் குறிப்பிட்டு ஒரு கிழமை கழிவதற்கிடையில் படையினர் மீது புலிகள் வடக்கில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இத் தாக்குதல்கள் மூலம் படையினரை ஆத்திரப்படுத்தி பொதுமக்கள் மீது தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட வேண்டுமென்பதே புலிகளின் நோக்கமாகுமென்று யாழ்.பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தரான செ.அருந்தவநாதன் குறிப்பிட்டார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அப்பாவி விவசாயிகள் இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு படையினர் மீதும் மாற்றுத் தரப்பினர் மீதும் புலிகள் பழியைப் போட்டுள்ளனர். படையினர் மீதான தமது தாக்குதலைத் தீவிரப்படுத்துவதற்காகவே இவ்வாறான தந்திரோபாயத்தை மேற்கொண்டுள்ளனரென்றும் அவர் சொன்னார்.

படையினர் மீது புலிகள் தாக்குதல்களைத் தொடர்ந்தும் தொடுத்துக் கொண்டிருப்பார்களேயானால் பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொதுமக்கள்தான் என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். இத்தாக்குதல்கள் தொடர்ந்தால், இராணுவக் கெடுபிடிகள், சுற்றி வளைப்புகள், கைதுகள் ஆகியவை கண்டபடி நிகழும். கடந்த காலங்களைப் போன்று ஓரிடத்தில் படைகள் மீது தாக்குதலை நடத்திவிட்டு புலிகள் தப்பிச் சென்றால் அவ்விடத்திலுள்ள அப்பாவி மக்களைப் பழி வாங்குவதே படையினரின் வரலாறாக இருந்து வந்துள்ளது. தற்போது யுத்தப் பிராந்தியங்களில் செயற்படும் மனித உரிமை அமைப்புகள், சர்வதேசத் தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாகப் படையினர் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இச் சூழலைச் சீர்குலைப்பதே புலிகளின் நோக்கமாகவிருக்கிறது. இதனால்தான் கிழக்கிலும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மோதல்களைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் புலிகள் இறங்கியுள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்களும், படையினரும் புலிகளின் சூழ்ச்சிகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல் நடந்து கொள்ளவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## அனர்த்த நிவாரணம்

அடைமழை மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற கிளிநொச்சி மற்றும் மன்னார் பகுதிகளுக்கு நிதி உதவிகளை உடனடியாக வழங்கும்படி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார். இதன் பிரகாரம் கடந்த 02ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திற்கு 02 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்திற்கு 1.4 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திற்கு 04 இலட்சம் ரூபாவும், மன்னார் மாவட்டத்திற்கு 1.65 மில்லியன் ரூபாவும், யாழ். மாவட்டத்திற்கு 1.7 மில்லியன் ரூபாவும், திருகோணமலை மாவட்டத்திற்கு 05 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது பணிப்பின் பேரில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் போன்ற பகுதிகளுக்கு முதற் கட்டமாக ஒரு தொகுதி தண்ணீர்த் தாங்கிகள் அடங்கலான அத்தியாவசிய அடிப்படை நிவாரணப் பொருட்கள் அடங்கிய 06 பாரவூர்திகள் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டன. இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளின் நிலைமைகள் தொடர்பாக அமைச்சர் அரசாங்க அதிபர்கள், மற்றும் உயர் அதிகாரிகளிடமிருந்து விவரங்களைக் கோரியுள்ளார். இதே நேரம் நாடெங்கிலும், அடைமழை, வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களுக்கு மேலதிகமாக 23 மில்லியன் ரூபா நிதி உதவிகளை அமைச்சு இதுவரையில் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



*ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் விசேட பிரதிநிதி பிலிப் எல்ஸ்டன் அண்மையில் சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கொழும்பிலுள்ள அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.*

## சமாதான காலத்திலும் படுகொலைகள்

### ஐ.நா. பிரதிநிதிக்கு அமைச்சர் டக்ளஸ் விளக்கம்

இலங்கை வந்துள்ள, நீதியற்றதும் எதேச்சாதிகாரமானதுமான படுகொலைகள் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் விசேட பிரதிநிதி பிலிப் எல்ஸ்டன், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையில் சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் இடம்பெற்று வருகின்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், சமாதான ஒப்பந்த காலத்தில் கூட புலிகளால் தொடர்ந்தும் மனிதப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நாட்டில் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகள் சீர்குலைந்து போயுள்ளதாகவும் குறிப்பிட்டார். சமாதான முயற்சி சீர்குலைந்து விடும் என்ற காரணத்தினால் நாட்டில் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளைப் பேணுகின்ற பாதுகாப்புத் தரப்பினரால் கூடச் சரிவர இயங்க இயலாததொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், தமிழர்களை தமிழர்களே கொலை செய்கின்ற ஒரு சூழல் உருவாகி இருப்பதையும் உணர்த்தினார். புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி, கணவன் கொலை செய்யப்பட்ட நிலையில் மனைவியால் கூட அக்கொலை பற்றி பொலிஸில் புகார் செய்ய இயலாத ஒரு துர்ப்பாக்கிய நிலை தொடர்வதாகவும், இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்த அமைச்சர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது சம்பவங்களின் தகவல்களை எடுத்து அச்சம்பவங்கள் யுத்த நிறுத்த மீறல்களா? இல்லையா? என்பதை வழங்குகின்ற ஓர் அமைப்பாக மட்டும் இல்லாது, நிகழும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரத்தையும், நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தையும் கொண்டிருப்பதோடு தற்போது போல் இல்லாது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் சென்று விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடிய அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அனுசரணையாளர்கள், அனுசரணையாளர்களாக இருக்க வேண்டுமேயன்றி, அவர்கள் கண்காணிப்பாளர்களாக இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் கொலைகளைச் செய்து விட்டு, அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குப் போய் மறைந்து விடுவதால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைப் பலப்படுத்துவதன் மூலம் இவ்வாறான செயல்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவ[ர்] குறிப்பிட்டார். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு உட்பட உரிய அனைத்து ஸ்தாபனங்களும் புலிகளது தொட[ர்] படுகொலைகளை நிறுத்த முன்வரவேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார். இச்சந்திப்பின் போது புலிகளால் படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பெயர்ப் பட்டியல் அமைச்சரால் பிலிப் எல்ஸ்டனிடம் கையளிக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா, சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கொள்ளையடிக்கிறாராம் தொண்டமான்; தொல்லை கொடுக்கிறார் சதாசிவம்

மலையக மக்களுக்கு விநியோகிப்பதற்கென வழங்கப்பட்ட கோடிக் கணக்கான பெறுமதி வாய்ந்த கணினிகள், மோட்டார் சைக்கிள்கள் உட்படப் பல உபகரணங்கள் கொட்டகலையிலுள்ள இ.தொ.கா. பிரமுகரின் ஏற்பாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மலையகத் தலைமகனின் மோசடிகள் பல அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க இ.தொ.கா. தலைவர் தொண்டமான் பதினைந்து கோடி ரூபா கோரினாரென்று ஐ.தே.க. எம்.பி. மகேஸ்வரன் கூறியது பழைய சங்கதி.

அரசாங்கம் எம்.பி.க்களுக்கு வழங்கிய கார்களை இ.தொ.கா. எம்.பி.க்களுக்கு வழங்கத் தொண்டமான் தலா பத்து இலட்சம் கோரிப் பெற்றுக்கொண்டாரென்று முன்னாள் இ.தொ.கா. எம்.பி. சதாசிவம் குற்றஞ்சாட்டியுள்ளார். தேசியப் பட்டியல் எம்.பி.க்களிடமிருந்து 15 இலட்சம் ரூபா பெற்றுக் கொண்டாரென்றும் அவர் குற்றஞ்சாட்டினார். தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் இ.தொ.கா. உபதலைவர் ஆர்.யோகராஜனும் சதாசிவமும் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இருவரும் பண்பற்ற வார்த்தைகளைப் பிரயோகித்து ஒருவர், மற்றவரைக் கள்ளனென்றும் மோசடிக்காரனென்றும் திட்டித் தீர்த்துக் கொண்டார்கள். சதாசிவம் மக்களுக்கு வழங்கப்பட்ட தகரங்களைக் கொள்ளையடித்தாரென்று யோகராஜன் குற்றஞ்சாட்டினார். வேவண்டன் தோட்டத்தில் எடுபிடியாகவிருந்த நீ எப்படிக் கோடீஸ்வரனானாய் என்றும் யோகராஜன், சதாசிவத்தைச் சாடினார். மலையக மக்கள் கொந்தராத்துக்காரர்களின் பிடியில் சிக்கியுள்ளனரென்று ஜனாதிபதி ராஜபக்ஷ முன்னரொரு தடவை கூறியதை மலையகத் தொழிற் சங்கவாதிகள் ருசுப்படுத்தி வருகின்றனர்.

## அன்ரன் பாலசிங்கத்தின் ரசனையால் வன்னியில் எரிகிறது 'சிவப்பு விளக்கு'

பிரபாகரனின் பிறந்த தினத்தையொட்டி லண்டனில் அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்திய உரையின் சில பகுதிகள் வன்னியிலுள்ள புலி இயக்க சிரேஷ்ட மட்டத்தவர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

"இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கென வன்னிக் காட்டிலிருந்து பாங்கொக் வந்த எமது பெடியள், காலையில் வெளிக்கிட்டுப் போனால் இரவில்தான் திரும்பி வருவார்கள். சிவப்பு விளக்குப் பகுதிகளிலுள்ள மெழுகுப் பொம்மைகள் போன்ற பெண்கள் அவர்களைக் கவர்ந்திழுக்கிறார்களென்பது எனக்கும் தெரியும். என்னையும் கூட்டிக் கொண்டு போங்களென்று அவர்களைக் கேட்டேன். எனக்கும் போகத்தான் விருப்பம். ஆனால் எனக்குப் பக்கத்தில் இருக்கும் வெள்ளைக்காரப் பெண்மணிதான் எனக்குப் பிரச்சினை." இப்படிக் கூறியிருக்கிறார் புலிகளின் மதியுரைஞரும் தத்துவவாதியென வர்ணிக்கப்படுபவருமான அன்ரன் பாலசிங்கம். வெள்ளைக்காரப் பெண்ணென்று அவர் இங்கே குறிப்பிட்டிருப்பது அவரது மனைவி அடேல் பாலசிங்கத்தைத்தான். இவ்வளவுக்கும் பெடியளைக் கவனித்துக் கொள்வதற்காகத் தான் தலைமை தன்னை அனுப்பிவைத்திருப்பதாகவும் தம்பட்டமடித்திருக்கிறார் பாலசிங்கம். அன்ரன் பாலசிங்கத்தின் இந்தக் குறிப்புகள் தமிழ்ச்செல்வனை ஆத்திரமூட்டியிருப்பதாக வன்னித் தகவல்கள் கூறுகின்றன.

ஏனெனில், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஜோய் மகேஸ்வரனையும் அமெரிக்காவில் வசிக்கும் வி.ருத்ரகுமாரனையும் தவிர, இந்தத் தூதுகோஷ்டியில் சென்றவர்கள் தமிழ்ச்செல்வனும் கருணா அம்மானும்தான். எது எப்படியிருந்தாலும் மிகவும் மட்டமான ரசனை கொண்டவர் அன்ரன் பாலசிங்கமென வன்னியில் சிலர் குமுறுகின்றனர். முன்னரும் ஒரு தடவை இதே பாணியில் அன்ரன் பாலசிங்கம் அலட்டியிருக்கிறாரென்றும் அவர்கள் கூறுகின்றனர். "சந்திரிகா என்னை முதல் தடவை அழைத்தார். நான் போகவில்லை. இரண்டாவது, மூன்றாவது தடவைகளும் அழைத்தார். நான் போகவில்லை. எனக்கு அடேலைப் பார்க்கப் பயமாக இருந்தது" என்றார் பாலசிங்கம். மதியுரைஞருக்கு மட்டரகமான ரசனை.

## தலைமைகளைச் சாடும் முஸ்லிம் தலைவர்களும்

இலங்கையில் மிக அதிகமாக[…] கிளைவிட்டுப் பிரிந்த கட்சிகள், மரத்தை[…] சின்னமாகக் கொண்ட முஸ்லி[ம்] காங்கிரஸிலிருந்தே தோற்றம் பெற்றன[…] வென்றார் சாய்ந்தமருதுவைச் சேர்ந்[த] மௌலவி அப்துல் ஜப்பார். "முஸ்லி[ம்] சமூகத்தின் நலன் பேணுவதற்காகப் புதி[ய] கட்சிகள் தோற்றம் பெற்றால் பரவாயில்லை[…] ஆனால் கூட்டிக் கொடுப்பதற்காகவும், மாம[…] வேலை பார்ப்பதற்காகவுமே முஸ்லி[ம்] அரசியல்வாதிகள் இயங்குகிறார்கள் எனபத[…] போல முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் பசீ[ர்] சேகு தாவூத்தும் அமைச்சர் ரிசா[த்] பதியுதீனும் அண்மையில் பகிரங்கமாக[…] வார்த்தை மோதலில் ஈடுபட்டமை[…] சமூகத்தையே அவமானப்படுத்தும் செயல[…]" என்கிறார் மௌலவி ஜப்பா[ர்].

## எந்த நேரமும் மோதல் வெடிக்கலாம்

வடக்கிலும் கிழக்கிலும் நிலைமைகள் எந்த நேரத்திலும் வெடிக்கக் கூடிய ஆபத்து நிலவுவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரின்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் புலி இயக்கத் தலைவர்களையும் சந்தித்துப் பேசிய பின்னரே அவர் இவ்வாறு கூறினார். கோண்டாவிலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளருக்கும் வடக்கிலுள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்குமிடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பு கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் தாக்குதல்; கொழும்பில் தேடுதல்

வடக்கிலும், கிழக்கிலும் வன்செயல் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து கொழும்பில் வீதிச் சோதனைகள், வீடுகள், விடுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பந்தோபஸ்துப் படையினர் அதிகரித்துள்ளனர். எந்த நேரத்திலும் கொழும்பில் தாக்குதல் நடவடிக்கைகளை நடத்துதற்குத் தீயசக்திகள் முனையலாமென்று கிடைத்த புலனாய்வுத் தகவல்களையடுத்தே சோதனை நடவடிக்கைகளும் பந்தோபஸ்து முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். இதேவேளை வடக்கு, கிழக்கில் எழுந்துள்ள புதிய சூழ்நிலைகளையடுத்து இனவாத சக்திகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பந்தோபஸ்துத் தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா கண்டனம்

வடக்கில் படையினர் மீது புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இத் தாக்குதல் சம்பவங்கள் குந்தகமாக அமையலாமென்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. புலிகள் இயக்கம் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டுமென்றும் அரசாங்கம் வன்செயல்களைக் கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அமெரிக்கா கோரியுள்ளது.

## சமாதான முன்னெடுப்புக்கு கோடிக் கணக்கான ரூபா நிதி

இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை இரண்டரைக் கோடி குரோனர்கள் நிதியை நோர்வே புலிகளுக்கு நேரடியாக வழங்கியுள்ளது. இவ்வாறு நோர்வேயிலிருந்து வெளிவரும் 'நியூ டைம்ஸ்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### தொடரும் தாக்குதல்கள் யுத்தத்திற்கு வழி சமைக்கும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இரண்டு வாரங்களாக முரசு வெளிவராமையை முன் கூட்டியே அறிவிக்க முடியாமைக்கு வருத்தத்தைத் தெரியப்படுத்துகின்றோம். முரசு தாங்கிவரும் கருத்துக்களுக்கு முகம் கொடுக்க முடியாதவர்களின் சதி முயற்சிகள் பிரதான காரணம் என்றால், மறுபக்கத்தில் நாட்டில் பெய்து வருகின்ற அடைமழை காரணமாக பெரும்பான்மையான எமது வாசகர்கள் பாதிக்கப்பட்டு தஞ்சம் தேடித் திரிந்ததும் ஒரு காரணமாக அமைந்தது. கூடவே விலைவாசி உயர்வும் காகிதாதிகளின் விலையேற்றமும் கூட குறிப்பிட்டளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இத்தகைய சவால்களை எதிர்கொண்டு மீண்டும் அதே வேகத்தில் புதிய திட்டத்தோடு, புதிய அணுகுமுறையோடு முரசு தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்கிறது என்றால் அதற்குப் பிரதானமான காரணகர்த்தாக்கள் எமது இரும்பு நிகரான வாசகர்கள்தான். உங்கள் விசாரிப்புகளும், கருத்துக்களும், ஆதரவும் முரசை மீண்டும் எழுச்சிகொண்டு வீறுநடை போட வைத்துள்ளன. என்ற மகிழ்ச்சியை வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளும் நேரத்தில், காலத்தின் தேவை கருதி முரசின் விலையிலும் சிறு அதிகரிப்பைச் செய்ய வேண்டியுள்ளது. அதற்கமைய இரண்டு ரூபாவினால் விலை அதிகரிப்பும் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இரண்டு வாரங்களாக முரசு வெளிவராததால் வாசகர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு பெரிதும் மனம் வருந்துகின்றோம்.

முரசு வெளியீட்டப்படாத இரண்டு வார காலப்பகுதிக்குள்ளும் இலங்கையில் நடைபெற்ற முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகளும் அதன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற நிகழ்வுகளும் உடனடியாக ஒரு சமாதானச் சூழலை நாட்டில் ஏற்படுத்தும் எனக் கருத முடியாது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் கடந்த காலங்களைப் போலவே முடிந்த ஒரு வருடத்துக்குள் தாம் ஏமாற்றப்பட்டவிதம் பற்றியும் அதிருப்தியை பற்றியும் தெரிவித்துவிட்டு, அடுத்த ஆண்டு போரைத் தொடங்குவது என்று புதிரையும் போட்டுள்ளார். அதுபோலவே புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் புதிய அணுகுமுறையினூடாக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று தனது கொள்கை விளக்கவுரையில் தெரிவித்துவிட்டு தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகளான ஐக்கிய இலங்கை, இணைந்த வடகிழக்கு தமிழர்களின் தாயகம், தன்னாட்சி அதிகாரம் என்பவற்றை முற்று முழுதாக நிராகரித்து விட்டு, புதிய அணுகுமுறையென்று கூறுவது தமிழ் மக்களிடையே முகச் சுளிப்பை நிச்சயம் ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் போருக்கான விருப்பமும் ஜனாதிபதி மஹிந்தவின் பூஜ்ஜியத்திற்குத் திரும்பும் புதிய அணுகுமுறையும் ஒரு நேர்கோட்டில் சந்திக்கப்போவதில்லை. இது தெரிந்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யதார்த்தவாதி என்றும், அவருக்கு ஒரு கால அவகாசத்தை வழங்க வேண்டுமென்றும் கூறியிருப்பதானது உண்மையில் சமாதானத்தின் மீது அவர் கொண்டிருக்கும் விருப்பமாக இல்லாமல், முடிந்தால் ஜனாதிபதி மஹிந்தவை சர்வதேச சமூகத்திற்கு தோலுரித்துக் காட்டுவதற்கு எண்ணப்படும் கால அவகாசமாகவே பிரபாகரன் கருதுகின்றார்.

எனவே, ஜனாதிபதி மஹிந்தவின் சிந்தனையில் இனப்பிரச்சினை தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்களில் மாற்றங்களைச் செய்து பெரும்பான்மை மக்களின் விருப்பத்தைப் பெறும் அதேவேளை, சிறுபான்மை மக்களினதும் விருப்பத்தையும் பெற்றுக் கொண்டு சமாதான முயற்சிகளில் இறங்குவதே வரவேற்புக்குரியதாகும்.

இந்த நிலைப்பாட்டையே எமது நேச நாடான இந்தியாவும் வலியுறுத்தி வருகிறது. தென் பகுதியில் மாற்றங்களை வேண்டிநிற்கும் இதேவேளை, வடக்கில் புலிகள் படைத்தரப்பு மீது தாக்குதல்களை நடத்தி வருவது எஞ்சியிருக்கும் கொஞ்ச நம்பிக்கைகளையும் தகர்ப்பதாகவே இருக்கிறது. இவ்வாறான தாக்குதல்கள் தொடருமாக இருந்தால் அது ஒரு யுத்தத்துக்கே வாசல் திறந்து விடும் என்பதுவே மக்களின் கவலையாக உள்ளது.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## ஊரிலிருந்து....



ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையாளர் உத்தியோக பூர்வமாக அறிவித்ததை ஊரிலிருந்து தொலைக் காட்சியூடாக பார்த்துக் கொண்டிருந்தேன். மகிந்த வெற்றி பெற்றதை அறிவித்த ஆணையாளர் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் விரும்பினால் உரையாற்றலாம் என அழைப்பு விடுத்தபோது மூன்றாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சிறிதுங்க ஜெயசூரிய உரையாற்றினார். "நீங்கள் ஏராளமான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி வெற்றி பெற்றுள்ளீர்கள். அவற்றை நிறைவேற்றாவிட்டால் நாம் வீதிக்கு இறங்கி உங்களுக்கு எதிராகப் போராடுவோம்" என முகத்திற்கு நேரே கூறியபோது, மகிந்த புன்னகையுடன் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார். சர்வதேசமே இந்த ஜனநாயக செயலை பாராட்டுதல்களுடன் அவதானித்தது. அதுசரி வடக்கு கிழக்கில் யாருக்கு எதிராகப் போராட புறப்பட்டோமோ அந்தப் படையினரின் மீது கல்வீச்சு, கைக்குண்டு வீச்சு நடாத்த இருக்கும் சுதந்திரம். போராடப் புறப்பட்ட ஏகப்பிரதிநிதிகளைப் பற்றி மூச்சுவிடக்கூட இல்லை என்பதையும் சர்வதேசம் தற்போது நன்கு உணர்ந்துள்ளதை போடப்பட விருக்கும் கிடுக்கிப்பிடி சில நாட்களில் தெரியவரும்.

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# மாற்றங்களை வேண்டி நிற்கும் மஹிந்தவின் சிந்தனை

**நரன்**

அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்டபோதிலும், அவர் தனது கொள்கைப் பிரகடனத்தைக் கட்சியின் சார்பாக வெளியிடவில்லை. மஹிந்தவின் சிந்தனையென்று தனது பெயரிலேயே வெளியிட்டார். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாகச் சுதந்திரக் கட்சிக்குள்ளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள்ளும் நிலவிய முரண்பாடுகளின் காரணத்தாலேயே மஹிந்த தனது பெயரில் சிந்தனைகளை வெளியிட வேண்டிய தேவையேற்பட்டது. அதுமட்டுமல்ல, இந்த நாட்டின் எரியும் பிரச்சினையான இனப் பிரச்சினை தொடர்பாகச் சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கையான அதிகாரப் பகிர்வுக்கு நேர் முரண்பாடான தனது சிந்தனையை மஹிந்த வெளிப்படுத்தியிருந்தார். ஒற்றையாட்சிக்குள் இனப் பிரச்சினைத் தீர்வு மற்றும் வடக்கு - கிழக்கு சுனாமிக் கட்டமைப்புக்கு எதிரான அவரது கோட்பாடுகள் கட்சிக்குள்ளேயே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் தனிநபராக அவர் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. சிங்கள பௌத்த கடும் போக்குக் கொள்கையைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகளும் கோட்பாடுகளும் செயற்பாடுகளும் இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு குந்தகமாகவே அமையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சாதாரண ஏழை விவசாயிகள், தொழிலாளர் மத்தியில் அடித்தளத்தைக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.யின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கொள்கைகள், தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதுதான் அவர்களின் கொள்கையாக இருக்கிறது. ஒரு காலத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டது ஜே.வி.பி. என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. ஜே.வி.பி. ஒரு இனவாதக் கட்சியல்ல என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். கொம்பட்ட கிரி, அபிட்ட கெக்கிரி, (கொழும்புக்குப் பால், எங்களுக்கு கெக்கரிக்காய்) என்ற அடிப்படைக் கோஷத்தை முன்வைத்து பாதிக்கப்பட்ட கிராமிய இளைஞர்களை அணிதிரட்டி, இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை இந்த நாட்டில் நடத்தி படு பயங்கரமாக, தோல்விகண்ட பின்னர் ஜனநாயக வழிக்குத் திரும்பியதே ஜே.வி.பி. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஜே.வி.பி.யின் ஆயுதப் போராட்டங்களுக்கான வித்துக்கள் அல்லது அடிப்படைக் காரணங்கள் நியாயமானவை. ஆனால் அவர்களின் போராட்ட வடிவங்களும் உத்திகளும் அவர்கள் அணி திரட்டிய சக்திகளின் பலமும் தோல்விக்கான காரணிகளாக அமைந்தன. ஆனால் இந்த இளைஞர்களின் எழுச்சியினால் காணிச் சீர்திருத்தம், இளைஞர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகள் போன்றவற்றை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எடுக்க வேண்டிய நிலையேற்பட்டது. சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரக் காரணிகளே இப்பிரச்சினைகளின் பின்னணியாகத் திகழ்ந்தன.

இதைப்போன்றுதான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அடிநாதமான காரணிகள் அமைந்திருந்தன. தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், வேலைவாய்ப்பில், கல்வியில் பாரபட்சம், தமிழ் மொழி அமுலாக்கலில் காட்டப்பட்ட பாரபட்சம், தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவன்செயல்கள், ஆயுதப் படையினரின் அடாவடித்தனங்கள் ஆகியவைதான் விரக்தியுற்ற தமிழ் இளைஞர்களை ஆயுதங்களோடு அரசியல் அரங்கிற்கு வர உந்தியது. ஓர் அரசியல் தீர்வைத் தேடித்தான் அவர்கள் ஆயுதங்களை ஏந்தினார்கள். எனவே அவர்களை ஆயுதமேந்தத் தூண்டிய காரணிகள் நியாயமானவை.

தமிழீழ இயக்கங்களுக்கு மத்தியில் இடம் பெற்ற சகோதரப் படுகொலைகள், இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச நாடுகள் குறிப்பாக இந்தியா கொண்டிருக்கும் நிலைப்பாடு ஆகியவை தமிழீழ இயக்கங்களின் போராட்ட இலக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தோடு தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு, தமிழ் மக்களின் கௌரவமான தீர்வுக்காக உள்ளக சுயாட்சிக் கோரிக்கையை முன்வைக்க வேண்டியது காலத்தின் தேவையாகியது. இந்த யதார்த்த உண்மையை கணக்கிலெடுக்காமல், இந்தியா நீட்டிய நேசக் கரங்களில் காறித் துப்பியவர்களே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள். ஏனைய தமிழீழ இயக்கங்களை வேட்டையாடி, வேரோடும் வேரடி மண்ணோடும் கிள்ளியெறிந்தார்கள். இந்த நிலையில்தான் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்திருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு காண வேண்டி தேவை சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைமைகளுக்கு இருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இனப்பிரச்சினைக்கு கௌரவ மான தீர்வு காண்பேனென்று உறுதியளித் திருக்கிறார். இதற்காக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சி களோடு பேசி, ஓர் இணக்கப் பாட்டுக்கு வந்து, அதனடிப்படையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்றும் அவர் உறுதியளித்துள்ளார். இந்த இரண்டுமே இமாலயச் சவால்களாக இருக்குமென்பது உண்மை. திம்புப் பேச்சுவார்த்தையின்போது சிங்களத் தரப்பினரால் நிராகரிக்கப்பட்ட தமிழர் தரப்பு கோரிக்கைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளாக இன்றுவரையும் இருக்கின்றன. அதாவது தமிழினமோர் தனித்துவமான தேசிய இனம். பிரிக்க முடியாத வடக்கு, கிழக்கு தாயக இணைப்பு, சுய நிர்ணயக் கோட்பாடு ஆகிய இந்த மூன்றுமே முக்கிய மூலக் கோரிக்கைகளாகும். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தமக்குத்தாமே தம்பட்டமடித்துக் கொள்ளும் புலிகளாக இருந்தாலென்ன ஈ.பி.டி.பி.யாக இருந்தாலென்ன. தமிழர் விடுதலைக் கூட்டணியாகயிருந்தாலென்ன. ஏனைய சிறிய சிறிய தமிழ் குழுக்களாகயிருந்தாலென்ன இவை அனைத்துமே இந்த மூலக் கோட்பாடுகளை வலியுறுத்தி நிற்கின்றன. தமிழ் அரச கரும மொழியாக்கப்பட்டு கிட்டத்தட்ட இருபது வருடங்கள் நிறைவடையப் போகின்றன. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கொட்டாஞ்சேனையிலோ, வெள்ளவத்தையிலோ உள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் தமிழ் மகனொருவன் தனிச் சிங்களத்தில் தனது முறைப்பாட்டைக் கொடுக்க வேண்டிய நிலைதான் இன்னமும் நிலவுகின்றது.

எனவே வெறும் வார்த்தை ஜாலங்களால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. தென்னிலங்கையிலுள்ள சிங்கள சக்திகள் தமிழ் பேசும் மக்களின் அவலங்களையும் அபிலாஷைகளையும் சரிவரப் புரிந்து கொண்டு நெகிழ்ச்சித்தன்மையோடும் விட்டுக்கொடுப்போடும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரத் தவறினால் புலிகளின் அடாவடித்தனங்கள்தான் மேலோங்குமென்பதை கௌரவமாகத் தீர்வுகாண முனைபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஏற்கனவே திம்புவில்

**தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், வேலைவாய்ப்பில், கல்வியில் பாரபட்சம், தமிழ் மொழி அமுலாக்கலில் காட்டப்பட்ட பாரபட்சம், தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவன்செயல்கள், ஆயுதப் படையினரின் அடாவடித்தனங்கள் ஆகியவைதான் விரக்தியுற்ற தமிழ் இளைஞர்களை ஆயுதங்களோடு அரசியல் அரங்கிற்கு வர உந்தியது. ஓர் அரசியல் தீர்வைத் தேடித்தான் அவர்கள் ஆயுதங்களை ஏந்தினார்கள். எனவே அவர்களை ஆயுதமேந்தத் தூண்டிய காரணிகள் நியாயமானவை.**

நிராகரிக்கப்பட்ட அதே கோரிக்கைகளை மீண்டும் நிராகரிப்பதன் மூலம் ஆயுதப் போராட்டம் நடத்திவந்த ஓர் மண்ணின் பிரச்சினைகளுக்கு ஒரே இரவில் தீர்வு கண்டு விட முடியாது என்பது உண்மைதான். அதற்காக அந்த மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக் கூடாது என்று எந்த விதியும் கிடையாது. புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பும் தமது உறுதிப்பாட்டை சொல்லிலும் செயலிலும் காட்டாதவரை இந்தப் பிரச்சினைக்கு நீடித்த தீர்வு காணப்படமுடியாது என்பதும் உண்மையே.

பிரதமர் இந்திரா காந்தியை சீக்கிய காலிஸ்தான் பிரிவினைவாதிகள் கொன்றதையடுத்து மூன்றே மூன்று வருடங்களுக்குள் காலிஸ்தான் கிளர்ச்சி அடக்கியொடுக்கப்பட்டது. ஆயுத முனையிலும் அரசியல் முனையிலும் இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. சீக்கிய காலிஸ்தான் பிரச்சினையை அரசியல் முனையில் கையாண்டவர் பிரபல இந்திய இராஜதந்திரி ஜி.பார்த்தசாரதியென்பது குறிப்பிடத்தக்கது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டவர் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மரணப் பிடிவாத நிலைப்பாட்டின் காரணமாக பார்த்தசாரதி முன்வைத்த பின்னிணைப்பு - சி யோசனைகள் தூக்கியெறியப்பட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூட இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஓர் அர்த்தமுள்ள ஆரம்பமாக அமைந்திருக்கக் கூடும். ஆனால் ஆட்சியிலிருந்த ஜனாதிபதி பிரேமதாஸாவும் புலி தலைவர் பிரபாகரனும் செய்து கொண்ட கூட்டு நடவடிக்கை காரணமாக இந்தியா களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. இந்தியப் பிரதமரும் கொல்லப்பட்டார். இலங்கைப் பிரச்சினையில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திலேறிக் கொண்டது.

புதிய ஜனாதிபதி, புதிய கொள்கை, புதிய அணுகுமுறை, புதிய தீர்வு என்ற தனது கொள்கையைச் சரிவர அமுல்படுத்த வேண்டுமானால் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்துத்தானாக வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்முயற்சிகள் தெற்கில் மேற்கொள்ளப்படத் தொடங்கியதுமே வடக்கிலும் கிழக்கிலும் வன்செயல்கள் வெடிக்கத் தொடங்கியமை ஒன்றும் தற்செயலானதல்ல. பேச்சுவார்த்தையை விரும்பாதவர்கள் குழப்பத்தைத் தூண்டுகிறார்கள். அப்பாவிகளைச் சுட்டுக்கொன்று விட்டு மாற்றுத் தரப்பினர் மீது பழிகளைச் சுமத்துகிறார்கள். இதுதான் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் நடைபெற்ற இரட்டைக் கொலைகளின் சூட்சுமமாகும். இல்லாத இயக்கமொன்றின் பெயரால் ஹர்த்தாலுக்கும் கடையடைப்புக்கும் அறைகூவல் விடுத்து விட்டு டயர்களை எரித்தும் கிரனைட்டுகளை வீசியும் நடைமுறைப்படுத்தியவர்களின் அடாவடித்தனங்கள் இனியும் தொடரவே செய்யும். கிழக்கில் முஸ்லிம்கள் கொல்லப்படுவதும் அதனெதிரொலியாக தமிழர்கள் கொல்லப்படுவதும் தீர்வைத் தடுக்க முயலும் தீய சக்திகளின் செயல்களே என்பதையும் தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை விரும்பாத தீய சக்திகள் இரத்தத்தை உறிஞ்ச காத்துக் கிடக்கின்றன. சிங்கள பேரினவாதிகளையும் தமிழ் பிரிவினைவாதிகளையும், முஸ்லிம் இனவாதிகளையும் சரிவரக் கையாள வேண்டும். இல்லையேல் தீர்வின் தோல்வி தொடர் கதையாகி விடும். புதிய ஜனாதிபதி இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கில் நிலைமைகளைக் கையாள அரசாங்கம் தவறிவிட்டதென்று சர்வதேச மன்னிப்புச் சபை சரியாகவே குற்றம் சாட்டியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் யுத்தம் மூளுமென்று கூறிக்கொண்டு யுத்த முஸ்தீபுகளில் குடிகள் ஈடுபட்டுள்ளதை தற்போதைய சம்பவங்கள் நிரூபிக்கின்றன. நீர்வேலியில் அப்பாவிப் பொதுமக்கள் இருவரை புலிகள் இயக்கமே சுட்டுக் கொன்று விட்டு படையினர் மீது பழியைப் போட்டுவிட்டு தற்போது தொடர்ச்சியாக படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தப் புதிய நிலையைக் கையாள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தவறினால் தென்னிலங்கையில் குழப்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். ரணில் விக்கிரமசிங்கா புலிகளோடு செய்து கொண்ட ஒப்பந்தம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக புலிகளின் சண்டித்தனத்திற்கும் இடம்விட்டதாலேயே மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டிய நிலையேற்பட்டது. ■

# விழித்தெழும் மலையகமும் வீழ்ச்சிபெறும் தலைமைகளும்

மலையக அரசியல் தலைமைகளின் அரசியல் குத்துவெட்டுகளுக்குள் கட்டிக் காக்கப்பட்டு வந்த மலையக அரசியல் பாரம்பரியம் இப்போது தனது விலங்கை உடைத்துவிட்டுள்ளது. இதுவரை காலமும் தோட்டத் தொழிலாளர்களை வெறுமனவே சந்தா கட்டும் இயந்திரங்களாகவே தோட்ட முதலாளிகளும் அரசியல் தலைமைகளும் நடத்தி வந்துள்ளனர். இந்த உண்மை ஒவ்வொரு தொழிலாளிக்கும் அப்பட்டமாகத் தெரிந்தபோதும் எதிர்த்துக் கேள்வி கேட்க கடுமையாகச் சிந்தித்தனர்.

தமது செயற்பாடுகள் குறித்த விமர்சனங்களையும், தவறான நடவடிக்கைகளையும் எவராவது சுட்டிக்காட்டினால் அவரது கருத்தை ஜீரணிக்க முடியாத முதலாளிகளும் அரசியல் தலைவர்களும் அப்பாவித் தொழிலாளர்களைப் பலி தீர்த்துக் கொள்வதே அதற்குக் காரணமாக இருந்தது.

பொருளாதாரத்திலும், கல்வியிலும் மிக மோசமான பின்னடைவைக் கண்டிருக்கும் மலையக மக்கள், அன்றாட உழைப்பும் அதன் ஊடான உயிர்வாழும் போக்கும் சாப்பாடும் என்பதுமே வாழ்க்கை என்று தமது வட்டத்தைச் சுருக்கிக் கொண்டு வாழப் பழகினர். இதுகூட அந்த மக்கள் ஏமாற்றப்படுவதற்கு வாய்ப்பை வழங்கியது. இந்தப் போக்குக்கு மக்களும் பழக்கப்பட்டுப்போய் விட்டனர். அரசியல் தலைமைகளும் அதையே பழக்கமாக ஆக்கிக்கொண்டனர்.

அரசியல் தலைமைகள் தாம் சார்ந்த மக்களை வறுமைக்குள்ளிருந்து மீட்டு அபிவிருத்தியை நோக்கி வழி நடத்துவதென்ற வரையறை எல்லா அரசியல் தலைமைகளும் முற்றுமுழுமையாகச் செய்வதில்லைத்தான். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு எப்போதும் இதுவாகவே இருந்து வந்துள்ளது. எதிர்காலத்திலும் இருக்கும். இதுதவிர அரசியல் தலைமைகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டங்களில் நன்கு சிந்தித்து சாதக பாதகங்களை ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கின்ற முடிவானது, தம்மை நம்பியிருக்கின்ற சமூகத்தின் அரசியல் தேவையை நிவர்த்திக்கக் கூடியதாகவும், மத்திய அரசின் பங்கீடுகளைப் பூரணமாக அனுபவிக்கக் கூடியதுமானதாகவும் இருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் வெறும் அரசியல் லாபங்களையும் தமது பதவி மோகங்களையும் மட்டும் கவனத்தில் கொண்டு, கட்சிகளை நடத்திக் கொண்டு வாய்ச் சவடால் காட்டிக் கொண்டிருப்பது மக்களின் நலனுக்கு விரோதமானதாகவே இருக்கும். இது ஒரு வகையில் அந்தச் சமூகத்திற்குச் செய்யும் துரோகமாகவும் இருக்கும். இவ்வாறான ஏமாற்றங்கள் தொடர்கின்றபோது ஏதாவது ஒரு புள்ளியிலிருந்து மாற்றத்துக்கான எழுச்சி வெடித்துக் கிளம்பும். இந்த நிலையே தற்போது மலையகத்தில் தோன்றியுள்ளது.

தமது செயற்பாடுகள் குறித்த விமர்சனங்களையும், தவறான நடவடிக்கைகளையும் எவராவது சுட்டிக்காட்டினால் அவரது கருத்தை ஜீரணிக்க முடியாத முதலாளிகளும் அரசியல் தலைவர்களும் அப்பாவித் தொழிலாளர்களைப் பலி தீர்த்துக் கொள்வதே அதற்குக் காரணமாக இருந்தது

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய பிரதான கட்சிகள், மலையக மக்களின் முழுமையான வாக்குப் பலத்தில் அரசியல் நடத்தும் கட்சிகள் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. இந்தக் கட்சிகளின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பதும் அவர்களுக்கே தெளிவு. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இந்தப் பிரதான கட்சிகள் எடுத்த முடிவு பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியது. இன்னும் கூட அந்த விமர்சனங்கள் ஓய்ந்தபாடில்லை. ஏனையவர்களின் விமர்சனங்கள் ஒரு பக்கமாக இருக்க, இந்தக் கட்சிகள் தமது கருத்துக்களை அல்லது விமர்சனங்களை தெரிவித்து வருவதே மேற்படிக் கட்சிகளுக்கிடையில் கசப்பை ஏற்படுத்திவருகிறது.

வெற்றி வாய்ப்பு எவ்வாறு அமையும் என்பதை விடவும், முதலாளிகளின் முகத்துக்கு அஞ்சி மலையகக் கட்சிகள் தமது முடிவை எடுத்தன என்றும், புலிகளின் ஆதரவைப் பெற்றுத் தருவதாக மண்குதிரையில் ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றித் திரிந்த சில கட்சிகளுமே இந்த நிலைக்குக் காரணம் என்றும் ஏற்பட்ட தோல்வியையும், தமது தவறான கணிப்பீட்டின் விளைவையும் ஏற்றுக்கொண்டுள்ளது மேல்மாகாண மக்கள் முன்னணி விடுத்திருந்த செய்திக் குறிப்பு வரவேற்கத் தக்கதாகவிருந்தது. ஏனெனில் தவறு சில சமயங்களில் ஏற்பட்டு விடுவதுண்டு. அதை ஏற்றுக் கொண்டு என்னென்ன காரணிகள் தவறுக்குக் காரணமாக அமைந்தன என்பதை ஆராய்ந்து அதையும் திறந்த மனதோடு வெளிப்படுத்துவதற்கும் ஒரு தற்துணிச்சல் நிச்சயம் வேண்டும். மேல் மாகாண மக்கள் முன்னணியின் இந்தப் போக்கைக் கண்டிப்பதற்கும் பூசி மெழுகுவதற்கும் முற்பட்டு மற்றக் கட்சிகள் நடந்து கொண்ட விதமானது நகைப்புக்கிடமானதாகவும் வியப்பாகவும் உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்குப் பின்னர் வெளியாகி வரும் தகவல்களில் கோடிக்கணக்கான பொருட்கள் பதுக்கப்பட்டதும், அது பிடிபட்டதும் குறித்து வெளியான செய்தி பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. தெரிய வந்ததுவே இது என்றால் இந்த மக்களுக்கான இன்னும் எத்தனை கோடிகள் யார் யாரின் சட்டைப் பைகளுக்குள் சுருட்டப்பட்டதோ. இவர்கள் தான் அந்தத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைத்துவங்களின் அரசியலா என்று அந்த மக்கள் இப்போது சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒருவேளை அவர்கள் எதிர்பார்த்த அரசியல் மாற்றம் ஏற்பட்டிருந்தால் இந்தப் பதுக்கலும் அம்பலத்துக்கு வராமல் போயிருக்கலாம். ஆக தாம் நடத்தும் அநியாயங்கள் அம்பலத்துக்கு வராதவாறு யார் ஆட்சிக்கு வரவேண்டும். என்பதுவே அந்த அரசியல் கட்சிகளின் பிரதான நோக்கமாகவுள்ளது.

"ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னர் புட்டுவத்தோடு (கதிரையோடு) வந்தோம், இப்போது யானை முகத்தோடு வருகிறோம்" என்று பிரசாரம் செய்தவர்கள் இப்போது யானை முகத்திலிருந்து விடுபட்டு எப்படி வெற்றிலை முகத்தைப் பொருத்திக் கொள்வது என்று பேச்சுக்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கட்சிகளின் கட்சித் தாவல்கள் இந்தப் புதிய அரசாங்கத்தில் எடுபடவில்லை. காலம் காலமாக காற்றுள்ள பக்கம் சாய்ந்து அமைச்சுப் பொறுப்புகளைப் பெற்று பழகிப்போனவர்களுக்கு இந்தமுறை காற்று எதிர்த்திசையில் வீசத் தொடங்கியுள்ளது. எந்த மக்களின் வாக்குகளை நம்பி அரசியல் நடத்துகிறார்களோ, அந்த மக்களுக்கு பிழையான பாதையையும், அரசியல் ஏமாற்றுத்தனத்தையும் செய்து கொள்வதற்கு அமைச்சுப் பொறுப்புகளும் கூடுதல் வாய்ப்பை வழங்கிவந்தன. இவற்றை கவனத்தில் கொண்டதாலோ அல்லது செய்த நம்பிக்கைத் துரோகத்தாலோ தற்போதைய புதிய அரசானது மலையகத்தில் புதிய தலைமைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது. இதற்குச் சாதகமாக மலையக பிரதான கட்சிகளின் பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்து கட்சிகளிலிருந்து வெளியேறி சுயமாக அரசோடு

அலசுவது
- மதியூகி -

தொடர்புகளை ஏற்படுத்தி இவ்வளவு காலமும் ஏமாற்றப்பட்டு வந்த மலையக மக்களுக்கு சேவை செய்ய சில முக்கியஸ்தர்கள் துணிந்துவிட்டனர். பிரதானமான கட்சிகள் ஒரே குடையின் கீழ் நின்றபோதும் துணிச்சலோடு பிரிந்து தனித்து ஜனாதிபதித் தேர்தலில் சரியான அரசியல் முடிவை எடுத்திருப்பதானது எதிர்காலத்தில் மலையக மக்களின் வாழ்வில் புதியதொரு விடியல் புலரும் என்ற நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. இந்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்காமல் புதிய எழுச்சியாளர்கள், புதிய தலைமைகளாக தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதேவேளை மலையக மக்களும் ஏற்கனவே ஏமாற்றியவர்களை இனங்கண்டு கொள்வதோடு புதிய தலைமைகளும் ஏமாற்றுக்காரர்களாக மாறிவிடாதபடி விழிப்போடு நிலைமைகளையும் வேலைத் திட்டங்களையும் அவதானித்து நடக்க வேண்டும். இல்லையெனில் ஏமாற்றுத் தலைமைகளின் ஏவலுக்கு எடுபட்டு மண்குதிரைச் சவாரி செய்வதோடு பரம்பரையாக இதே வாழ்க்கைக்குள் கிடந்து உழல வேண்டியதுதான்.

# அதிரடி அய்யாத்துரை



**அதிகாரத்துக்கான** எலக்ஷன் முடிஞ்சு நாளாயிட்டுதுதான் எண்டாலும் அந்தக் கால கட்டத்தில என்னென்ன சூட்சுமங்கள் நடந்த தெண்டது இப்பதானே வெளியால கிளம்புது. யானைக் கட்சித் தலைவரிற்றப் போய் எங்கட கூத்தமைப்பு எம்.பி. பிரேமமான சந்திரனார் பிரியாமான ஒரு கோரிக்கையை முன்வச்சிருக்கார். அது என்ன தெரியுமோ. அதிகாரத்துக்கான எலக்ஷனில உங்களுக்கு சப்போர்ட் பண்ணச் சொல்லி ரெண்டெழுத்தாரிற்றையும் கேக்கிறன். சனத்திற்றையும் சொல்லுறன், அதுக்குக் கைமாறா நீங்கள் அடுத்து வருகிற பார்ளிமெண்ட் எலக்ஷனில எனக்கு ஒரு சீட் தரவேணுமெண்டு கேட்டவராம். அதுக்கு யானைக் கட்சித் தலைவர் கையெடுத்துக் கும்பிடாத குறையா போன தடவை ஆட்சியில இருக்கேக்க கருணாவை பிரிச்சதால தான் இப்ப வில்லங்கமாக் கிடக்கு. அதில இன்னொரு கருணா வேணாம் எண்டாராம். பாவம் அசடு....வழிய வழிய பிரேமமான சந்திரனார் திரும்பினவராம். அப்பிடியெண்டால் அடுத்த பார்ளிமெண்ட் எலக்ஷனில உவரின்ர சீட் உவருக்குக் கிடைக்காதெண்டதை கன்போர்ம் பண்ணுறாராக்கும்.

**கூத்தமைப்பு** எம்.பி.மாரைப் பற்றி ஏதாவது ஒரு மெசேஜ் கிடைச்சுக் கொண்டுதானுங்கோ இருக்கு. எங்கட செவாலியே லிங்கத்தார் ஊருக்குள்ள சண்டியன் மாதிரித்தான் திரியிறவராம். உவரின்ர போக்கை அவதானிச்ச ரெண்டெழுத்தார் உவரின்ர அசைவை அவதானிச்சிருக்கினம். அப்பதான் தெரிஞ்சிருக்கு செவாலியர் அண்டை நாட்டுக்கார தகவல் துருவி களோடை ரொம்பக் குளோசா குச்சுப்புடி ஆடுறார் எண்டது. உந்த டபிள் கேம் இப்ப கொஞ்ச நாளாகத்தான் ரெண்டெழுத்தாருக்குத் தெரிய வந்திருக்குதாம். இப்பவெல்லாம் லிங்கத்தார் மேல தங்கட கழுகுக் கண்ணை ஒட்டி வச்சிருக்கினமாம். எண்டாலும் லிங்கத்தார் என்ன ஏப்ப சாப்பையே? இல்லையே. உவையின்ர கழுகுக் கண்ணுக் குள்ளையும் ஒரு குச்சியை விட்டு ஆட்டிப்போட்டு அண்டை நாட்டு துருவியளோடை தொடர்பை மெயின்டெயின் பண்ணிக் கொண்டுதான் இருக்கிறாராம். புகழ் பாடுறவையெல்லாம் பின்னால புதை குழி வெட்டிக் கொண்டிருக்கினமெண்டதை புரிய வேண்டியவை புரிஞ்சு கொண்டால் சரிதான்.

சூப்பர் ஸ்டார் ரஜினி ஒரு தடவை இன்டர்வியூவில சொன்னவர், 'எதிரிகளை நான் பாத்துக் கொள்ளுறன். நண்பர்களிட்டை இருந்து என்னைக் காப்பாத்து ஆண்டவா' எண்டு. அது எல்லாருக்கும் பொருந்தும்போல.....

**புதுசா** அதிகாரத்துக்கு வந்திருக்கிறவர் தன்னுடைய சிந்தனையை அமுல்படுத்திறதில ரொம்பவும் ஆர்வமாகத்தான் இருக்கிறார். அவரின்ர சிந்தனையில நாட்டு மக்களுக்கு நன்மை கிடைச்சால் அது நல்லதுதான். ஆனால் பாருங்கோ அவரின்ர சிந்தனையில தமிழ் மக்களின்ர உந்தப் போராட்டத் துக்கு வச்சிருக்கிற சிந்தனை தானுங்கோ சிந்திக்க வைக்குது. எதை எதையெல்லாம் பெற்றுக்கொள்ளுறதை இலக்காக வச்சுக் கொண்டு போராட்டத்தை நடத்திச்சினமோ அதுகளையே நிராகரிச்சுப்போட்டு புதிய சிந்தனை ஒண்டின்ர மூலமா தீர்வு காண்பன் எண்டிறார். உவர் சொல்லிறதைப் பார்த்தால் திரும்பி முப்பது வருஷத்துக்குப் பின்னுக்குத் திரும்ப பேச்சுவார்த்தைகளை பூஜ்ஜியத்தில இருந்து ஆரம்பிக்க வேணும்போல இருக்கு. பேச்சுவார்த்தையெண்டது பின்னோக்கிப் போறதா இல்லாம முன்னோக்கிப் போறதா இருக்கவேணுமெல்லோ. அப்பிடியில்லாம புதிய அணுகுமுறை எண்டதுக்காக அடிப்படையை நிராகரிச்சுக் கொண்டு திணிக்க ஏலாதெண்டதை அவர் புரிஞ்சா சரிதானுங்கோ. இல்லையெண்டால் உந்த முயற்சியில உவரும் தோத்துப் போயிடுவாரெண்டதுதான் எனக்குக் கவலையாக் கிடக்கு.

**நோர்வேக்காரர்** இதுவரையும் நோகாம மத்தியஸ்தம் செய்து கொண்டிருந்திச்சினம். அதிலையும் ரெண்டெழுத்தாரோடை கொமினிகேஷனை சரியா வச்சுக் கொள்ள வேணுமெண்டதுக்காக அவை கேக்கிறதெல்லாத்தையும் நேரடியாவும் செய்திச்சினம். மறைமுகமாகவும் செய்திச்சினம். அவையின்ர தட்டிக்கொடுப்புதான் போர் நிறுத்த ஒப்பந்தம். உப்பிடி ஒவ்வொரு நாளும் ஒரு பிணத்துக்கு மேல ஒப்பாரி வச்சுக் கொண்டிருக்கெண்டது தெரியாதவைக்குப் புது விஷயம். உந்த லட்சணத்தில உந்த புதிய அதிகாரத் தரப்பாரோடையும் ஒரு டீலைப் போட்டு மெக்ஷிமம் நோபல் பரிசுக்கு ஒரு ரையைப் பண்ணிப் பாப்பம் எண்டு புதுசா தமிழ் மக்கள் அதிகாரத்துக்கு வந்தவருக்கு வாழ்த்துமாப் போல வாழ்த்திச்சினம். உவையளின்ர வாழ்த்தை கணக்கில எடுக்காத மஹிந்தமானவர் உவையின்ர தலை யீட்டைப் பற்றி தன்ர கொள்கை உரையில ஒரு வார்த்தை தன்னும் பேசாம விட்டிட்டார். அதாலை அழையா விருந்தாளியா நாட்டுக்குள்ள வாரதுக்கு எரிக்கானவருக்கு கொஞ்சம் கூச்சமாக இருக்கெண்டு சொல்லினம். குடுத்த மரியாதையைக் காப்பாத்தியிருந்தால் உந்த மரியாதைக்கேடு வந்திருக்குமோ? இனியாச்சும் யோசிச்சு நடந்திச்சினமெண்டால் சரிதான்......

**யாழ்.** பாடிற நாட்டில போன வாரம் ரெண்டு ரெண்டெழுத்தார் சுடுபட்டு இறந்திச்சினமெல்லோ, அவையை முதலில விவசாயிகள் எண்டுதான் சொல்லிச்சினம். பிறகு பிறகு நடந்த பரபரப்பும், குண்டுவெடிப்பும், ஹர்த்தாலும் தான் அவை ரெண்டெழுத்தார் தான் எண்டதையும் குடாநாட்டில அவ்வப்போது இனந்தெரியாதவையாய் மாறிப் போறவை எண்டும் எங்கட குதிரை கஜேந்திரனார் பெடியளிட்டச் சொல்லித்தான் உந்தப் பேராட்டங்களை நடத்தினவராம். உவர் சொன்னதைக் கேட்ட பெடியள் அப்புடியெண்டால் ரெண்டெழுத்தார் ஏன் தங்கட ஆக்கள் தான் எண்டு சொல்லாம இருக்கினம் எண்டு கேக்கவும், அவைதான் பாதுகாப்பு இல்லையெண்டு தங்கட ஆக்களை தங்கட கட்டுப்பாட்டுக்குள்ள வாபஸ் வாங்கிட்டம் எண்டு சொன்னவை அப்படியெண்டால் இவை எப்படி அரச கட்டுப்பாட்டுகுள்ள இருந்திச்சினமாம் எண்டு யாரும் யோசிச்சுப் போடுவினம் எண்டுதானாம் அவை உரிமை கோர மாட்டினமாம். உரிமை கோராட்டி என்ன உதுக்குரிட்டன் குடுப்பினம் பாருங்கோ எண்டாராம். அவர் சொன்னமாதிரியே கோண்டாவில கிளைமோர் வச்சு ஆறு படைத்தரப்புக்கு விஸா குடுத்திச்சினம். உந்த ஒப்பந்த காலத்தில நடந்த பெரிய தாக்குதல் இதுதானுங்கோ... குதிரையார் யார் யாருக்கு குறி பார்க்கினம் எண்டதுகளை நல்லாத்தான் குறி சொல்றாருங்கோ. ம்... அதுக்கெல்லாம் ஒரு யோகம் வேணுமுங்கோ... படிக்கிற பெடியள்தான் குதிரையாரின்ர பின்னால குறி கேட்டுக்கொண்டு படிப்பை வீணடிச்சுக் கொண்டு திரியினம்.

**அதிகாரத்துக்கான** எலக்ஷனில யார் வெல்லுவினம் எண்டு எஸ்.எம்.எஸ் கருத்துக் கணிப்பு நடத்தி மூக்குடைபட்ட எஸ்எம்.எஸ். மகாராஜா இருக்கிறாரெல்லோ அவருக்கு திரும்பவும் ஒரு முக்கிய சப்ஜெக்ட் கிடைச்சிருக்கு அதுக்கு என்ன ரிசல்ட் வருமெண்டு ஒரு எஸ்.எம்.எஸ். போட்டி நடத்தினார் எண்டால் சூப்பரா இருக்கும். அதென்ன முக்கிய சப்ஜெக்ட் எண்டு யோசிக்கிறியளோ, மலையகத்தில இருந்து ஒரு சேவல் தனக்கு மினிஸ்டர் பதவி வேணுமெண்டும் பழைய நட்பைப் புதுபிச்சுக் கொள்ள தனக்கு விருப்பம் எண்டும் தூதுக்கு மேல தூது அனுப்பிக் கொண்டிருக்காம் இதையே புதிய அதிகார கூட்டுக்குள்ள சேவல் போகுமா போகாதா எண்டு கேட்டு ஸ்பேஸ் விட்டு எஸ்.எம்.எஸ் அனுப்புங்கோ எண்டு கேட்டால் எப்புடியிருக்கும்? எஸ்.எம்.எஸ். மகாராஜா கொஞ்சம் திங் பண்ணிப் பாருங்கோ ப்ளீஸ்.

# ஓராண்டு நினைவுகளில்

மண்ணில் | விண்ணில்

12 03 1942



01 12 2004

## திருமதி எஸ். துங்கம்மா

குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் தெய்வமே! தாங்கள் இறையடி சேர்ந்து. ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது. உங்கள் பிரிவால் துயருறும்.

அன்புக் கணவன், மகன்மார், மருமக்கள்மார். மகள்மார், மருமகன்மார். பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

தகவல் : மகன் ய. ஆறுமுகம்பிள்ளை, தில்லையடி, புத்தளம். தொலைபேசி:- 0322265617

## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
முரசு விமர்சனம்.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:


| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,700 | ரூ.1,850 | ரூ.950 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,300 | ரூ.1,650 | ரூ.850 |
| உள்ளூர் | ரூ. 1,350 | ரூ.675 | ரூ.350 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk

## இருக்கு உதவுங்கள்



கொழும்பு - 14 கிராண்ட்பாஸ் இல. 64/4 சென்ஜோசப் வீதியைச் சேர்ந்த பாத்திமா ரிகாஸா என்ற 4 வயது குழந்தை இலியுகேமியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் இச் சிறுமிக்கு கடந்த வருடம் பரோபகாரிகளின் உதவியுடன் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்தியாவில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் தற்போது இந்த சிறுமிக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இதற்கு இலங்கை ரூபாவில் 5 லட்சம் தேவையென இந்திய மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இக் குழந்தைக்கு உதவ விரும்புவோர் ஹற்றன் நஷனல் வங்கியின் கிராட்ண்பாஸ் கிளையில் 0460406617SA சேமிப்பு கணக்கு இலக்கத்திற்கு பண உதவியை வழங்குமாறு வேண்டி கொள்கின்றனர்.


## சிங்கப்பூரில் தங்குமிட வசதி


சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இலவச போக்குவரத்து, வசதி வழிகாட்டி (guide) வசதி. மேலதிக விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியான அப்புலிங்கம்

கை தொலைபேசி எண் : 0065 97514941
தொலை நகல் (Fax) : 0065 64816144

LINGAM WEDDING SERVICES
153, Jalan Jarak, , Singapore 809281


# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 05 1925



மறைவு 30 11 1990

## அமரர் எஸ். தேவசகாயம்

முன்னாள் தொழில்நுட்பவியலாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம், வைத்தியப் பிரிவு

கொழும்பைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

அன்பான தந்தையே! அணையா ஒளிவிளக்கே!
பக்தியில் உத்தமராகவும்
அன்பில் சிகரமாகவும்
பண்பில் சிறந்தவராகவும்
அறிவில் மேன்மையானவராகவும்
கடமையில் நேர்மையானவராகவும்
பேச்சில் சிறந்தவராகவும்
மனைவிக்கேற்ற கணவராகவும்
பிள்ளைகளுக்கேற்ற தந்தையாகவும்
வாழ்ந்த எம் தெய்வத் தந்தையை ஆண்டுகள் பதினைந்து
என்ன, எம் உயிருள்ள வரையிலும் மறவோம் மறவோமே!

*உங்கள் பிரிவால் துயருறும்*

*பாசமிகு மனைவி சாந்தம்மாள் (கனடா), பிள்ளைகள் கமலா (இந்தியா) பிலோமினா, வசந்தி (இலங்கை) ராஜன் (பிரான்ஸ்), மைக்கல், ஏர்னஸ்ட், மாலினி, சுமதி (கனடா), மருமக்கள் ஸ்டீபன் (இந்தியா), செல்வராஜா, தொமஸ் ரட்னம் (இலங்கை), திலகா (பிரான்ஸ்), Ann ரொசானி (கனடா), கிருபா, சிவா (கனடா), பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் உற்றார் உறவினர்கள்.*

*தகவல் : ஏர்னஸ்ட் குமார் (கனடா).*


## லண்டன், பாரிஸ்

இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்.

**டாக்டர் ஆர். தியாகராஜன்**
DHMS. AHMA (UK)

01.12.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்ஸிமா (Eczema) மலட்டுத் தன்மை, பேறின்மை (Strillity) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்கவிளைவு களற்ற (No Side effects) முறையில் அனைத்து வியாதி களுக்கும் அளிக்கவல்லது.


முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி
02087678004 - 07833341693
E-mail : homoeocare@rediffmail.com
Web : www.homoeocare.com

இந்தியா - 0091-431-2432946
இலங்கை - 0094-777602513
டிசம்பர் மாத இலங்கை விஜயம்
23.12.2005 முதல் 29.12.2005 வரை









## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்

# தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு

**கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு. கிழக்கில் எவ்வாறு தமிழ் மக்கள் வாக்களிக்காமல் புலிகள் இயக்கத்தினரால் தடுக்கப்பட்டார்கள் என்பது குறித்து பிரபல அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான டி.பி.எஸ்.ஜெயராஜ் 'சண்டே லீடர்' பத்திரிகையில் கடந்த 20.11.2005 எழுதிய கட்டுரையிலிருந்து முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதை ஏன் புலிகள் விரும்பினார்களென்பதும் அதற்காக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்காதவாறு தடுத்து பலாத்காரப் பகிஷ்கரிப்பை எவ்வாறு திணித்தார்கள் என்பது குறித்தும் கட்டுரையாளர் இங்கு விளக்குகிறார்.**

இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களில் பெருந்தொகையான பிரிவினரை வாக்களிக்காமல் தடுத்ததன் மூலம் புலிகள் தமது இருப்பை வெளிக்காட்டியுள்ளனர். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று புலிகள் தம்மைப் போலித்தனமாக அமைத்துக் கொண்டபோதிலும், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பு அல்லது பகிஷ்கரிப்பு என்று கூறிக்கொள்வதை நடைமுறைப்படுத்துவதற்குப் புலிகள், அப்பாவி மக்களுக்கெதிராகப் பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கட்டவிழ்த்து விட வேண்டியேற்பட்டது. புலிகள் தமது வன்செயல் பயமுறுத்தல்கள் மூலம் பல தமிழர்களை வாக்களிக்காமல் தடுத்த போதிலும், பல இடங்களில் முற்றுமுழுதான பகிஷ்கரிப்பை அவர்களால் ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது. பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுக்கும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் பரவலாக விநியோகிக்கப்பட்ட அதேவேளை, வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னதாகவே ஓர் ஒழுங்குமுறையான வன்செயல் மற்றும் பயங்கரவாத உத்திகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான பல குண்டு வெடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. வாக்களிப்புக் காலத்தில் ஈ.பி.டி.பி.யின் ஐந்து கட்சிக் காரியாலயங்கள் மீது கிரனைட்டுகள் வீசப்பட்டன. பொலிஸ் ரோந்து அணிகள், இராணுவக் காவல் நிலைகள், பொலிஸ் வாகனங்கள் ஆகியவற்றின் மீது குண்டுகளும் கிரனைட்டுகளும் வீசப்பட்டன. இந்துக் கல்லூரி மைதானத்தில் இளைஞரொருவர் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பில் வாக்காளர் அட்டைகளைக் கொடுக்க மறுத்தார் என்று கூறப்படும் உப தபாலதிபரான பெண்மணியொருவர் மிலேச்சத்தனமாக வெட்டிக் கொல்லப்பட்டார். ஒரு பயங்கரமான சூழல் நிலவியது. இந்தப் பயங்கரம் தேர்தல் தினத்தன்று அதிகாலையிலிருந்து தொடர்ந்து நிலவியது. அரசாங்க அலுவலகங்கள், வாக்குச் சாவடிகள், பாதுகாவல் நிலைகள், வாகனங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. முக்கிய சந்திகளில் டயர்களும் பனையோலைகளும் எரிக்கப்பட்டன. வீதித் தடைகளும் போடப்பட்டன. வாக்களிக்க வருபவர்களைத் தேடி இளைஞர்கள் அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களால் நியமிக்கப்பட்ட முகவர்கள், வாக்காளர்களை மிரட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டார்கள். வாக்களிக்க வருபவர்களை இனங்கண்டு பின்னர் அவர்களைப் பழிவாங்குவதற்காகவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். உண்மையில் இது ஒரு பயங்கரமான வளர்ச்சிப் போக்காகும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்த அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வாக்காளர்கள் வருவதற்காக பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. புலிகளால் அமுல்படுத்தப்பட்ட பகிஷ்கரிப்பு காரணமாக எவருமே வரத் துணியவில்லை. இந்தச் சூழ்நிலையில் யாழ். மாவட்டத்தில் 1.5 சதவீதமானோரே வாக்களித்தனர். புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சியில் ஒருவர் மட்டுமே வாக்களித்தார்.

மோட்டார் சைக்கிள், கார் மற்றும் பஸ் மூலம் பயணம் செய்ததாகக் கூறிக் கொண்ட இந்த வாக்காளரைச் சுற்றி அதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் சூழ்ந்து கொண்டனர். எனினும் நிலைமைகளை ஆராய்ந்தறிவதற்காகப் புலிகளால் இந்த மனிதர் வேண்டுமென்றே அனுப்பப்பட்டார் என்பது உணர்ந்து கொள்ளப்பட்டது. கிளிநொச்சியில் அளிக்கப்பட்ட இந்த ஒரே ஒரு வாக்கு, ரணில் விக்கிரமசிங்கவுக்கே போடப்பட்டது. இந்த ஒரேயொரு வாக்கை தேர்தல் அதிகாரிகள் இரவு 9.13 மணிக்கே எண்ணி முடித்தார்கள் என்பது வேடிக்கையானது. அதாவது ஒரு வாக்கை எண்ணுவதற்கு ஐந்து மணித்தியாலயங்கள் சென்றிருக்கிறது.

மட்டக்களப்பில் புலிகளின் காவலர்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்லும் பாதைகளிலும் பாலங்களிலும் இறங்கு துறைகளிலும் காவலிருந்தனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் வந்து வாக்களிப்பதைத் தடுப்பதற்காகவே இந்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன. டயர்களும் எரிக்கப்பட்டன. தேர்தலைப் பகிஷ்கரிக்கும் தீர்மானம் மக்களால் எடுக்கப்பட்டதாக செய்தி நிறுவனமொன்றினால் பேட்டி காணப்பட்ட புலி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். "இதில் எமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை" என்று கூறிய அந்த புலி உறுப்பினர், "ஆனால் அவர்கள் வாக்களிப்பதற்கு நாம் அனுமதியளிக்கமாட்டோம்" என்று தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார். சில இடங்களில் வாக்காளர் அட்டைகளை எரிக்குமாறு மக்கள் தூண்டப்பட்டார்கள். இவ்வாறான சில எரிப்புகள் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர் முன்னிலையிலும் இடம்பெற்றன. வன்செயல் சூழல் காரணமாக செங்கலடியிலிருந்தும் வாழைச்சேனையிலிருந்தும் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் வாபஸ் பெறப்பட்டனர். வாக்களிப்பு சதவீதம் ஓரளவு வீழ்ச்சி கண்டபோதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மிக மோசமாக வாக்களிப்பு நிகழ்ந்ததைப் போன்று கிழக்கிலும் வவுனியாவிலும், மன்னாரிலும் அவ்வளவு மோசமாக இருக்கவில்லை.

தமிழ் மக்கள் ஜனாதிபதி வேட்பாளர்களால் ஏமாற்றமடைந்துள்ளனரென்றும் புதியதொரு ஜனாதிபதியிடமிருந்து அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லையென்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவுமே இந்தப் பலாத்காரப் பகிஷ்கரிப்பு திணிக்கப்பட்டது. "தமிழர்கள் தமிழீழத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு ஸ்ரீலங்கா குறித்து அக்கறையில்லை" என்ற செய்தியை வழங்குவதே இதன் நோக்கமாகும். இதற்கான


**புலிகள் தமது வன்செயல் பயமுறுத்தல்கள் மூலம் பல தமிழர்களை வாக்களிக்காமல் தடுத்த போதிலும், பல இடங்களில் முற்றுமுழுதான பகிஷ்கரிப்பை அவர்களால் ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது. பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுக்கும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் பரவலாக விநியோகிக்கப்பட்ட அதேவேளை, வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னதாகவே ஓர் ஒழுங்குமுறை யான வன்செயல் மற்றும் பயங்கரவாத உத்திகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான பல குண்டு வெடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. வாக்களிப்புக் காலத்தில் ஈ.பி.டி.பி.யின் ஐந்து கட்சிக் காரியாலயங்கள் மீது கிரனைட்டுகள் வீசப்பட்டன. பொலிஸ் ரோந்து அணிகள், இராணுவக் காவல் நிலைகள், பொலிஸ் வாகனங்கள் ஆகியவற்றின் மீது குண்டுகளும் கிரனைட்டுகளும் வீசப்பட்டன. இந்துக் கல்லூரி மைதானத்தில் இளைஞரொருவர் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார்.**


தீர்மானம் சுயமாக எடுக்கப்பட்டதாகக் காட்டுவதே புலிகளின் நோக்கம். தேர்தல் பகிஷ்கரிப்பு மக்களின் தீர்மானமென்று கூறப்பட்டாலும் புலிகளே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனரென்பது வெளிப்படையானது. குறிப்பிட்ட ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவதையும் புலிகள் விரும்பவில்லை என்பதும் தெளிவானது. இந்த நிலைப்பாட்டுக்கான காரணங்கள் சுவாரஸ்யமானவை. அவற்றை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிப்பதாகவும் இதில் தாம் சம்பந்தப்படப் போவதில்லையென்றும் ஆரம்பத்தில் புலிகள் கூறினர். தமிழ் மக்கள் விரும்பினால் வாக்களிக்கலாம் அல்லது விரும்பாவிட்டால் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாமென்றும் புலிகள் இயக்கம் கூறியது. இது தொடர்பாக முடிவெடுக்கத் தமிழ் மக்கள் அரசியல் முதிர்ச்சி பெற்றவர்களென்றும் அந்த இயக்கம் கூறியது.

காலம் செல்லச் செல்ல ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருவதைப் புலிகள் கண்டு கொண்டனர். புலிகள் பின்னர் தமது நிலைப்பாட்டினைச் சிறிது மாற்றி, மஹிந்த ராஜபக்ஷவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் கண்டிக்கத் தொடங்கினர். தமிழ் மக்களுக்கு இருவருமே தவறிழைத்துள்ளனர். இருவருமே தமிழ் மக்களின் ஆதரவைப் பெறத் தகுதியற்றவர்களென்று புலிகள் கூறினர்.

இத்தகைய வெளிப்படையான போக்குகளுக்கு மத்தியில் ரணிலுக்கு ஆதரவாகப் பெரும்பாலான தமிழ் வாக்களார்கள் இருந்தனர். இந்த எழுந்தமானமான ஆதரவுக்குப் பல காரணங்கள் இருந்தன. இவற்றில் முக்கியமானது மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையும் அவர் கடினப்போக்குக் கொண்ட ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய ஆகியவற்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் காரணமாம். மஹிந்த வெற்றிபெறும் பட்சத்தில் யுத்தம் விரைவில் வெடிக்குமென்று தமிழ் மக்கள் பயந்தனர். புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டதால் ரணிலுக்கு நன்றி தெரிவிக்கும் போக்கும் மக்களிடம் காணப்பட்டது. இதற்கப்பால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவேனென்றும் சமஷ்டித் தீர்வு காண்பேன் என்றும் ரணில் கூறியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகள் காரணமாக அவரது எதிரிகள் அவரை சிங்கள மக்களின் துரோகியென எடுத்துக் கூறினர். இதனால் சிங்கள வாக்குகளை இழக்கும் அபாயத்தை ஈடுசெய்ய விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பது அவசியமென்று உணரப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய அனைத்தும் விக்கிரமசிங்கவுடன் கூட்டுச் சேர்ந்திருந்தன. கத்தோலிக்க பிஷப்களும் இவர்களுடன் சேர்ந்து ஆதரவு வழங்கினர். எனவே இரு பிரதான வேட்பாளர்களில் விக்கிரமசிங்கவே சிறந்தவரென்று இவர்கள் கருதினர். அல்லது இந்த இருவரில் ஆபத்துக்கள் குறைந்தவர் ரணிலே என்று கருதினர். இதுகுறித்து புலிகள் அதிருப்தி கொண்டிருந்தனர். குறிப்பாக தமிழர்களும் பொதுவாக சிறுபான்மை இனத்தவர்களும் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு அளிப்பதை புலிகள் விரும்பவில்லை. இந்தக் குறுகிய சிந்தனை காரணமாக விக்கிரமசிங்க தோல்வியடைந்து, ராஜபக்ஷ வெற்றி பெறுவதை புலிகள் விரும்பினர். கொழும்பில் கடினப் போக்குக் கொண்ட அரசாங்கமொன்று ஏற்படுத்தப்படுவது யுத்தம் வெடிப்பதற்கு மிகவும் சாதகமானதென புலிகள் கருதினர். இவ்வாறான ஒரு ஆட்சிக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயம் உறுதியாக இருக்கும் என்றும் அவர்கள் கருதினர். இது புலிகளுக்குச் சாதகமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. விக்கிரமசிங்க குறித்து புலிகள் சந்தேகம் கொண்டிருந்ததோடு கவலையும் கொண்டிருந்தனர். 1994ஆம் ஆண்டு அபரிமிதமான யாழ். மக்களின் ஆதரவுடன் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிபீடமேறியதைப் போன்று ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. விக்கிரமசிங்கவிற்கு சர்வதேச ஆதரவு இருப்பதாகவும் புலிகள் பயந்தனர். யுத்தமொன்று ஏற்படும் பட்சத்தில் கொழும்பு அரசாங்கத்திற்கு உலக ஆதரவு கிட்டுமென்று புலிகள் கருதினர். நெகிழ்ச்சித்தன்மை கொண்ட ஜனாதிபதியொருவரால் யுத்தம் மீள ஆரம்பிக்கப்படுதற்கான காரணங்களை குறைத்துக்கொள்ள முடியுமென்றும் கருதப்பட்டது. யுத்தநிறுத்தம் கூட நீண்ட நோக்கில் புலிகளைப் பலவீனப்படுத்தக் கூடுமென்ற பீதியும் நிலவியது.

புலிகளின் நலன்களுக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்குமிடையில் ஓரளவுக்கு வித்தியாசங்கள் இருந்தன. சாதாரண மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. எனவே யுத்தத்தைத் தவிர்த்துப் புலிகளுடன் அதிகாரத்தைப் பகிரக் கூடிய வேட்பாளரையே மக்கள் விரும்பினர். இந்த வகையில் விக்கிரமசிங்கவே சிறந்தவரென்ற பொது அபிப்பிராயம் நிலவியது. பிரச்சினைகளை ரணில் விக்கிரமசிங்க தீர்த்து வைப்பாரா இல்லையா என்பது பிரச்சினையல்ல.

புலிகளைப் பொறுத்தவரை விக்கிரமசிங்காவை விட ராஜபக்ஷவே சிறந்தவரெனக் கருதினர். அவர்கள் தமிழ் மக்களின் நலன்களுக்கப்பால் புலிகளின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்தனர். யுத்தமொன்று ஏற்படும் சூழ்நிலையில் மஹிந்த ராஜபக்ஷவைவிட ரணில் விக்கிரமசிங்க ஆபத்தானவரென்று புலிகள் கருதினர். ராஜபக்ஷவை பலவீனமான செயல்திறனற்ற ஒருவரென்று புலிகள் கருதியதால் அவர் ஜனாதிபதியாக வருவதை அவர்கள் விரும்பினர்.

புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி, யுத்தத்தைத் தவிர்க்கக் கூடிய ஒருவரே ஜனாதிபதியாக வர வேண்டுமென்று தமிழ் மக்கள் விரும்பினர். ஆனால் புலிகள் சமாதானத்தைக் குழப்பி, யுத்தத்தைத் தொடங்கக் கூடிய ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று விரும்பினர். இந்தச் சூழ்நிலையில் தான் மக்களின் வாக்குரிமை பழிவாங்கப்பட்டது. எனவேதான் ரணில் விக்கிரமசிங்க மீது நேரடியாக இலக்கு வைத்துத் தாக்க புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகளின் சிரேஷ்ட தலைவரான வே.பாலகுமாரன் பகிரங்கமாகவே விக்கிரமசிங்க மீது தாக்குதல் தொடுத்தார். ஜனாதிபதி வேட்பாளரான இருவரில் விக்கிரமசிங்கவே மிகப் பயங்கரமானவரென்று பாலகுமாரன் கூறினார். இதனையே தமிழ்ச் செல்வன் பின்னர் தெரிவித்தார்.

சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டிருப்பதால், தேர்தலை பகிஷ்கரிக்குமாறு வெளிப்படையாகவே புலிகளால் அழைப்பு விடுக்க முடியவில்லை. எனவே புலிகளின் முகவர் அமைப்புகளில் ஒன்றான மாணவர் இயக்கமொன்றினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. விக்கிரமசிங்கவுக்கு முஸ்லிம்களே வாக்களித்தனர் என்று காட்டுவதற்கு புலிகள் முனைகின்றனர். ஆனால் பட்டிருப்பு, கல்குடா, மட்டக்களப்பு போன்ற தமிழ் பிரதேசங்களில் மிக அதிகப்படியான வாக்குகளை விக்கிரமசிங்க பெற்றுள்ளார். பட்டிருப்பில் 99 சதவீதமும் கல்குடாவில் 65 சதவீதமும் மட்டக்களப்பில் 75 சதவீதமும் தமிழ் மக்கள் வாழ்கின்றனரென்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். திருமலை தமிழ் பிரிவிலும் தமிழ் மக்களே அதிகமாக வாழ்கின்றனர். எனவே புலிகளின் பலாத்கார பகிஷ்கரிப்பு திணிப்புக்கு மத்தியிலும் இயன்ற இடங்களில் தமிழர்கள் வாக்களித்துள்ளனர் என்பதை இது காட்டுகிறது. புலிகளின் கோட்டை எனக் கருதப்படும் முல்லைத்தீவில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிகமான வாக்குகள் கிடைத்திருக்கின்றன. வடமாகாணத்தில் மஹிந்தவுக்கு அதிகடிப்படியான வாக்குகள் கிடைத்த தேர்தல் தொகுதி முல்லைத் தீவேயாகும். தமிழ் மக்களை வாக்களிக்க வேண்டாமென புலிகள் தடுத்த அதேவேளை, வெலிஓயா போன்ற இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள சிங்கள மக்கள் மஹிந்தவுக்கு வாக்களித்ததாலேயே இந்நிலையேற்பட்டது.


*நன்றி : சண்டே லீடர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

சுப்பையா நாயுடு அவர்கள் எம்.ஜி.ஆரின் வலதுகரமாகத் திகழ்ந்தவர். எம்.ஜி.ஆரின் பல வெற்றிப் படங்களுக்கு நாயுடு இசையமைத்துள்ளார். 'திருடாதே', 'நாடோடி மன்னன்', 'மலைக்கள்ளன்' என்று நிறையச் சொல்லலாம்.

எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டதே, ஒரு எம்.ஜி.ஆர். படத்திற்கு நான் பாட்டெழுதச் சென்றபோதுதான் 'நியூடோன் ஸ்டுடியோ' அதிபர்



திரு.ராமனாதன் செட்டியார் அவர்கள் எம்.ஜி.ஆரை வைத்து ஒரு படத்தைத் துவக்கினார்கள். திரு.ப.நீலகண்டன்தான் அதன் இயக்குநர்.

அந்தப் படத்தில் திரு.எம்.ஜி.ஆர். பாடுவதாக இரண்டு 'Solo Songs' நான் எழுதி, நாயுடு அவர்கள் இசையமைத்தார்கள்.

ஒரு பாட்டின் பல்லவி இதுதான்.

***'உனக்கும் எனக்கும் உறவிருக்கு! - இந்த உறவினில்தான் - என் உயிரிருக்கு!'***

நாயுடு அவர்கள் இந்தப் பல்லவிக்கு நாற்பது விதமாக மெட்டுப் போட்டார்கள். நான் வியந்து போனேன்.

இதை விட வியப்பான விஷயம் இன்னொன்று. மேலே சொன்ன பல்லவியானது. மெட்டமைக்க வசதியாக நூல் பிடித்தாற்போல் முதல் அளவும் இரண்டாவது அளவும் ஒரே மாதிரியாக இருந்தன.

எம்.ஜி.ஆர். என்னிடம் எழுதி வாங்கியிருந்த இன்னொரு பல்லவி, அனைவராலும் எளிதாகப் பாடக்கூடிய மெட்டில் அமைவது சாத்தியமா என்கிற சந்தேகம் எனக்கே இருந்தது.

பல்லவி இதுதான்.

***'உழை! உழை! உழை! உன் உழைப்பைக் கொண்டு பிழை! பிழை! பிழை! பிழை! - நீ உழைக்காமல் பிழைப்பது பிழை!'***

படிப்பதற்கே சிரமமாக ஏகப்பட்ட 'ழ'கரங்களோடு உள்ள இந்த பல்லவியை எம்.ஜி.ஆர். பெரிதும் விரும்பினார்.

நானும் எம்.ஜி.ஆரும். திரு.ப. நீலண்டனும் அமர்ந்திருக்க மேற்கண்ட பல்லவிக்கு, சுப்பையா நாயுடு அவர்கள் செஞ்சுருட்டியிலும், சுத்த தன்யாசியிலும் - மிகச் சிறப்பாக மெட்டமைத்துப் பாடி எங்களை அசத்தினார்கள்.

புதிதாக இசையமைப்பாளராக வரப் பிரியப்படும் எவரிடமேனும் இந்தப் பல்லவியை, இன்று கொடுத்தால் கூடத் தலையைப் பிய்த்துக் கொண்டு திக்குமுக்காடிப் போவார். இதுபோன்ற பரீட்சைக்கெல்லாம் ஆளாக்கப்பட்டால் இன்று ஒரு சிலராவது தேறுவார்களா என்பது ஐயப்பாடே....

சுப்பையா நாயுடுவின் ஆழ்ந்த புலமையையும் அகன்ற அனுபவ ஞானத்தையும் புலப்படுத்திய இந்தப் பாடல்கள் இரண்டும் பதிவு செய்யப்பட்டனவே தவிர,

ஏதோ சூழ்நிலையின் காரணமாகப் படம் பாதியிலேயே நின்று போயிற்று


சுப்பையா நாயுடு அவர்கள் தமிழை அழுத்தந்திருத்தமாக உச்சரித்துப் பாடுவார்கள். இன்று அவர் இசையமைத்து T.M.S. P.சுசீலா பாடிய பாடல்களைக் கேட்டால், நாயுடு அவர்கள் பாடுவது போலவே இருக்கம். கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, அவரது மெட்டுகள் அவரது படைப்பாகவே அதே தொனியோடு பாடகர்களின் Vocal Chord இல் வெளிப்படும்.

மெல்லிசை மன்னர் விஸ்வநாதனின் ஆரம்ப கால குருவாக விளங்கியவர் திரு.சுப்மபையா நாயுடு.

விஸ்வநாதன் அவர்களின் குருபக்தியை நான் உடனிருந்து பார்த்தவன். சுப்பையா நாயுடுவின் பெயரை உச்சரித்தாலே சிலிர்த்துப் போவார் விசு அண்ணன்.

சுப்பையா நாயுடு அவர்களுக்கு சற்றுத் தொழிலில் தொய்வு ஏற்பட்ட வேளையில் எம்.ஜி.ஆர். சிவாஜி இருவரது தலைமையிலும், ராஜா அண்ணாமலை மன்றத்தில் விழா எடுத்து, தன் குருநாதர் சுப்பையா நாயுடுவிற்குப் பொற்கிழி வழங்கினார் விஸ்வநாதன்.

(தொடரும்.......)




# அமெரிக்காவில் ஒரு அதிசய கிராமம்

அமெரிக்க வீதிகளில் காலடி எடுத்து வைத்தாலே 120 கி.மீ. வேகத்தில் கார்கள் பறந்து கொண்டிருக்கும். திரும்பிய பக்கமெல்லாம் கண்ணைக் கூசச் செய்யும் மின்விளக்கு. ரேடியோ, டி.வி., போன் இல்லாத வீடுகளே இல்லை என்கிற அளவுக்கு ராக்கெட் வேக வளர்ச்சி.

அப்படிப்பட்ட நாட்டில் மின்சாரம் வேண டாம்; டி.வி. வேண்டாம்; கார் வேண்டாம். குதிரை வண்டியே போதும் என்று ஒரு பிரிவினர் கிராமங்களில் ஒதுங்கியிருக்கிறார்கள் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அவர்கள் 'ஆமிஷ்' இன மக்கள். இவர்கள் வாழ்க்கை முறையே கொஞ்சம் வினோதமானது. பிலடெல்பியா நகருக்கு அருகில் அனைத்து அறிவியல் வளர்ச்சியும் வேண்டாமென்று ஒதுங்கிக் கிடக்கும் ஆமிஷ் (Amish) இன மக்கள் வசிக்கின்றார்கள்.



ஆமிஷ் மக்களின் பழக்க வழக்கங்களும் வித்தியாசமானவை. கறுப்பு, வெள்ளை, ஊதா நிறங்களைத் தவிர வேறெந்த நிறத்தையும் இவர்கள் உபயோகிப்பதில்லை.

ஆண்கள் மீசையின்றி, நீண்ட தாடியுடன் ஒரே மாதிரியாகக் காட்சியளிக்கிறார்கள். ஆதியில் தங்களை விரட்டியடித்த இராணுவ வீரர்கள் மீசையுடன் இருந்ததால் அதை வெறுக்கும் விதமாக மீசை இல்லாமலே வாழ்கிறார்கள்.

ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில், புதிய கிறிஸ்தவ மதக் கொள்கைகளை எதிர்த்தவர்களையும், கட்டாய இராணுவ சேவையை எதிர்த்தவர்களையும் இராணுவம் அடக்கி ஒடுக்கியது. இந்த அடக்குமுறைகளுக்குப் பயந்து ஐரோப்பாவை விட்டு ஓடி, அமெரிக்காவில் குடியேறியவர்கள் தான் ஆமிஷ் இன மக்கள். இவர்கள் தற்போது 22 அமெரிக்க மாநிலங்களில் ஆங்காங்கே சிறு கிராமங்களில் காலனி போல் ஒதுங்கி வாழ்கிறார்கள். பழமைவாதிகளான இவர்கள், தங்களுக்கென்று ஒரு வாழ்க்கை முறையை வகுத்துக்கொண்டு, பிற அமெரிக்கர்களுடன் ஒட்டாமல் தனித்து வாழ்கிறார்கள்.

மிக அழகிய கிராமங்கள், பசுமையான வயல்கள், எளிமையான வீடுகள், இயற்கையோடு ஒன்றிய அடக்கமான வாழ்க்கை - இவையே ஆமிஷ் இன மக்களின் சித்தாந்தம்! ஆமிஷ் இன மக்கள் கள்ளங்கபடமற்றவர்கள். கடுமையான உழைப்பாளிகள். மின்சாரத்தைப் பயன்படுத்துவதில்லை. டி.வி., வீடியோ, டெலிபோன் போன்ற சாதனங்களை அவர்கள் உபயோகிப்பது கிடையாது.



துணிகளை வோஷிங் மெஷினில் துவைப்பதில்லை. தாங்களே துவைத்துக் கொள்கிறார்கள். சமையல் செய்யவும் 'ப்ரோபேன்' எனப்படும் எரிபொருளைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

விவசாயத்தை நம்பியே வாழ்வதால் வீடுகளைச் சுற்றிலும் கோதுமை மற்றும் காய்கறிகளைப் பயிரிடுகின்றார்கள். நிறைய மாடுகள், குதிரைகள், கோழிகள், வான் கோழிகளை வளர்க்கிறார்கள். அருகிலுள்ள சந்தைகளில் விற்பனை செய்கிறார்கள். மரவேலை மற்றும் பிளம்பிங் மாதிரி பல வேலைகளையும் செய்து பிழைக்கிறார்கள்.

இவர்கள் மிகக் குறைந்த அளவே கல்வியறிவு பெற்றவர்கள். எட்டாவது வரை படித்தால் போதும் என்று நினைக்கிறார்கள். ஒரு கிராமத்தில் ஒரே ஒரு அறையுள்ள ஒரு சிறிய பள்ளி. அந்தப் பள்ளியில் ஒரே ஒரு டீச்சர். ஐம்பது, அறுபது சிறுவர்கள் கும்பலாகச் சேர்ந்து ஆங்கிலம், கணிதம், பூகோளம் கற்றுக் கொள்கிறார்கள். பைபிள் முக்கியமான பாடமாகக் கற்றுத் தரப்படுகிறது. பைபிளை மிகத் தீவிரமாகப் பின்பற்றும் ஆமிஷ் மக்கள் போட்டோ எடுத்துக் கொள்வதில்லை.

தங்கள் இன மக்களைத் தவிர வேறு யாருடனும் அவர்கள் உறவு வைத்துக் கொள்வதில்லை. பிற இனத்தினருடன் திருமணம் செய்து கொள்வதில்லை. அப்படியே திருமணம் செய்து கொண்டால் ஒதுக்கி வைத்து விடுவார்களாம்.

இவர்கள் எந்த வம்பு தும்புக்கும் போக மாட்டார்கள். கொலை, கொள்ளை, விவாகரத்து போன்றவை கிடையவே கிடையாது. இவர்களுக்கு பக்தி அதிகம் என்றாலும் தனியாக சர்ச் கட்டிக் கொள்வதில்லை. யாராவது ஒருவரது வீட்டிலேயே வழிபாடு நடைபெறுகிறது. மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வழிபாடு.


நாகரிகத்தின் எந்த வளர்ச்சியையும் இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்றாலும் அரசாங்கத்துக்கு ஒழுங்காக வரி கட்டியிருக்கிறார்கள். எனவே, அமெரிக்க அரசாங்கமும் அவர்களை அனாவசியமாகச் சீண்டுவதில்லை.

***பிந்திய செய்தி :***

ஹொலிவுட்டைக் கலக்கிக் கொண்டிருக்கும் இந்திய டைரக்டரான மனோஜ் நைட் சியாமளன், ஆமிஷ் இன மக்களை ஆதாரமாக வைத்துத்தான் 'தி வில்லேஜ்' என்கிற படத்தை எடுத்திருக்கிறார்.

***(நன்றி : குமரன்)***

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




நடாஷா அவரிடம் பேச்சுக் கொடுத்தாள். அவர் இளைஞர். ஆனால் எவரையும் சந்தேகத்தோடு கவனமாகக் கண்காணிக்கும் சுபாவமுடையவர்.

வெளிக்கதவு தட்டப்பட்டது. அது தேநீர் நேரம். கதவைத் திறந்துகொண்டு தேநீர் கோப்பைகள் நிரம்பிய ட்ராலியை தள்ளிக்கொண்டு சிப்பந்தி ஒருவன் உள்ளே நுழைந்தான். அதிலிருந்து இரண்டு கோப்பைகளை எடுத்த பாதுகாப்பு அதிகாரி ஒரு கோப்பையை நடாஷாவிடம் கொடுத்துவிட்டு இன்னொரு கோப்பையை தனக்கென்று வைத்துக் கொண்டார்.

நடாஷாவின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. பாதுகாப்பு அதிகாரியிடம் தந்திரமாகப் பேச்சுக் கொடுத்து அவருடைய கவனத்தைத் திசை திருப்பினாள். அவர் பார்க்காத சமயம் மயக்க மருந்தை அவருடைய கோப்பை தேநீரில் கலந்து விட்டாள். தேநீர் அருந்திய அவர் மயங்கிய நிலையில் நாற்காலியில் சாய்ந்தார்.

நடாஷா விரைந்து செயல்படத் தொடங்கினாள். சம்பந்தப்பட்ட கோப்புகளில் உள்ள தகவல்களை நுண்ணிய படங்களாக எடுத்துக் கொண்டாள். அந்தப் படங்களை தன்னுடைய மேஜை டிராயர் அடியில் மறைத்து வைத்து தன்னிடமிருந்த கேமராவையும் ஒளித்து வைத்தாள். பிறகு அதே மயக்க மருந்தை தன்னுடைய தேநீரிலும் கலக்கிக் குடித்து விட்டு நாற்காலியில் மயங்கி வீழுந்தாள்.

வெளியில் சென்ற இரண்டு அதிகாரிகளும் பத்து நிமிடங்களில் திரும்பி வந்தார்கள். நடாஷாவும் பாதுகாப்பு அதிகாரியும் மயங்கிய நிலையில் இருப்பதைக் கவனித்தார்கள். டாக்டர் உடனே வரவழைக்கப்பட்டார். சிகிச்சைக்குப் பிறகு அவர்கள் சுய நினைவை அடைந்தார்கள். தேநீர் குடித்த பிறகு மயங்கி விட்டதாகவும் என்ன நடந்தது என்று தெரியவில்லை எனவும் இருவருமே சொன்னார்கள். கோப்பைகளில் மீதமிருந்த தேநீர் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. சக்தி வாய்ந்த தூக்க மருந்து அதில் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டு நாட்கள் தொடர்ந்து விசாரணை நடந்தது. காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நடாஷா புகைப்படங்களாக எடுத்த தகவல்கள் அனைத்தும் இரண்டு வாரங்களுக்குள்ளாக அமெரிக்க உளவுத் துறையினரைச் சென்றடைந்தது.

கிரெம்ளின் மாளிகைக்குள்ளேயே அமெரிக்க கையாள் ஒருவன் செயல்பட வேண்டுமென ரஷ்யர்கள் சந்தேகித்தனரே தவிர, அந்தக் கையாள் நடாஷாதான் என்பதைக் கடைசி வரையில் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மிகவும் பலம் வாய்ந்த பாதுகாப்புகளுடன் கூடியது என்று கருதப்படுகின்ற கிரெம்ளின் மாளிகைக்குள்ளேயே உளவாளிகள் வெற்றிகரமாகச் செயல்பட முடிந்திருக்கிறது என்றால், அவர்களால் எங்கே நுழைய முடியும் எங்கே நுழைய முடியாதென்று யாரால் சொல்ல முடியும்? முயன்றால் முடியும். பிரேக் நகரில் அமெரிக்காவுக்காக பெண் உளவாளி ஒருத்தி வேலை பார்த்தாள். மிக இரகசியச் செய்திகள் அடங்கிய நுணுக்கமான படம் ஒன்றை அவள் வைத்திருந்தாள். அது ஏவுகணைகள் பற்றிய இரகசியம். அந்தத் தகவல் அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு மிகவும் உதவக்கூடிய தகவல் என்பது போல அவளுக்குத் தோன்றியது.

அந்தத் தகவலை வெளியில் எப்படி அனுப்பிவைப்பது என்பதுதான் அவளுக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# கிரிமினல் ஜீன்ஸ்!

'இளகிய மனம் படைத்தவர்கள் இந்தக் காட்சியைக் காண வேண்டாம்' என்ற அறிவிப்பு வரும். கூடவே மூன்று தீவிரவாதிகள் ஆட்டை அறுப்பதுபோல் ஒரு அப்பாவி மனிதனின் தலையை அறுத்து எறிவார்கள்.


இதைப் பார்ப்பவர் நெஞ்சம் பதறும்.

ஆனால் இதைச் செய்பவர்களுக்கு? அவர்களின் மனசு என்ன கல்லா? குற்றங்களைப் பார்க்கும் போது எல்லோரும் கேட்கும் கேள்விதான் இது. ஆனால் உலகம் முழுவதும் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது.

சிலர் பிறக்கும்போதே கிரிமினல்களாகத்தான் பிறக்கிறார்களா?

அறிவியல்பூர்வமாக இந்தக் கேள்விக்கு இரண்டு விதமாகப் பதில் சொல்லப்படுகிறது. ஒன்று, மிகச் சுருக்கமாக 'ஆமாம்'.

இன்னொரு பதில், கொஞ்சம் காதைச் சுற்றி மூக்கைத் தொடும் விஷயம். ஒருவரின் ஜீன்களில் ஏற்படும் கோளாறுதான் அதற்குக் காரணம் என்கிறார்கள்.




நல்லதோ கெட்டதோ மனிதனின் எல்லா வகையான நடத்தைகளும் மூளையில் இருந்துதான் ஆரம்பமாகின்றன. இந்த மூளையிலுள்ள செல்கள் ஒன்றுகூடி, Monoamine Oxidase A (MAO-A) என்ற ஒன்றை உற்பத்தி செய்கின்றன. மூளையில் உற்பத்தியாகும் செரடோனின், டோபமைன் ஆகிய இரசாயனப் பொருட்களின் அளவைக் கட்டுப்படுத்தும் தன்மை இந்த MAO - Aக்குத்தான் உள்ளது. மூளையில் உற்பத்தியாகும் இரசாயனப் பொருட்களில் மாற்றம் ஏற்பட்டால், மனித நடவடிக்கைகளிலும் மாற்றம் வரும்.



கிரிமினல்கள் பலரை ஆராய்ந்ததில் அவர்களின் ஜீன்களில் உள்ள குறைபாட்டால் MAO-A உற்பத்தியில் குறைபாடு இருப்பது தெரிய வந்தது. MAO-A அளவு குறையும் போது, செரட்டோனின் அளவு சராசரி அளவைவிட 9 மடங்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பதைக் காண முடிந்தது. இதுதான் கிரிமினல் எண்ணங்களைத் தூண்டுகிறதாம்.

குழந்தைகளாக இருக்கும் போதே தகாத செயல்களில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தைகளின் மூளைகளில் MAO-A அளவு அதிகமாக உற்பத்தியாகவில்லையாம். அதனால்தான் அவர்கள் வளர்ந்து பெரியவர்களான பின்னர் கிரிமினல்களாக உலாவுகிறார்களாம்.

டி.என்.ஏ.சோதனை மூலம் இவற்றைக் கண்டுபிடித்து ஜீன்களில் உள்ள கோளாறைச் சரி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியில் இப்போது தீவிரமாக இறங்கிவிட்டார்கள், ஆராய்ச்சியாளர்கள். குளோனிங்கைவிட உருப்படியான காரியம் இது.

***நன்றி : ஆய்வு***

# உரிமை மடல் 28

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்*
*தேவானந்தா அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*



**அன்பான எம் தேசத்து மக்களே!**
**உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயக தேசத்து உறவுகளே!**
**உயிரினும் மேலான பாசமிக்க எம் தோழர்களே!**

*உங்களுக்கு வணக்கம்!*

அழகிய எங்கள் தாயக தேசம் அழிவின் சின்னங்களை மட்டும் சுமந்து நிற்கின்றது! தாயவள் முகத்தில் பொங்கி வழிந்த புன்னகை தொலைந்து.... எங்கள் தந்தையர் தோள்களில் துள்ளி எழுந்த வீரியம் அழிந்து.... இளம் தலைமுறையின் இனிய கனவுகள் யாவும் காணாமல் போயிருக்கின்றன!

சுதந்திரப் போராட்டத்தின் சுடர் விளக்கை.... சிந்துகின்ற குருதியினால் அணையாது காப்பதற்குப் போராட்டக் களம் நோக்கிப் பிள்ளைகளை அனுப்பி வைத்த எம் தேசத்து உறவுகள் சமாதிகளுக்கு மட்டும் விளக்கேற்றி அழுது கொண்டிருக்கின்றன!

தாயக விடுதலைக்காகப் போராட வென அனுப்பி வைத்த தம் பிள்ளைகள் தவறான தலைமையினால் சொந்த இனத்தின் குருதி குடிப்பதற்கு மட்டும் திசை மாறி இழுத்துச் செல்லப்படுவது கண்டு பெற்ற வயிறுகள் பற்றி எரிகின்றன!

தாயக விடுதலை என்று புலிகள் கூறும் பயணம் சுடு காடு நோக்கி நகர்கின்றது! சமாதானத்தை எண்ணிய மக்களின் கனவுகள் யாவும் சாம்பல் மேடுகள் மீதும், கொன்று பலியாக்கப்பட்டவர்களின் சமாதிகள் மீதும் சரிந்து கிடக்கின்றன!

பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்த வீடிழந்து... சொந்த நிலமிழந்து..... சொந்த தேசமிழந்து....சொந்தங்களை, உறவுகளை இழந்து... சொத்துக்களை இழந்து... சுகமிழந்து.... சுதந்திரமாகப் பேசவும், எழுதவும், சிந்திக்கவும் இருக்கின்ற உரிமை இழந்து எம் தாயக தேசத்து உறவுகள் தவித்துக் கொண்டிருக்கின்றன!

கணவனை இழந்த விதவைப் பெண்கள்.... பெற்றோரை இழந்த அனாதைக் குழந்தைகள்.... பிள்ளைகளை இழந்த வயோதிபத் தாய்மார்கள் தந்தையர்கள்... இவர்கள் விடும் கண்ணீரில் மட்டும்தான் இன்று எம் தேசம் நனைந்து கொண்டிருக்கின்றது!

இத்தனை இழப்புகளுக்கும் காரணமான புலித் தலைமை மக்களாகிய உங்களது கண்ணீரைத் துடைப்பதற்கு மாறாக.... நீங்கள் படும் துயரக் கதைக்கு முடிவுரை எழுதுவதற்கு மாறாக... முகம் காட்டாமல் மறைந்து இருந்துகொண்டு வருடத்தில் ஒருமுறை வீராவேச உரை நிகழ்த்திக் கொண்டிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலென்றே நான் கருதுகின்றேன்!

மக்களின் கருத்துக்களை அறியாமல் தங்களது செவிகளை இறுக மூடிக்கொண்டு, மக்களின் அவலங்களைப் பார்க்காமல் தங்களது விழிகளை மூடிக்கொண்டு, மரணித்த போராளிகளின் கல்லறைகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியில் புலித் தலைமை வருடந்தோறும் ஈடுபட்டு வருகின்றது.

இழப்புக்களை ஈடு செய்வதற்கு மாறாக இருக்கின்ற இழப்பை இன்னமும் அதிகரித்துச் செல்வதற்கும் அழகிய எங்கள் தாயக தேசத்தின் நீண்ட நிலப்பரப்பை மொத்தமாகவே சுடுகாடாக மாற்றுவதற்கும் மட்டும்தான் இன்னமும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன!

இந்த அழிவுப் பாதையில் இருந்து மக்களாகிய உங்களை மீட்டெடுத்து சமாதானத்தையும், சகவாழ்வையும் சுதந்திரத் தாயக தேசத்தையும் நோக்கிய பாதையில் உங்களை அழைத்துச் செல்லவே ஈ.பி.டி.பி. யினராகிய நாம் துணிச்சலுடன் செயலாற்றி வருகின்றோம்!

**எம் இனிய மக்களே!...**

நாமும் ஆயுதம் ஏந்தி களத்தில் நின்றவர்கள்தான்! நாமும் எங்களது இன்னுயிர் தோழர்கள் பலரையும் போராட்டக் களத்தில் பலி கொடுத்தவர்கள்தான்! அது இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய வரலாறு! இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பு 874 போராளிகள் மட்டும்தான் இந்த மண்ணில் புலிகள் இயக்கத்தில் இருந்து கொல்லப்பட்டிருக்கின்றார்கள்! இதைப் புலிகளே அறிவித்திருக்கின்றார்கள். ஏனைய மாற்று இயக்கப் போராளிகளின் கல்லறைகளையும் கணக்குப் பார்க்கப் புலிகள் தவறிவிட்டார்கள் என்பது வேறு விடயம்!

அதே நேரத்தில் அக்காலப் பகுதியில் படையினரால் கொல்லப்பட்ட போராளிகளின் தொகையை விடவும் புலிகளின் சகோதரப் படுகொலையினால் கொல்லப்பட்ட மாற்று இயக்கப் போராளிகளின் தொகையே அதிகம்!

அதன் பின்பு நடந்த அர்த்தமற்ற யுத்தத்தினால் 17,903 உறுப்பினர்களைப் புலிகள் பலி கொடுத்திருக்கின்றார்கள்! அதை விடப் பல மடங்கு எம் தேசத்து குடிமக்களும் மாற்று இயக்கப் போராளிகளும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்!

புலிகளால் கொன்றொழிக்கப்பட்ட மாற்று இயக்கப் போராளிகளின் தொகையும் கொன்று பலியாக்கப்பட்ட எம் தேசத்துக் குடிமக்களின் தொகையும் இந்த 17903 புலி உறுப்பினர்களின் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்பதையும் மக்களாகிய நீங்கள் உணரவேண்டும்!

புலிகள் கூறுவது போல் 17,903 உறுப்பினர்களை மட்டும் கணக்குப் பார்த்தாலும் இவைகள் வெறும் கல்லறைகள் மட்டுமல்ல! எமது மக்களாகிய உங்களது கருவறையில் பத்து மாதம் சுமையாக இருந்து, பத்தியம் காத்து வளர்த்தெடுத்த உங்கள் கருவறைக் குழந்தைகள்தான் இந்தக் கல்லறைகள்!

புலித் தலைமை தாங்கள் பெற்ற பிள்ளைகளைப் பொத்தி வளர்த்துக்கொண்டு அடுத்தவன் பிள்ளைகளைப் போருக்கு அனுப்பியதால் உருவானதுதான் இந்த 17,903 கல்லறைகள்!

தங்களது விவேகமற்ற அரசியலால் விடுதலை என்ற பெயரில் தமது சொந்த இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த 17,903 கல்லறைகள்!

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற பொன்னான வாய்ப்பினைச் சரிவரப் பயன்படுத்தத் தவறியதால் புலித் தலைமை உருவாக்கிக் கொண்டதுதான் இந்த 17,903 கல்லறைகள்!

கல்லறைகள் மீது கண்ணீர் விட்டுக் கதறும் எமது மக்களாகிய உங்களது கண்ணீரைத் துடைக்கவே நான் விரும்புகின்றேன்! இழப்புக்களைச் சந்தித்து நிற்கும் மக்களின் மகிழ்ச்சிக்கான தேடலுக்காக உழைப்பதையே நான் விரும்புகின்றேன்!

அழிவுகளற்ற சுபிட்சமான எதிர்காலத்தை உருவாக்கவே நான் உழைக்க விரும்புகிறேன்!

உங்கள் கண்ணீரைத் துடைத்து, கண்ணின் மணியென நாம் கட்டிக்காத்த எமது தாயக தேசத்தின் சுதந்திரத் தாகத்தைத் தீர்த்து வைப்பதே ஈ.பி..டி.பி.யினராகிய எங்களது இலட்சிய வேட்கை!

எமது இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் மக்களாகிய நீங்களும் எமக்கு உறு துணையாக - உந்து சக்தியாக எம்மோடு கைகோர்த்து வரவேண்டிய வரலாற்றுக் கடமை இன்று உங்கள் முன்னால் விரிந்து கிடக்கின்றது!

யுத்தத்தில் இரண்டு வகை உண்டு! ஒன்று நீதியான யுத்தம்! இன்னொன்று அநீதியான யுத்தம்! நீதியான யுத்தம் என்பது மக்களின் மகிழ்ச்சிக்காக... ஒரு உன்னத இலட்சியத்திற்காக.... தர்மத்தின் வழி நின்று ஒடுக்கப்படுகின்ற ஒரு தேசத்தின் ஒட்டு மொத்த மக்களும் பங்கெடுத்துக்கொள்ளும் மகத்தான மக்கள் யுத்தமே நீதியான யுத்தம்!

அநீதியான யுத்தம் என்பது மக்களைப் பார்வையாளர்களாக மட்டுமே வைத்திருக்கும்! தூக்கிய துப்பாக்கிகள் சொந்த இனத்தின் உயிர்களைப் பறிக்கும்! மக்களைப் பேசவிடாது அவர்களது குரல்வளைகளை அறுத்துப் போடும்! ஏன் என்று கேட்டவர்களைக் கொன்று பலியாக்கித் தெருவில் எறியும்!... போராட்டத்திலிருந்து மக்களைத் தூரத்தள்ளி வைத்திருக்கும்! எழுச்சி விழாக்களிலும் ஊர்வலங்களிலும் மக்களைப் பலாத்காரமாக ஈடுபடுத்தும்!

புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது வருடாந்த உரையில் குறிப்பிட்டது போல் எழுச்சி விழாக்களில் மக்கள் தன்னெழுச்சியாகக் கலந்துகொள்வதென்பது பொய்களால் சோடிக்கப்பட்ட வெறும் கற்பனாவாதக் கருத்தியல் மட்டுமே!

புலிகளால் மாமனிதர் பட்டம் வழங்கப்பட்ட பிரபல பத்திரிகையாளர் தராக்கி எனப்படும் சிவராம் அவர்கள், தான் கொல்லப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் இன்று பிரபாகரன் கூறிய கருத்திற்கு முரணான கருத்தைத் தெரிவித்திருந்ததை இங்கு நான் மறுபடியும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்!

**எழுச்சி விழாக்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஊர்வலங்களிலும் மக்கள் இப்போது கலந்துகொள்வதில் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை என்றும்..... மக்களின் கோரிக்கைகள் அதிகளவில் இருந்தும் அவைகள் ஆர்ப்பாட்டங்களில் கோசங்களாக எழுப்பப்படுவதில்லை என்றும் நடைமுறை உண்மையைப் பத்திரிகையாளர் தராக்கி அவர்கள் மிகத் தெளிவாக அன்று குறிப்பிட்டிருந்தார்.**

புலிகளிடம், மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற விருப்பங்கள் நடைமுறையில் இல்லை. மாறாக முடிவற்ற யுத்தமொன்றை மறுபடியும் தொடர்வதற்கான வக்கிரங்களே நிறைந்து காணப்படுகின்றன.

இடைக்காலத் தீர்வும் இன்றி, நிரந்த அமைதியும் இன்றி அரசியல் வெறுமைக்குள் இருந்து காலத்தை ஓட்டி, மாற்றுக் கருத்துடையவர்கள் மீதான கொலைகளையும் மக்கள் மீதான கப்பம் அறவிடும் சுரண்டலையும் நடத்தி, அதில் சுவை கண்டு தமிழ் தேசிய இனத்தின் வாழ்வியலை இருண்ட யுகத்திற்குள் வைத்திருக்கவே புலிகள் விரும்புகிறார்கள்!

புலிகளின் உள்நோக்கங்களைப் புரிந்து கொண்ட மக்கள், புலிகளிடமிருந்து விலகியிருக்கவே பெரிதும் விரும்புவதாக இன்றைய நடைமுறை எமக்கு உணர்த்தி நிற்கின்றது!

சமாதான காலத்திலும் சரி, அதற்கு முந்திய காலத்திலும் சரி, புலிகள் எண்ணற்ற மாற்று இயக்கப் போராளிகளையும், எம் தேசத்துக் குடிமக்களையும் பத்திரிகையாளர்களையும், கல்விமான்கள், அதிபர்கள் என்று புத்திஜீவிகளையும் கொன்றொழித்து வந்திருக்கின்றார்கள்!

இந்த இலட்சணத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன், தம் மீது நிழல் யுத்தம் நடத்தப்படுவதாக, தனது வருடாந்த உரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஈ.பி.டி.பி. யினராகிய நாம், கொலைகளை யார் செய்தாலும் அதை வன்மையாக கண்டித்து வந்திருக்கின்றோம்! சகோதரப் படுகொலைகள் புலித் தலைமையினால் மட்டுமே ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒன்று! ஆனாலும் இது போன்ற படுகொலைகளை யார் மீது யார் புரிந்தாலும் அது தடுத்து நிறுத்தப்படவேண்டியது ஒன்று என்றே நாம் கருதுகின்றோம்!

தம் மீது நிழல் யுத்தம் நடத்தப்படுவதாகவும் தமது போராளிகள் கொல்லப்படுவதாகவும் மக்களாகிய உங்களிடமோ அல்லது வேறு யாரிடமோ முறையிடுவதற்கான நியாயத் தன்மைகளைப் புலித் தலைமைகள் எப்போதோ இழந்துவிட்டார்கள்!

ஏனெனில், கொலைக் கலாசாரத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் புலிகளே! அதை இன்று வரை தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பவர்களும் புலிகளே! ஆகவே, கொலைகளைக் கண்டிக்கும் திராணியற்றவர்களாகவே புலித் தலைமைகள் இருக்கின்றார்கள்!

ஒரு கையால் அரவணைப்பது போல நடித்து, மறு கையால் குத்தும் நம்பிக்கைத் துரோகச் செயலில் இறங்கி மாற்று இயக்கத் தலைவர்களையும் போராளிகளையும் கொன்றொழித்தவர்கள் புலித் தலைமைகளே!

கூடப் படுத்திருந்தவனை நஞ்சூட்டியும் சுட்டும் கொன்றவர்கள் புலித் தலைமையே! சமாதான முயற்சியிலும் சமரசத் தீர்விலும் புலித் தலைமைக்கு உண்மையான ஆர்வமும் அக்கறையும் இருக்கவில்லை என்பதையே இச்செயற்பாடு எடுத்துக் காட்டுகிறது. சமாதானப் பேச்சுவார்த்தை காலங்களிலும் இராணுவ அணுகுமுறையை இவர்கள் இன்னும் கைவிட்டதாக இல்லை!

**எம் இனிய மக்களே!**

இன்றே எழுந்திடுங்கள்! நாளை இதை விடவும் தடைகள் அதிகமாகலாம்!

மக்கள்தான் தீர்மானகரமான சக்திகள்! சுயமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் மக்களுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமையினை ஆயுத பலாத்காரத்தின் மூலம் கையிலெடுப்பது என்பது ஒரு இனத்தையே முடமாக்கும் செயலாகும்!

இன்றைய சூழலில் இந்த ஜனநாயகப் பாரம்பரியத்தின் அடிப்படைக் கோட்பாட்டினை நான் உங்களிடம் தெரிவிப்பதென்பது சாலப் பொருத்தமான ஒன்றாகும்!

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் நடைமுறை குறித்தும் அதன் முடிவுகள் குறித்தும் மனம் திறந்து சில வார்த்தைகள் பேசவேண்டிய தார்மீகக் கடமை ஈ.பி.டி.பி. யினராகிய எமக்கு உண்டு!

நான் ஏற்கனவே உங்களுக்குத் தீர்க்க தரிசனமாகத் தெரிவித்திருந்தது போல் இலங்கைத் தீவின் பெரும்பான்மையான மக்கள் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்!

இது குறித்து இலங்கைத் தீவில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயக தேசத்து உறவுகள் சார்பாகவும் புதிய ஜனாதிபதி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!....

வாக்களிக்கும் உரிமை மக்களாகிய உங்களது ஜனநாயகக் கடமை! இந்த நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதில் தமிழ் பேசும் மக்களாகிய உங்களுக்கும் பங்குண்டு! ஏனென்றால் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டும்தான் இங்கு நீண்ட காலமாக இழுபட்டுச் செல்லும் இனப்பிரச்சினையின் வலியும் அதன் வேதனையும் உண்டு!

அந்த வலியைப் போக்க வேண்டுமேயானால்.... வலியின் வேதைனையில் இருந்து மக்களாகிய நீங்கள் விடுபடவேண்டுமேயானால்..... இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுடன் பேசியே ஆகவேண்டும்!

அதற்காக, யார் இந்த நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உடன்பட்டு நிற்கின்றாரோ அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யவேண்டியது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுக் கடமை!

இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கிய எமது நடைமுறைச் சாத்தியமான திட்டத்தை ஏற்றுக்கொண்டு செயலாற்றுவதற்கு கௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஈ.பி.டி.பி. யினராகிய எம்மோடு புரிந்துணர்வு கொண்டதை அடிப்படையாக கொண்டு நாம் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களை ஆதரிக்குமாறு கோரியிருந்தோம்!

மக்களாகிய உங்களது சுயமான விருப்பங்களினால்.... ஈ.பி.டி.பி. யினராகிய எமது கோரிக்கையினால்.... தேர்தலில் வாக்களிப்பதற்கும் உங்களது வாக்குகளில் பெரும்பான்மையானவற்றை மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு வழங்குவதற்கும் நீங்கள் தீர்மானித்திருந்ததை நாம் நன்கு தெரிந்து வைத்திருந்தோம்!

ஆனாலும் மக்களாகிய உங்களது வாக்களிக்கும் சுதந்திரம் அச்சுறுத்தலின் மூலமும், பலாத்காரத்தின் மூலமும், கொலைகளின் மூலமும், கொலை முயற்சிகளின் மூலமும் தடுத்து நிறுத்தப்பட்டது!

ஒரு புறத்தில் புலிகள் தாங்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாகவும் தமிழ் மக்கள் தங்களது முடிவுகளை சுயமாக எடுக்கட்டும் என்றும் கூறிக்கொண்டு, மறு புறத்தில் வாக்களிக்க எண்ணியிருந்த மக்களை தங்களது பினாமி அமைப்புகளின் பெயரால் புலிகள் அச்சுறுத்தி வந்திருக்கின்றார்கள்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து புலிகள் இந்த அச்சுறுத்தலை விடுத்தபடி இருந்தனர்.

தேர்தல் நெருங்கிவரும் தினங்களில் புலிகளின் இந்த அச்சுறுத்தல் பல முனைப்புகளிலும் பாரிய ஆயுதக் கலாசாரத்தின் மொத்த வடிவமாகத் தோன்றியிருந்தது!

தேர்தலுக்கு முந்திய தினங்களில் புலிகளின் பினாமி அமைப்புகளினால் எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

நேரடியாகவே மக்களை அணுகிய புலிகளின் உறுப்பினர்கள், வாக்களிக்கும் உரிமையைத் தடுக்கும் முயற்சியில் இறங்கியிருந்தனர்!

எமது தோழர்கள் மீதும் ஆதரவாளர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டன.

எமது கட்சி அலுவலகங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டு, தேர்தல் நடவடிக்கைகள் குறித்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

வாக்களிப்புத் தினத்தன்று வாக்குச் சாவடிகளைச் சுற்றி நின்ற புலிகளால் வாக்களிக்க வந்த மக்கள் அச்சுறுத்தப்பட்டு, துரத்தியடிக்கப்பட்டனர்.

வாக்களிக்க வந்த மக்கள் புலிகளால் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர்.

வாக்காளர் அட்டைகள் புலிகளால் பலவந்தமாகப் பறித்தெடுக்கப்பட்டு தீயில் இட்டுக் கொளுத்தப்பட்டன.

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தனது பொழிப்புரையில் அதாவது பிரபாகரனது வருடாந்த பேச்சின் விளக்க உரையில் இதை தாமாகவே ஒப்புக்கொண்டுள்ளார்!

தங்களது பினாமி அமைப்புக்கள் குண்டுகளை வீசி, தேர்தலில் மக்களை வாக்களிக்க முடியாதபடி தடுத்ததாகவும் சர்வதேச சமூகமும் இதனை தம்மிடம் கண்டித்ததாகவும் அவர் லண்டனில் நடைபெற்ற பிரபாகரனது வருடாந்த பேச்சின் விளக்க உரையின்போது தெரிவித்திருக்கின்றார்.

இந்த விசித்திரத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் அதற்கு மாறாக தனது கனவுலக கருத்தியலை வெளிப்படுத்தியிருக்கின்றார்!

**சிறீலங்காவின் அரச அதிபர் தேர்தலில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாக்களிக்காதமை புறக்கணிப்பின் காத்திரமான வெளிப்பாடாகும் என்றும், சிங்களத்தின் அரச அதிபரைத் தீர்மானிக்கும் வாக்குப் பலம் இருந்தபோதும் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்த எமது மக்கள் விரும்பவில்லை என்றும், வேட்பாளர்கள் மீதான தனிப்பட்ட விருப்பு வெறுப்பாகவோ அவர்களது கட்சிக் கொள்கைகள் மீதான தீர்ப்பாகவோ இதனைக் கருதுவது தவறு என்றும், ஒட்டுமொத்தமாகச் சிங்கள ஆட்சியமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வின் வெளிப்பாடே இதுவாகும் எனவும் தனது வருடாந்த உரையில் தெரிவித்திருக்கின்றார்!**

**இதில் எது உண்மை?....அன்ரன் பாலசிங்கம் சொன்னது போல் தமது பினாமி அமைப்புக்கள் வெடி குண்டுகளை வீசி வாக்களிக்கும் சுதந்திரத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதும் இதனை சர்வதேச சமூகமும் கண்டித்திருக்கிறது என்பதும் உண்மையா?...**


**அல்லது தமிழ் பேசும் மக்கள் தேர்தலைப் புறக்கணித்திருக்கின்றார்கள் என்று பிரபாகரன் கூறியது உண்மையா?....**

புலிகளின் கோரிக்கையினை ஏற்று மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பவர்களாக இருந்திருந்தால் புலிகள் இவ்வாறான வன்முறைகளை ஏன் மேற்கொண்டிருக்க வேண்டும் என நான் கேட்கின்றேன்?.....

வாக்களிப்பதற்கு மக்கள் விருப்பமற்றவர்களாக இருந்திருந்தால் வாக்குச் சாவடிகளைச் சுற்றி நின்ற புலிகள், வாக்களிக்க வந்த மக்களை ஏன் அச்சுறுத்தல் விடுத்து துரத்தியிருக்க வேண்டும் என நான் கேட்கின்றேன்?.....

வாக்களிக்க விரும்பியிருந்த மக்கள் மீது புலிகள் விடுத்திருந்த அச்சுறுத்தல் என்பதே ஈ.பி.டி.பி.யினராகிய எமது கோரிக்கைக்குக் கிடைத்த அங்கீகாரத்தின் மறு வடிவம் என்று மக்களே இன்று பேசிக்கொள்கின்றார்கள்!

*(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க)*





கலி சாடுந் திறனெனக்குத் தருவாய் - அடி
தாயே! உனக்கரிய துண்டோ? - மதி
மூடும் பொய்ம்மையிரு ளெல்லாம் - எனை
முற்றும் விட்டகல வேண்டும்.

- சுப்பிரமணிய பாரதியார்

# ஆத்திசூடி


## துன்பத்திற்கு இடம் கொடேல்

நீ உன் மனமும், பிறர் மனமும் துன்பப்பட இடம் அளிக்காதே.

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# திறமைசாலி



பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் போதிசத்வர் வைசிய குலத்தில் பிறந்து 'வர்த்தக சிரோன்மணி' என்று அழைக்கப்பட்டார். அவர் நல்ல அறிவாளி. எல்லா சாஸ்திரங்களையும் நன்கு கற்று உணர்ந்தவர்.

ஒரு நாள் அவர் அரச சபைக்குப் போய்க் கொண்டிருக்கையில் வழியில், ஒரு செத்த எலியைக் கண்டு, "இதைக்கூட யாராவது திறமைமிக்க இளைஞன் எடுத்துப் போய்ப் பயன்படுத்தினால் அவன் கோடீஸ்வரனாகக் கூட ஆகலாம். எதற்கும் முயற்சிதான் தேவை" எனச் சற்று உரக்கக் கூறியவாறே சென்றார்.

அதை ஆனந்தன் என்ற வாலிபன் கேட்டு விட்டான். அவன் போதிசத்வரை தெய்வத்தின் மறு அவதாரம் எனக் கருதுபவன். எனவே அவரது வாக்குப் பலிக்கும் என எண்ணி அந்த செத்த எலியை எடுத்துக்கொண்டு கடைத் தெருவிற்குப் போனான். அதை ஒரு பூனைக்கு இரையாகக் கொடுக்க ஒரு கடைக்காரன் ஒரு செப்புப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டான்.

ஆனந்தன் அந்தப் பணத்திற்கு வெல்லக் கட்டிகளை வாங்கினான். ஒரு பெரிய பானையில் நீர் நிரப்பி, அதனையும் வெல்லக் கட்டிகளையும் எடுத்துக் கொண்டு அவன் ஓரிடத்தில் உட்கார்ந் தான். அவ்வழியே பூக்காரர்கள் பூப்பறித்துக் கொண்டு செல்வார்கள். அவர்கள் அன்று ஆனந்தனைக் கண்டு, அவனிடம் வெல்லமும் நீரும் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்கள். போகும் போது ஒவ்வொருவரும் கை நிறைய பூக்களை அள்ளி எடுத்து அவனுக்குக் கொடுத்து விட்டுப் போனார்கள்.

ஆனந்தன் அந்தப் பூக்களை விற்று மேலும் வெல்லம் வாங்கி முந்தைய நாளைப் போலவே நீர்ப் பானையுடன் வழியில் உட்கார்ந்தான். அன்றும் பூக்காரர்கள் வந்து வெல்லமும் நீரும் வாங்கிச் சாப்பிட்டு நிறையப் பூக்களைக் கொடுத்துப் போனார்கள். ஆனந்தனும் அவற்றை விற்றுப் பணமாக்கி வெல்லம் வாங்கி நீர் சுமந்து வந்து தினமும் அவர்களுக்குக் கொடுக்கலானான். அவர்களும் பதிலுக்கு மலர்களைக் கொடுக்க, அவற்றை விற்று ஆனந்தன் பணம் சேர்க்கலா னான்.

அவனிடம் பத்து வெள்ளிப் பணங்கள் சேர்ந்துவிட்டன. அவன் தினமும் நீரும் வெல்லமும்

## பாப்பா முரசு சிறுகதை

கொடுப்பதை நிறுத்தவில்லை. ஒரு நாள் இடியுடன் மழையும் பெய்து அரசனின் தோட்ட மரக்கிளை களை ஒடித்து தோட்ட முழுவதும் பரப்பியது. அதை எப்படி அப்புறப்படுத்துவது எனத் தோட்டக்காரன் திகைத்தான். அப்போது ஆனந்தன் அவனிடம் "இந்த உலர்ந்த குச்சிகளையும் இலைகளையும் எனக்குக் கொடுத்தால் நான் அப்புறப்படுத்தி விடுகிறேன்" என்றான். தோட்டக்காரனும் சம்மதிக்க, ஆனந்தன் சில சிறுவர்களுக்கு வெல்லக்கட்டிகள் கொடுத்து அந்தக் குப்பையை ஓரிடத்தில் குவித்தான்.

அப்போது அரண்மனைக் குயவன் அவ்வழியே வந்து அந்த உலர்ந்த குச்சிகளையும் இலைகளையும் பார்த்து ஆனந்தனிடம் விலை பேசினான். அதற்கு இருபத்தைந்து வெள்ளிப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டான்.

ஆனந்தன் அதைக் கொண்டு நிறைய புல் கட்டுகளை வாங்கினான். அன்று அராபிய நாட்டு வியாபாரி ஒருவன் தன் ஐந்நூறு குதிரைகளுடன் அவ்வூருக்கு வந்திருந்தான். அவன் தன் குதிரைகளுக்குப் புல் வாங்க வந்து, ஆனந்தனி டம் ஏராளமான புல் கட்டுகள் இருப்பது கண்டு நல்ல விலை கொடுத்து அவற்றை வாங்கிக் கொண்டான். இதனால் ஆனந்தனுக்கு ஆயிரம் வெள்ளிப் பணம் கிடைத்தது.

ஆனந்தன் துறைமுகத்திற்குப் போய் அப்போதுதான் ஒரு கப்பல் புதிய சரக்குகளோடு வந்திருப்பதைக் கண்டான். உடனே அதன் வியாபாரியைக் கண்டு தான் அந்தச் சரக்கு முழுவதையும் வாங்கிக் கொள்வதாகக் கூறி விலை பேசி, ஆயிரம் வெள்ளிப் பணத்தை முன் பணமாகக் கொடுத்தான்.


இதற்குள் கப்பல் வந்ததையும் அதன் சரக்குகளை ஆனந்தன் வாங்கியதையும் பல வியாபாரிகள் அறிந்தனர். அவர்கள் ஆனந்தனிட மிருந்து அவன் சொன்ன விலைக்கு அச்சரக்கு களை வாங்கிக் கொண்டு போனார்கள். இதில் அவனுக்கு லட்சம் லட்சமாக லாபம் கிடைத்தது. ஆனந்தன் அதிலிருந்து ஒரு லட்சம் வெள்ளிப் பணம் எடுத்துக்கொண்டு போய் போதிசத்வரான வர்த்தக சிரோன்மணியின் முன் வைத்தான்

"தாங்கள் கூறியபடி நடந்ததால் எனக்கு நிறையப் பணம் கிடைத்தது. இதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான்.

போதிசத்வரும் "நான் சொன்னேனா? எப்போது?" என்று கேட்க, அவனும் அவர் செத்த எலியைப் பார்த்துக் கூறியதைச் சொல்லி, தான் அதனை எடுத்துப் போய் விற்று படிப்படியாகப் பணம் பெற்ற விதத்தையும் கூறினான்.

அது கேட்ட போதிசத்வர் மகிழ்ந்து அவ னுக்குத் தன் மகளை திருமணம் செய்து வைத்தார். அப்படிப்பட்ட அறிவு மிகுந்த வாலிபனை தம்முடனேயே வைத்துக் கொண்டு தன் சொத்து முழுவதையுமே அவனிடம் ஒப்படைத்துவிட்டார்.

# மாட்டு வண்டி போகுது



வண்டி வண்டி போகுது
மாட்டு வண்டி போகுது
கண்டவர் விலகி நிற்கக்
காளை வண்டி போகுது.


ரோட்டு மேலே வெள்ளம்பாய
மாட்டுக் காலை சறுக்குது
சேற்றுக் குள்ளே மாட்டிக்கொண்டு
சின்ன வெள்ளை மாயுது.

தாற்றுக் கோலை வீசவீச
தானே வெள்ளை மூசுது
பார்த்துப் பக்கம் நின்றபேர்கள்
பயத்தைக் காட்டப் பாயுது.

மாட்டு வண்டி ஓட்டும்விதம்
மகிழ்ச்சி தானே பாருங்கோ
வீட்டுச் சிறுவர் ஓட்டிப்பழகும்
விதத்தை நிதமும் காணுங்கோ.

# அதிசய உலகம்

## கொட்டைப் பாக்கு



பாக்கு மரத்தில் விளையும் கொட்டைப் பாக்கு பல விதங்களில் பயன்படுகிறது. பேனாவுக்குப் பயன்படும் கறுப்பு, சிவப்பு வண்ண மை தயாரிக்க இது பயன்படுகிறது. இதில் இருந்து பற்பொடியும் தயாரிக்கலாம்.

பாக்கு மரம் 50 முதல் 60 அடி உயரம் வரை வளரக் கூடியது. மரத்தின் அடிப்பாகம் சுமார் 6 அங்குலம் வீட்டம் உள்ளது. பயிரிட்ட ஐந்து ஆண்டுகளிலேயே மரமாகி, பழங்கள் உண்டாகின்றன. ஒரேயாண்டில் 300 பழங்கள் வரை ஒரு மரத்தில் உண்டாகும். மழை அதிகம் பெய்யும் மாநிலங்களான கேரளம், மேற்கு வங்கம், அஸ்லாம் ஆகிய மாநிலங்களில் இவை நன்கு செழித்து வளர்கின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.12.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 623**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 621

**பரிசுக்குரியவர்:**
எஸ். சுகன்யா, தரம் 2A, க/ஸ்ரீமுத்துமாரி அம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரஞ்சன் வினோ, தரம் 7K, T.V.K. மில் வீதி, செங்கலடி. | யோகராசா சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| பி.பிரதாப், 201/7 கதிரேசன் வீதி, கொழும்பு - 13. | த. திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். |
| ஐ. பிர்னாஸ், மக்குளூற்று, வெள்ளைமணல். | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| கே. சிவதர்சன், 25/14 A, சுபோதாராம வீதி, தெகிவளை. | ர. நிரஞ்சனா, தரம் 10E, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. |
| ரி. ஜெஸிக்கா, 21, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். | வி.மயூரன், தொடர்மாடிக் கட்டிடம், இம்புட்டான, முல்லேரியா. |

# உங்கள் பொது அறிவு எப்படி?

## கண்டுபிடிப்புகளும் கண்டுபிடித்தோரும்


01. இரிடியம் - டெஸ்கொற்றிலும், ரெனற் என்பவரும்
02. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று நிருபித்தவர் - சேர்.ஜே.சி.போஸ்
03. இருதயமாற்று சத்திரசிகிச்சை - கலாநிதி கிறிஸ்ரியன் பேர்னாட்
04. நவீன முறையில் பெருஞ்சாலைகள் அமைப்பு - உரோமர்
05. ஒலிம்பிக் விளையாட்டுகள் - கிரேக்கர்
06. வருடத்தை 365 நாட்களாகப் பிரித்தல் - உரோமர்
07. பட்டு நூல் நெய்தல் - சீனர்
08. சனநாயகம் (குடியரசு) - அதென்ஸ் நகர இராச்சியம்
09. ரஜீ தீவுகளைக் கண்டுபிடித்தவர் - ராஜ் மென்
10. பசுபிக் சமுத்திரத்தில் முதல் முதல் பிரவேசித்த ஐரோப்பியர் -பேர்டினன்ட் மகெலன்.
11. தேயிலையின் உபயோகத்தை முதலில் மேற்கொண்டது - சீனா
12. நாணயத்தின் உபயோகத்தை முதலில் கண்டுபிடித்தவர் - பாரசீகர்







## வெளிச்சம் தரும் பேனா

எல்.சி.டி. தொழில்நுட்பம் மூலம் இயங்கும் வெளிச்சம் தரும் பேனா ஒன்றை உருவாக்கியுள்ளனர். 3.5 அங்குலம் உயரமான இப் பேனாவின் சுற்றளவு 320 mm X 240 mm ஆகும். படம் வரையும் போதும் எழுத்துக்களை எழுதும் போதும் வெளிச்சத்தை வெளிப்படுத்தும் இப் பேனா, எதிர்காலத்தில் கணனி முறைப்படுத்தப்பட்டு இன்னும் நவீன முறையில் சந்தைக்கு வரப் போகிறதாம்.



## தற்கொலைப் படை

'சிறுத்தைத் தவளை' என அழைக்கப்படும் இத்தவளை இனமானது மிகப் பயங்கரமான விஷமுடையது. அமேசன் காட்டுப்பகுதியில் வெகு அரிதாகக் காணப்படும் இத் தவளைகளை விஷயம் தெரியாமல் விழுங்கும் பாம்புகள் உடனடியாகவே பரலோகம் சென்று விடும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஒரு வகையில் இவையும் தற்கொலைப் படைதானோ?



## ஒளிப்பதிவு செய்யும் செல்லிடப் பேசி



டிஜிட்டல் முறையில் ஒளிப்பதிவு செய்யக்கூடிய வசதி வாய்ந்த நவீன செல்லிடப் பேசி இப்போது சந்தைக்கு வந்துள்ளது. auw 32.SA என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இச் செல்லிடப் பேசி மூலம் 2 மணித்தியாலங்கள் ஒளிப்பதிவு செய்யக்கூடிய வசதி உள்ளது.


## டிஜிட்டல் புகைப்படம்


இப்போது புகைப்படங்களைச் சேர்த்து வைத்து டிஜிட்டல் தொழில்நுட்ப உபகரணம் மூலம் அவற்றைப் பார்க்க முடிகிறது. 1.6 அங்குலம் உயரமான இதன் சுற்றளவு 320mm X 240mm ஆகும். இந்த உபகரணம் எல்.சி.டி. தொழில்நுட்ப மூலம் மின் சக்தியால் இயங்குகிறது.



## கருவாட்டு மனிதன்

பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் இறந்த மனித உடல்கள் பனிப்பகுதிகளில் இருந்தும், பதப்படுத்தப்பட்ட நிலையில் மம்மிகளாகவும் கிடைக்கப்பெற்று வருகின்றமை தெரிந்ததே. தற்போது அதிசயமாக ஈரான் வடக்கில் உப்புப் படுக்கைகளுக்குள் இருந்து 1800 வருடங்களுக்கு முன் இறந்த மனித உடல் (கருவாடு) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, கலிபோனியாவில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அம்மனித உடலின் தலையினையும் அணிந்திருந்த ஒட்டகத் தோல் சப்பாத்தினையும் படத்தில் காண்கின்றீர்கள்.





## இங்கும் அங்கும்

நம் நாட்டுக் கிராமங்கள் நமக்கு நன்கு பரிச்சயமானவை. ஒரு மாறுதலுக்காக மத்திய கிழக்கு ஏமன் நாட்டு கிராமக் குடிசை ஒன்றினையே இங்கு காண்கின்றீர்கள். இங்கே ஆடு, மாடு. அங்கே ஒட்டகம். ஆனால் நம் நாட்டில் பாவனையில் உள்ள கயிற்றுக் கட்டில் அங்கும் பாவனையில் உண்டு கவனித்தீர்களா?



பிரசாந் - பூஜா
தகப்பன்சாமி

# நயன்தாராவின் நறுக்குகள்

சரத், ரஜினி என சீனியர்களோடு ஆரம்பித்து சூர்யா, சிம்பு என ஜூனியர்களோடு பயணித்துக்கொண்டிருக்கிறார் நயன்தாரா. இந்த கோலிவுட் கொழுகொழு பேபி பற்றி ஜில்லுன்னு சில தகவல்கள்...கூடவே கொஞ்சம் ஹாட்டும்....

நயன்தாரா தங்கத்திலான தாயத்துக் கட்டியிருக்கிறார். இது கேரள மாந்திரீகம் செய்யப்பட்ட தாயத்தாம்.

நயன்தாரா தன் இடுப்பில் கார்ட்டூன் வரைந்துள்ளார்.

'ஐயா' படத்தில் அறிமுகமான நயன்தாராவுக்கு சம்பளம் 6 இலட்சம். அதே சரத்துடன் தலைமகன் படத்தில் நடிக்க நயன் வாங்கியிருப்பது 30 இலட்ச ரூபாய். இப்படி மாசம் ஒரு லட்சம் என நயன்தாராவின் மார்க்கெட் ஏறிக்கொண்டிருக்கிறது.

நயன்தாராவுக்கு சின்னதாய் ஒரு வருத்தம்...பிரபல பாலிவுட் இயக்குநர் ராஜ்குமார் சந்தோஷி படத்தில் நடிக்க. சந்தோஷியே கேட்டார். இதில் நயனுக்கு சந்தோஷம்தான். என்றாலும் கால்ஷீட் இல்லாததால் நடிக்க முடியவில்லை.

ரஜினியோடு நடிச்சாச்சு, அடுத்த இலக்கு கமல்தான். ஆனாலும் கமலைத் தேடி வந்த வாய்ப்பையும் நயன்தாரா விடவேண்டிய சூழ்நிலை. 'தசாவதாரம்' படத்தில் நடிக்க இருந்த அம்மணியின் வாய்ப்பு கால்ஷீட் இல்லாததால் கைகூடவில்லை.

கேரளாவில் குளுகுளு கிளைமேட்டில் இருந்த நயன்தாராவுக்கு சென்னை சூடு செட்டாகவில்லைபோல. உஷ்ணத்தில் உடம்பில் அங்கங்கே சிறு கொப்புளங்கள் வந்து அவஸ்தைப்படுத்தியிருக்கிறது.

நயன்தாராவுக்கு மனச்சோர்வு ஏற்பட்டால் உடனே ஏ.ஆர்.ரஹ்மான் பாடல்களைப் போட்டுக் கேட்பாராம்.

சமீபத்தில் 'தலைமகன்' பட பூஜையில் கலந்துகொண்ட நயன்தாரா, தலை கிறுகிறுத்து வாமிட் பண்ணியிருக்கிறார். அதோடு 'ஈ' படப்பிடிப்பில் வாந்தியெடுத்து ஷூட்டிங் கேன்சல் ஆனது. தப்பாக நினைக்காதீர்கள். இது வெறும் பித்த வாந்தி தான்.

போதுமா நயன்தாரா பற்றிய செய்திகள்...!



அஸின்

பாரதிராஜாவின் மகன் மனோஜ், புதுமுகம் சுரேஷ்காந்த், தாமினி நடிக்க, புதுமுகம் பர்வேஸ் இயக்கும் படம் 'வாலிபன்'. வஞ்சிக்கோட்டை வாலிபன், உலகம் சுற்றிய வாலிபன் வரிசையில் இது வெறும் வாலிபன். இண்டர்நெட், ஈ-மெயில், எஸ்.எம்.எஸ். என்கிற நவீன விஞ்ஞான வளர்ச்சியை நல்லதுக்குப் பயன்படுத்தாமல் ஆபாசங்களுக்குப் பயன்படுத்தி, அதனால் பாதிக்கப்படும் இளைய தலைமுறைக்கு பாடம் சொல்ல வருகிறது இந்தப் படம்.

'தத்தித்தாவுது மனசு', 'என்னவோ புடிச்சிருக்கு' படங்களை இயக்கிய மீனாட்சி சுந்தரத்தின் அடுத்த படம் 'சாமக்கோழி'. மீனவர் சமுதாயத்துக் காதலை மையமாக வைத்து தயாராகிவரும் இந்தப் படத்தில் ரதி, உரித்த கோழியாய் கவர்ச்சி காட்டியிருக்கிறார். ஹீரோ - புதுமுகம் பரணிகுமார்.

அஞ்சுகம் கலைக்கூடம் நிறுவனத்தின் கலைஞரின் 'பாசக்கிளிகள்' படப்பிடிப்பு சாலக்குடியில் உள்ள (கேரளா) நடந்தது நவ்யா நாயர் குளித்தபடி, 'அருவியோட அருவியோட குளிக்குதம்மா குருவி' என்று பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டுமிருந்தார். திடீரென அருவியில் தண்ணீர் அதிகமாக வர ஆரம்பிக்க...நவ்யா நாயர் நடன அழகிகளிடையே இருந்து அடித்துச் செல்லப்பட்டார். உடனே படப்பிடிப்புக் குழுவினர் பாய்ந்துசென்று அவர் கீழே விழாமல் காப்பாற்றினர்.

டைரக்டர் அமிர்தம் உடனே நவ்யா நாயர் அருகே சென்று, நாளை படப்பிடிப்பு வைத்துக்கொள்ளலாம் எனக் கேட்க...அதற்கு அவர் வேண்டாம் நான் நடிக்கிறேன் எனக் கூறியபடி உடனே படப்பிடிப்புக்குத் தயாரானார். அவரை அனைவரும் பாராட்டினர். தொடர்ந்து படப்பிடிப்புக் குழுவினர் அதே இடத்தில் அந்தப் பாடல் காட்சியை நடன மங்கையர்களுடன் ஐந்து நாட்கள் படமாக்கினர்.

'அரசு', 'சத்ரபதி' படங்களைத் தொடர்ந்து ஜே.ஜே.குட் பிலிம்ஸ் பாபுராஜா தயாரிக்கும் படம் 'நினைத்து நினைத்துப் பார்த்தேன்'. செல்வராகவனின் உதவியாளர் மணிகண்டன் இந்தப் படம் மூலம் இயக்குநராகிறார். விஜய்யின் சித்தி மகன் விக்ராந்த் ஹீரோ. டெல்லி பெண் ஆஷிதா நாயகியாக நடிக்கிறார்.



சிபிராஜ் - சாயாசிங்
பட்டாசு


## சி வி ணி சி ட்

# கதை கேட்க மூடு வேணும்!

சமீபத்தில் விஜய-வாகினி ஸ்டுடியோவில் சிம்பு - நயன்தாரா நடிக்கும் 'வல்லவன்' படப்பிடிப்பு. அங்கே தன்னிடம் கதை சொல்ல வந்த ஒரு உதவி இயக்குநரை நாளைக் காலை 7.00 மணிக்கு வாங்க என சிம்பு சொல்லியிருக்கிறார். அதன்படி அந்த உதவி இயக்குநர் போனபோது... அருகேயிருந்த கிரீன் பார்க் ஹோட்டலில் அவர் தங்கியிருப்பதாக தகவல் கிடைக்கவும் அங்கே போனார் உதவி டைரக்டர். பத்துமணி வரைக்கும் ரிசப்ஷனில் காத்திருந்தார். காப்பி வந்தது. குடித்துவிட்டு மறுபடியும் காத்திருந்தார். மத்தியானமானது. சிம்பு சார் உங்களை ரெஸ்டாரெண்டில் போய் சாப்பிடச் சொன்னார்கள் என்றார்கள். சாப்பிட்டு விட்டு வந்து உட்கார்ந்திருந்தார் உதவி டைரக்டர். சாயங்காலமானது. காப்பி வந்தது. குடித்துவிட்டுக் காத்திருந்தார். இரவு ஏழுமணி இருக்கும். இன்னிக்கு நைட்டு சாப்பாடும் வாங்கிக் கொடுத்து காக்க வைப்பாரோ? என உதவி டைரக்டர் கலங்கிப்போயிருந்த நேரத்தில் சிம்புவிடமிருந்து அழைப்பு. அறைக்குள் போனார். உள்ளே சிம்புவோடு நயன்தாராவும் உட்கார்ந்திருந்தார். "இன்று எனக்கு கதை கேட்கிற மூடு இல்லை.... இன்னொரு நாள் கேட்கிறேனே" எனச் சொல்லி திருப்பி அனுப்பி விட்டார். கதை சொல்லப் போனவரின் பரிதாபக் கதை இது!

சசிகலா நடராஜனின் நெருங்கிய நண்பரும் திருச்சி அரசியல்வாதியுமான ஆர்.விஸ்வநாதன், திருச்சி பகுதியில் மிகப் பெரிய விநியோகஸ்தராய் இருந்து வருகிறார். தன் மகன் பரதனை கதாநாயகனாக்க 'நீ நான் நிலா' என்கிற படத்தை எடுத்து வருகிறார். இந்தப் படத்திற்காக 'மிஸ் குஜராத்' பட்டம் வென்ற மேக்னா என்கிற இளம் பெண்ணை கதாநாயகியாக்கியிருக்கிறார்கள்.

'ஒய்யால கவுத்துப்புட்டாளே எம்மனச' என இந்தப் படத்தில் ஒரு டப்பாங்குத்துப் பாட்டு வருகிறது. தீனா இசையில் இந்தப் பாடலை பாடியிருக்கிறார் சிம்பு.



சௌந்தர்யா

## இரசிகர்களைக் கவரும் நமீதாவின் ராஜதந்திரம்

நமீதா, சரத்குமார் ஜோடியாக 'ஏய்' படத்தில் உடலைக் கச்சிதமாக வைத்திருந்தார். சத்யராஜ் நடித்த இங்கிலீஷ்காரன், சரத்குமார் நடித்த சாணக்யா படங்களிலும் நமீதா தன் உடல் ஸ்லிம்மாக ஜிம்முக்கு சென்று உடற்பயிற்சி செய்து வந்தார்.

இரசிகர்களைக் கவருவதற்கு நமீதா தினமும் தனது இரசிகர்களுடன் ஈ-மெயில் மூலம் பேசிவருகிறார். நமீதாவின் உடல் அழகை வர்ணித்து வரும் கடிதங்களுக்குக்கூட தவறாமல் பதில் அனுப்பி வைக்கிறார் என்பதுதான் இதில் ஆச்சரியம்.

# 'பட்டாசு' வில் வாரிசுகள்

'பட்டாசு' ஆரம்ப பூஜை ஏவி.எம்.ஸ்டுடியோ பிள்ளையார் கோயிலில் நடந்தது. சத்யராஜ் - மகேஸ்வரி தம்பதிகளின் வாரிசு சிபிராஜ், தயாரிப்பாளர் ஷீலா தம்பதியின் வாரிசு விக்ராந்த், தயாரிப்பாளர் இயக்குநரான திருவள்ளுவர் கலைக்கூடம் வீ.சேகர் - செல்வி தம்பதியின் மகன் - இந்தப் படம் மூலம் தயாரிப்பாளரான எஸ்.கார்ல்மார்க்ஸ் - ஆகிய மூவரையும் அவரவர் பெற்றோர்களே பூஜையில் கலந்துகொண்டு வாழ்த்தியதுதான் சிறப்பாகும். தொடர்ந்து இயக்குநர் ஷக்தி சிதம்பரம் மூன்று படங்களுக்கு மேல் சத்யராஜைக் கொண்டு வித்தியாசமாக நடிக்க வைத்ததுபோல சிபிராஜை 'பட்டாசு'வில் மாறுபட்ட கேரக்டரில் நடிக்க வைக்கிறார்.

# ரம்பா தெலுங்கில் நடிக்கிறார்

நடிகை ரம்பா சொந்தப் படமான 'த்ரீ ரோஸஸ்' படத்தை தன் சகோதரன் வாசு பெயரில் தயாரித்து பெரும் நஷ்டமானார். மீண்டும் தமிழ்ப் படங்களில் நடிக்கும் வாய்ப்பும் குறைந்தது. இப்போது ரம்பா ஆந்திரா பக்கம் போய்விட்டார். மூன்று நடிகைகளான ரம்பா, லட்சுமிராய், அபிநயஸ்ரீ சம்பந்தமான கதை. செல்வேந்திரன் இயக்கிவரும் தெலுங்குப்படம் முடியும் தறுவாயில் உள்ளது.

'கருப்பன்' படத் திட்டம் கைவிடப்பட்டதும் சற்றே ஒதுங்கியிருந்த 'விரும்புகிறேன்' 'ஃபைவ் ஸ்டார்' படங்களின் இயக்குநர் சுசிகணேசன் இப்பொழுது 'காக்க காக்க' வில்லன் ஜீவன் நடிக்க புதிய படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

கண்ணன் என்பவரது இயக்கத்தில் பிரஷாந்த் 'வித்தகன்' எனும் படத்தில் பல தரப்பட்ட பாத்திரங்களில் நடிக்க உள்ளாராம். 'கண்ணன், 'சிட்டிஷன்' ஷரவண சுப்பையாவிடம் இயக்குநர் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கார்த்திக்கை வைத்து 'மிஸ்டர் கார்த்திக்' உட்பட இரண்டு படங்களைத் தயாரித்தவர் சரத்குமார். இப்பொழுது சரத்தின் நூறாவது படமான தலைமகனில் அந்த நன்றிக் கடனுக்காக(?) கெஸ்ட் ரோலில் நடிக்க சம்மதித்துள்ளாராம் கார்த்திக்.



வீவேக்
பட்டாசு



# ‘ஜெயம்’ – ரவிக்கா? ரஜினிக்கா?

ரஜினியின் மூத்தப் பெண் ஐஸ்வர்யா, தனுஷைக் காதலித்து கரம்பிடித்தவுடனேயே ரஜினியின் இளைய பெண் வாரிசு சவுந்தர்யாவின் சாய்ஸ்...யாரென்று சொல்லி கோலிவுட்டில் பெட்டிக் கட்டாத குறையாகச் செய்தி பரவி வருகிறது.

தமிழ்த் திரைப்படங்களில் கிராபிக்ஸ் மற்றும் அனிமேஷன் இத்யாதி, இத்யாதி, கம்ப்யூட்டர் துறை சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்ய ஆரம்பித்திருக்கும் சவுந்தர்யாவின் சாய்ஸ்...வேறு யாருமல்ல...நீங்கள் நினைப்பது மாதிரி சாட்சாத் ஒரு நடிகர்தான். அவர் ‘ஜெயம்’, ‘எம்.குமரன் சன் ஆ.்.ப் மகாலட்சுமி’, ‘தாஸ்’, ‘மழை’ என்று தொடர் வெற்றி தந்துவரும் கதாநாயகர் ஜெயம் ரவிதான்.

‘ஜெயம்’ ரவியும் சவுந்தர்யாவும் சமீபகாலமாக நல்ல நண்பர்களாக நெருங்கிப் பழகி வருவதுடன் ஒருவரை ஒருவர் விரும்புவதாகவும் தெரிகிறது. இருவரும் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை - சில வாரங்களில் மூன்று நான்கு நாட்களுக்குக்கூட சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கிங்ஸ் பார்க் ஹோட்டலுக்கு ஒரே காரில் சேர்ந்தே வந்து இரவு டின்னர் சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாகச் சென்றிருக்கின்றனர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்புவரை சவுந்தர்யா விஷயத்தில் ரஜினியின் ரியாக்ஷன்....

இவ்விஷயம் கேள்விப்பட்டதும் சவுந்தர்யாவை அழைத்து ரஜினி கண்டித்ததுடன்... “உன் விருப்பத்தை என்னிடம் சொல். நான் நிறைவேற்றி வைக்கிறேன்” என்று உறுதியும் அளித்திருக்கிறார். கூடவே இனி அதுமாதிரி ஜெயம் ரவியுடன் ஹோட்டலுக்கெல்லாம் சாப்பிடச் செல்வதையும் தவிர்க்கவும் என்று சொல்லியுள்ளாராம்.

தன் இரண்டு மகள்களுக்குமே நடிப்புத்துறையில் இருந்தே மாப்பிள்ளை அமைவதை ரஜினி விரும்பவில்லை. வேறு துறைகளில் மருமகன் தேடுகிறார். அதனால்தான் இவ்வாறு சவுந்தர்யாவுக்கு தடை விதித்திருக்கிறார் என்று இவ்விஷயம் பற்றி செய்திகள் வெளிவந்தாலும், ஜெயம் ரவியை இரண்டாவது மருமகனாக்கிக் கொள்வதில் ரஜினிக்கு எந்தத் தயக்கமும் இல்லை. ஆனாலும் கல்யாணத்திற்கு முன் பெண்கள் கட்டுப்பாடுடன் இருக்கவேண்டும் என்று ஒரு பொறுப்பான அப்பாவின் ஸ்தானத்தில் இருந்துதான் மேற்படி சவுந்தர்யா - ஜெயம் ரவியுடன் டின்னருக்கு ஹோட்டல்களுக்குப் போவதற்குத் தடை விதித்திருக்கிறார் ரஜினி என்றும் கூறுகிறார்கள்.

அதே மாதிரி ஜெயம் ரவியின் தந்தை ‘எடிட்டர்’ மோகனும் ரஜினியும் நல்ல நண்பர்கள். எனவே எடிட்டர் மோகன் தயாரிப்பில் ரவியின் அண்ணன் ‘ஜெயம்’ ராஜா இயக்கத்தில் ரஜினி ஒரு படம் நடிப்பதாக இருந்தது. ஏவி.எம்.தயாரிப்பில் ரஜினி நடிக்கும் ‘சிவாஜி’ படத்திற்கு முன்னதாகவே உருவாக இருந்த படத் திட்டம் கைவிடப்பட்டதற்குக் காரணமும் மேற்படி ஜெயம் ரவி - சவுந்தர்யாவின் நெருக்கம்தான் என்றும் சொல்லப்படுகிறது. ஜெயம் ரவி ஜெயிப்பாரா?



சௌந்தர்யா

## நமீதாவின் தாராளம்

‘இங்கிலீஷ்காரன்’ உட்பட இரண்டொரு படங்களில் இணைந்ததன் மூலம் சத்யராஜின் ஆஸ்தான(!) நாயகி எனப் பெயர் பெற்ற நமீதா, புதிதாக உருவாகும் ஒரு படத்தில் சத்யராஜின் வாரிசு சிபிராஜ் ஜோடியாக நடிக்கவிருக்கிறார் எனும் விஷயம் கேள்விப்பட்டு விசாரணையில் இறங்கினோம்.

அது உண்மைதான் எனும் விஷயம் விளங்கியது.

அதாகப்பட்டது, சத்யராஜுக்கு மிகவும் நெருக்கமான இயக்குனராகிவிட்ட சக்திசிதம்பரம் தன் மகன் ஷக்தி ப்ரிதம் பெயரில் ‘சினிமா பரடைஸ்’ என்னும் புதிய பட நிறுவனத்தை தொடங்கியுள்ளார். அந்நிறுவனத்தின் முதல் தயாரிப்பாக ‘கோவை பிரதர்ஸ்’ எனும் புதிய படம் ஒன்றையும் இயக்குகிறார். இதில் சிபிராஜ் சத்யராஜ் இருவருமே கதாநாயகர்கள். மேற்படி இந்தப் புதிய படத்தில்தான் சத்யராஜுக்கு ஜோடியாக வேறொரு கதாநாயகியும்...அநேகமாக அறிமுகமாம். சிபிராஜுக்கு ஜோடியாக நமீதாவும் நடிக்கவிருக்கின்றனர்.



சூர்யா - அஸின்
கஜினி

‘கோவை பிரதர்ஸ்’ படத்தில் சத்யராஜும் சிபிராஜும் மேற்படி டைட்டில்படி அண்ணன் தம்பி யும் இல்லை, அப்பா-மகனும் இல்லை. புது மாதிரியான ஒரு கதை என்கின்றனர் கோடம்பாக்கத்தில். அப்படி என்ன மாதிரியோ...அவர்களுக்கே வெளிச்சம்.

கொசுறு : கோவை பிரதர்ஸ் படத்திற்காக சமீபத்தில் மகாபலிபுரம் கடற்கரை பகுதியில் இன்விடேஷன் கார்டு மற்றும் தொடக்கவிழா போஸ்டர், பேப்பர் விளம்பரங்களுக்காக ஒரு இரண்டு நாள் ‘போட்டோ செஷன்’ வித் ஷூட்டிங் நடந்திருக்கிறது. சத்யராஜின் மேற்பார்வையில் சிபிராஜும் நமீதாவும் அத்தனை நெருக்கமாய் கிறக்கமாய் இருப்பது போன்று விதவிதமான ஏழெட்டு ஸ்டில்கள் எடுக்கப்பட்டதாம். அப்பா என்பதால் சிபியும், தன் முந்தைய சில படங்களில் ஹீரோ என்பதால் நமீயும் சிறிதும் சங்கோஜப்படாமல் வெறும் தலைவாழை இலைகளை உடம்பு முழுக்க (உள்ளாடைகளுடன்தான்) சுற்றிக்கொண்டெல்லாம் போஸ் கொடுத்து சபாஷ் வாங்கியுள்ளனர் என்றால் பாருங்களேன்...!

சரவணா படத்தில் ஜோதிகாவுடன் மேக்னா நாயுடுவும் நடிக்கிறார். ஸ்பாட்டில் அம்மணிக்கு சிக்கன், மட்டன் எல்லாம் பெரிதாகத் தேவையில்லையாம். பதினைந்து சப்பாத்தியும் பயித்தம்பருப்பு டாலும் இருந்தால் போதுமாம். ஒரு நாளைக்கா...? இல்லை.... ஒரு வேளைக்கு.

## எஸ்.ஜே.சூர்யா நடிக்கும் புதிய படம்

‘நியூ’, ‘அன்பே ஆருயிரே’ வெற்றிப் படங்களைத் தொடர்ந்து எஸ்.ஜே.சூர்யா ஒரு புதிய படத்தில் நாயகனாக நடிக்கிறார். இன்னும் பெயர் சூட்டப்படாத இந்தப் படத்தை ஆர்.உதயகுமார் எஸ்.எம்.புரொடக்ஷன்ஸ் சார்பில் தயாரிக்கிறார். இவர் இயக்குநர் ஷங்கரின் ‘காதலன்’, ‘ஜீன்ஸ்’, ‘இந்தியன்’, ‘முதல்வன்’, ‘பாய்ஸ்’ போன்ற படங்களுக்கு மனேஜராகப் பணிபுரிந்தவர். எஸ்.ஜே.சூர்யாவின் அன்பே ஆருயிரே படத்தின் இணைத் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யாவிற்கு ஜோடியாகப் பிரபல முன்னணிக் கதாநாயகி ஒருவர் நடிக்க இருக்கிறார். இந்தப் படத்தின் கதை-திரைக்கதை எழுதி இயக்கும் பொறுப்பேற்றிருப்பவர் எஸ்.ரவிமரியா. இவர் எஸ்.ஜே.சூர்யாவின் சிஷ்யர். ஏற்கனவே அவரிடம் குஷி - தமிழ் - தெலுங்கு - இந்தி - ‘நியூ’, ‘அன்பே’ ‘ஆருயிரே’ போன்ற படங்களுக்கு இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

இந்தப் படத்திற்கான தொழில்நுட்பக் கலைஞர்களின் தேர்வும், நடிகர் - நடிகைகளின் தேர்வும் மும்முரமாக நடந்து வருகிறது. ஆரம்பப் பூஜையுடன் படப்பிடிப்பும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

## நிஜமான படைப்பாளி டைரக்டர் மகேந்திரன்!

**—நடிகர் விவேக்**

டைரக்டர் மகேந்திரன் இயக்க, ரஜினி நடித்த ‘முள்ளும் மலரும்’ படத்தில் ‘செந்தாழம்பூவில்’ பாடலுக்கு முன்னால் ஒரு காட்சி இருந்தால் நல்லது என்று எண்ணினார் டைரக்டர். தயாரிப்பாளரோ அந்தக் காட்சி தேவையில்லை; எடுத்தது போதும்....இதற்குமேல் நான் செலவழிக்கத் தயாரில்லை என்று சொல்லிவிட்டார்.

விஷயமறிந்த கமல் தன் சொந்தச் செலவில் ஒரு நாள் படப்பிடிப்பு நடத்தி அந்தக் காட்சியை எடுத்துக்கொடுத்தார். இதுபோல் இப்போது படப்பிடிப்பு நடந்து வரும் ‘அகரம்’ படத்தில் தான் நடித்தது வரையிலான காட்சிகளைப் பார்த்தார் விவேக். இன்னும் ஒரு சில படப்பிடிப்பு நடத்தி சில சீன்கள் சேர்த்தால் காமெடி சிறப்பாக அமையும் என்பது புரிந்தது. தயாரிப்பாளரிடம் போய் கேட்டார் விவேக். எடுத்தவரை போதும் என்பதே தயாரிப்பாளரின் பதிலாக இருந்தது. நிலைமையைப் பார்த்தார் விவேக். தன் சொந்தப் பணத்திலேயே ஒருநாள் சில காட்சிகளையும் படமாக்கி காமெடியை நிறைவு செய்துவிட்டார். டைரக்டர் மகேந்திரன் போல் விவேக்கும் நிஜமான படைப்பாளி அல்லவா?

தனுஷ் ‘திருவிளையாடல்’ படத்தை முடித்த கையோடு கவுதம் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார். அதற்குள் கவுதமும் கமலின் ‘வேட்டையாடு விளையாடு’ படத்தை இயக்கி முடித்துவிடுவாராம்.

இதுநாள் வரை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சிம்பு நடிக்கும் ‘சரவணா’ படம் மகாபலிபுரம் பகுதியில் படப்பிடிப்பு கண்டு வந்தது. தற்போது காரைக்குடிக்கு இருபதுநாள் அவுட்டோர் கிளம்பியுள்ளது.

தற்போது சீமான் இயக்கத்தில் ‘தம்பி’ படத்தில் நடித்து வரும் மாதவன் அடுத்து ஜீவா இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## செந்திலின் ஆன்மீகப் பயணம்

நடிகர் செந்தில் சினிமாவில் சிரிப்பு நடிகராக இருந்தாலும் நிஜத்தில் சீரியஸாய் ஒரு தனிப்பாதையில் போய்க்கொண்டிருக்கிறார். அதாவது முழுக்க முழுக்க ஆன்மீகச் சிந்தனையில் இருக்கிறார். உதவி என்று யார் வந்து கேட்டாலும் அள்ளிக் கொடுப்பார் செந்தில். அதிலும் கஷ்டப்படுகிற நாடக நடிகர்களுக்கு இவர் ஒரு ஹீரோ மாதிரி. நடிகர் சங்கத் தேர்தலில் செயற்குழு உறுப்பினருக்குப் போட்டியிட்ட செந்தில், பிரபலமான ஹீரோக்களைவிட அதிக வாக்குகள் வாங்கினார். காரணம்...அவரின் உதவும் மனப்பான்மைதான். சமீபகாலமாக ஆன்மீகப் பணிகளுக்கும் நிறையச் செலவிடுகிறார். கடந்த பல வருடங்களாக சபரிமலைக்கு மாலைபோட்டுச் செல்லும் செந்தில் இப்போது ராகவேந்திரா கோயிலுக்கும் மாலைபோட்டுச் செல்கிறார். நாம் அவரைப் பார்த்தபோதுகூட ராகவேந்திரரை தரிசிப்பதற்காக மாலை போட்டிருந்தார். இந்த ஆன்மீக ஈடுபாட்டிற்கு என்ன காரணம்? என செந்திலிடம் கேட்டால்..... “மனசு நிம்மதியா இருக்குண்ணே” என்கிறார் செந்தில் வெள்ளைச் சிரிப்போடு.

பாலாவின் உதவி இயக்குநர் ரவி இயக்கும் ‘ஆச்சார்யா’ படத்தின் படப்பிடிப்பு தர்மபுரி ஐ.டி.ஐ.யில் நடந்தது. அன்று ஷூட்டிங் பார்க்க வந்த யாரையும் ஐ.டி.ஐ. உள்ளே அனுமதிக்கவில்லை. காரணம்...அன்றைய தினம் நடந்த ஷூட்டிங்கில் காட்சிப்படி விக்னேஷ் பிறந்த மேனியோடு நடித்துக்கொண்டிருந்ததுதான்.



ரமேஷ் - பிரியாமணி
மது




## வரிசைகள்....!

எங்கும் எதிலும் மனித
வரிசைகள்...
கால்கள் கடுக்க
காத்திருப்பு!

காலங்களின் முதுகுகளில்
அமர்ந்து காரியங்கள்
சாதிக்கின்ற
மனித ஜாதி...
காரியாலயத்தினுள் வேர்கள்
முளைத்த கால்களுடன்
எங்கும் அசைய முடியாமல்!

பத்து•நிமிட வேலை
பல மணித்தியாலங்களை
மென்று ஏப்பமிடும்!
காலமகள் மனித வரிசைகளில்
கரைந்து போவாள்!!

எத்தனை வேலைப்பளு...
அத்தனையும்
காரியாலயத்தினுள்
முடங்கிப் போகுமே...!

நியாயம் பேச முடியாமல்
எச்சிலை மட்டும் விழுங்கி
விழிகள் சிவக்கின்ற
மனித முகங்கள்தான்
எத்தனை....?

அவர்களுக்கென்றே
அமர்த்தப்பட்ட
ஊழியர்கள் கால உண்ணிகளாகி
அவர்களின் காலக் கனிகளை
இவர்களே தின்று தீர்ப்பார்கள்

வரிசையின் இறுதியில்
நின்றவன் மனம் சலித்து
மீண்டும் அதே காரியாலயத்தில்
நாளைய விடியலிலும்
இன்றைய வேலைக்காய்
உடல் அலுத்து நிற்பான்!

இப்படி எத்தனை மனித
மணித்தியாலயங்களை
தின்று சீரணிக்கின்றன
இந்தக் காரியாலயங்கள்!!

–அநுராதபுரம் ரஹ்மத்துல்லா,

## உயிரில் எரிகிறது

அழிந்தது
உன்
ஆறாவது அறிவு
நீ
துப்பாக்கி
பிடித்தபோது!

பிறந்தாய்
குழந்தையாக
வளர்ந்தாய்
சிறுவனாக
உருவானாய்
வாலிபனாக
வயோதிபம்
அடைந்தாய்
மரித்தாய்
மனிதனாகாமலேயே!

கல்லறை
நீயும்
மரணிப்பாய் என்றது
சிறைச்சாலை

நீ
மிருகம் என்றது
உலகம் மட்டும்
உன்னை
மனிதன் என்கிறது.

ஏழாவது
அறிவோடு
அவன்
நிற்கிறான்
உடலில்
வெடிகுண்டுகளோடு!

சொர்க்கம்
தேவையில்லை
நரகங்களை
அதிகரியுங்கள்
என்றார்
பூமிக்கு வந்து
திரும்பிய கடவுள்!

–ஏ.சி.றாஹில்.

## காசிப் பெண்கள்

மாசிலா மனமும்
மங்கை நற்குணமும்
பேச்சினிற் குயிலும்
பேரெழில் அமைவும்
வீசு தென்றலாய்
வேறு பலவிருந்தும்
காசில்லை என்றால்
காசினியிற் பெண்கள்
கால்தூசன்றோ
இன்று.

–மெய்யன் நட்ராஜ்.

## புரிந்திடு....



கண்ணீர்
செத்துவிட்டதாக
இமைகள்
சொல்லியது

இதயம்
ஓய்வெடுத்துவிட்டதாக
என்னுயிர்
சொல்லியது



இடது கையின்
பெருவிரலுக்கு
என்னை
அடையாளம்
தெரியாதென்று
வலது கையின்
பெருவிரல்
அடித்துச் சத்தியம்
செய்தது

நகங்கடித்து(த்)
துப்பிய வேளையிலே
விரல்கள்
நகம் எனக்கில்லை
என்றெல்லாம்
உன்னோடு
பேசியதாம்



இத்தனையும்
இன்றுதான்
அவர்களது
வீட்டுக்கு
எச்சித் தண்ணீரில்
கிடைக்கும்
கழிவுகளை
உண்பதற்காக(ச்)
செல்லும் - காக்கையாய்
சென்று
அறிந்தேன்.

–அ.கா.மு.றிஸ்வின், மூதூர் – 01.

## ப்ரியமான பதீர்

உன்
இதழ்களின்
ஸ்பரிசத்தில்
கரைந்து
போகிறேன்....

உன்
சுவாசம்
வழி
நுழைந்து
உனக்குள்ளே
கலந்து
போகிறேன்.

ப்ரியமானவனே
ஏன்
என்னை
தேர்ந்தெடுத்தாய்?
என்
வெள்ளைநிற
அழகிலா?
இல்லை
ஒல்லி
உடம்பு
வாகிலா?

உன்
ஒவ்வொரு
மணித்தியாலயங்களையும்
நிமிடங்களையும்
சுகமானதாக்கி
உனது
கவலைகளுக்கு
விடை
கொடுக்கிறேன்
அதனாலா?

–அகிலா ஜெகதீஸன்,
நாவலப்பிட்டி.

## குழி வேண்டாம் ஒளி தேடு....!

ஒளிமயமான
வாழ்க்கை
இப்போது
உருண்டு திரிகிறது
இருளுக்குள்!

ஒளிமயமாக்க
வந்த மனிதன்
குழி தோண்டத்
தொடங்கியதால்
ஒளியிழந்து
வழி தெரியாமல்
திரிகிறது
வாழ்க்கை வண்டி!

நரகத்தை
நோக்கியே இது
நகர்கிறது தினமும்!

ஓ...குருட்டு வாழ்க்கை
இப்போது
மனிதனுக்குள்
குடிகொண்டுவிட்டதனால்
இருட்டு வாழ்க்கையாகிவிட்டது
இனிய வாழ்க்கை!

அடேய்...மனிதா
நீ குழிதோண்டியது போதும்
நிறுத்து உன்
குருட்டுக் கொள்கையை!

இனியாவது
ஒளியைத் தேடியே
உன்து நடையைப் போடு....
உலகம் உன்னை
வாழ்த்தும் (பாரு)!

–வில்லுரான்.

## உன் ஞாபகம்

இன்றும் மனதில்
ஓர் ஓரமாய்
உன் ஞாபகம்....

சுறுசுறுப்பை சுற்றிக்
கொண்டு,
புத்தகச் சுமையை
வாரி அணைத்தபடி
அவ் வழியே
வரும் போது

வழியிலே நீ....
எனை பார்க்காமல்
இருக்கமாட்டாய்
கிடைக்குமா,
கிடைக்காதா
என்ற உன் ஏக்கம்
விழிகள் வெளியிட
கெஞ்சுகின்ற
உன் புன்னகை.

இதற்காகவே
தினமும் ஒரு ரூபாய்
உன்னிடம்
நீட்டாமல்
போகமாட்டேன்.

இன்றும் மனதில்
ஓர் ஓரமாய்
உன் ஞாபகம்....

நகர
பிச்சைக்காரர்களை
பார்க்கும் போது,
மற்றவர்களை
தொல்லை
செய்யாமல்
நீ யாசிக்கும் பண்பு
இங்கு யாரிடமும்
இல்லை.

–ந.ரிஷா பன்னீர்,
புசல்லாவை.

## எத்தினை நாள்தான் அழுவது



ஏழ்மையின் பிடியில்
ஏக்கப் பெருமூச்சுவிட்டவன்
ஏங்கிப் போனான்
ஏழ்மையானதால்
ஏன் இந்த வாழ்வு என
எண்ணி எண்ணி
எப்படி வாழ்பவன் என
எத்தனைநாள்தான் அழுவது
ஒரு நாள் ஒரு முடிவு வேண்டும்
ஒப்பமிட்டுச் சொல்கிறேன்
ஒய்யாரமாக ஒரு நாள் வாழ்ந்தேனும்
ஒடுங்கிச் சாவேன்.

ஏ.எஸ்.எம். ரவூப், கொழும்பு 15.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உயிரின் அந்தரங்க ராஜ்ஜியத்தின் மொழிக்கூறு. மனித நாகரீகத்தில் மொழி, மனிதனுக்கு பண்பு செதுக்கி வைத்தது. கலாசாரக் கண்ணியத்துள் மொழி, மனிதனுக்கு மானம் காத்தது. நினைக்க நினைக்க இனிக்கும் அமுதமாய் கவிதை, மொழி மாட்சியின் முத்துக் கிரீடமானது உணர்வின் வெளிப்பாடு மொழி உள்ளத்தின் ஓவியம் கவிதை.*

*என் சிந்தனை கங்குகளில் சேமித்த திராட்சை மது மொழிக்கிண்ணத்தில் நிரப்பப்பட்டிருக்கிறது. எனக்குள் இருக்கும் இந்திர தாகத்தால் பட்ட வலிகளின் படிமவெளிப்பாடு பவனி வருகிறது. என் கிராமத்தின் சருகு நிறைந்த ஒழுங்கைகளில் சிந்தனைகள் சிதறிவிட்டுச் சென்ற சாம்ராஜ்ஜிய கனவுகளின் சங்கீதவாசம், இங்கே! தெளிக்கப்பட்டிருக்கிறது என்று தன்னை அடையாளப்படுத்தி கவிஞர் கு. றஜீபன் எழுதியிருக்கும் அவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பான 'வலிகளைத்தாங்கி...' தொகுப்பிலிருந்து இரண்டு கவிதைகள்.*

## கிராமத்தின் புழுதி மண்ணில்

எங்கள் கிராமத்து
செம்மண்ணில்
செருப்பில்லாத
பாதங்களோடு
நடக்கும் சுகம்
இருக்கிறதே
அது!
சொல்லில் அடங்கா
ஒத்தையடி பனைவளவும்
ஓரமான
மாங்கூடலும்,
கச்சைகட்டிய
சணல் காடும்
எங்கள்
காதலர்பூமி.

ஒத்தை வயல் வரம்பிலே
வைச்சு மெல்ல வைச்சு
பாதம், வைச்சு வரும்
மாமன், மகள் காண
மாலை மசக்கத்தில்
ஒத்தைப் பனை ஏங்கும்.

அவ!
கஞ்சி கொண்டு வருவா
நெஞ்சை
நெருஞ்சிமுள்ளா
குத்துவா.

தண்ணி மோண்டு
குடம் சாய்த்து இடுப்புல
அவ
தானானே பாடிச்செல்ல
புழுதிக்காட்டு
மண்கூட
புல்லரிக்கும்.

தூண்டில் மீனு
கண்ணழகி
தூக்குச்சட்டி
கையிலேந்தி
ஒய்யார வண்ண மயில்
எம்பாட்டுக் கேட்டு
எதிர்ப்பாட்டுச் சொல்வா

ஏர் பிடிக்கும் போதும்
களை எடுக்கும்போதும்
அவபாட்டுக் கேட்டால்
குயில் கூட
குரல் மாற்றும்.

சேத்து மண்ணில்
கால் மிதித்து
நாத்து நடும்
அழகு காண
நாவில் ஊறும்
நாட்டுப்பாடல்

பூத்துச்சிரிக்கும்
கொன்றைகளும்
காட்டு மூங்கில்
கானமும்
கதைகள் சொல்லும்
எங்கள் கிராமத்தில்

குழை வாழை
தலைசாயும் மெல்ல
குயில் கூவும்
அதன்மேல புள்ள
குடை விரித்த
வாகையிலே
ஏணைக்கட்டி
கொஞ்சு தமிழ்
தாலாட்டி
குழந்தை தூங்கும்
கிராமத்தில்.

கோரை விரித்த
புல்வெளியில்
கோகுலம் காணும்
சுகம்தான்
மார்பைமுட்டி
பால்குடிக்கும்
குழந்தைச் சிரிப்புப்
போல

ஈரமண்ணில்
தம்பளப் பூச்சிகள்
கம்பளம் விரிக்கும்
அதைப் பிடிக்கும்
பிஞ்சுவிரல்கள்

பொன்வண்டு பிடிக்கும்
சின்னவண்டுக் கூட்டம்
புதுப்பாடல் சொல்லும்
பொருளல்லோ

எங்கள்
கிராமத்து மண்ணில்
கிளிகள் கொத்தும்
கொல்லைப்
பழங்களால்
வெற்றிலைபோட்ட
சிவந்த உதடுகள்.

எங்கள் கிராமியம்
மணக்கிறது
கொவ்வையிலே
பால்கறக்கும் சத்தம்
பள்ளிப்பாடல்
சொல்கிறது.

இது!
தமிழ் வாழும்
கிராமம்

கிராமத்து மண்கள்
கிறுக்கும் கோலம்
உயரத்து
வாழ்க்கையின்
அத்திவாரம்தானே!

## நீண்ட பொழுதில்

காத்திருக்கிறோம்
முட்கம்பிகள் அகற்றும்
நாட்களுக்காய்
கொதிக்கும்
குழம்புக்குள்
குடும்பம் நடத்தும்
எங்கள் இனத்தின்
ஈர்விடியலுக்காய்
ஒரு
நீண்பொழுதில்
வறண்டுபோன
கனவுகளோடு
சாயம்போன
ஆடைகளோடும்
காத்திருக்கிறோம்.

முரண்களையே
உரசி உரசி
சீர் செய்யப்படாத
எங்கள் சமன்பாடுகளை
திருத்தப்போவது யார்?


கோம்பை காந்தும்
எங்கள்
ஏழைச்சிறார்கள் மீது
இன்னும் ஏன்
வெளிச்சம்
பாய்ச்சவில்லை

வண்டுத
வாய்நெகிழும்
வாசமலரரும்புகள்
சலங்கைகட்டிச்
சரமிடும் சங்கீதம்
இனி! கேட்குமா?
நீண்ட வரிசையில்
கலப்பட
நிவாரணங்களுக்காய்
இனியும்
காத்திருப்போமா?


விழித்திருக்கிறோம்
நீண்டபொழுதில்...
மனிதம் மலர்வதற்காய்
நிச்சயம்!
இன்றோ நாளையோ
தேதி குறிக்கப்படும்,
என்ற நம்பிக்கையில்
நீண்ட பொழுதில்....

பட்டைகோலும்
நீரில்
பவித்திரம் இருப்பது
போல்
நாம்
சிறகுவிரிக்கும்
இளவேனில் எப்போது?

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : எ.ஜெஸ்மின்.
வயது : 21
முகவரி : 385/1, O.P.O வீதி, கல்முனை – 06.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர் : எச்.எம். நபார்.
வயது : 23
முகவரி : 58, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
பொழுதுபோக்கு : பத்திரிகை, பேனா நட்பு.



பெயர் : எஸ். தேவதாஸன்.
வயது : 26
முகவரி : P.O. Box - 16869, Al - Ain, U.A.E.
பொழுதுபோக்கு : சினிமா, கிரிக்கெட்.



பெயர் : ஏ. யான்சன்
வயது : 29
முகவரி : P.O. Box - 40236, Doha - Qatar.
பொழுதுபோக்கு : பத்திரிகை, தொலைக்காட்சி.




# குழந்தை வயிற்றுப்போக்கிற்கு இயற்கை சிகிச்சை

பச்சிளம் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படுவது மிகவும் சகஜமானதே. குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைதல், சீர்குலையும் ஆரோக்கியம் மற்றும் செயலின்மைக்கு வயிற்றுப்போக்கும் ஒரு காரணம். பல நாடுகளில் குழந்தைகளின் மரணத்திற்கு வயிற்றுப் போக்கு பெரும் காரணமாக அமைந்துவிடுகிறது. திடீர் வயிற்றுப்போக்கின் போது, சோடியம், பொட்டாசியம் போன்ற எலக்ட்ரோலைட்டுகள் மற்றும் உடலில் உள்ள நீர் பெரிதளவு வெளியேறுவதற்கு விரைவில் மாற்று வழிகள் செய்ய முடியாமல் போகும்போது குழந்தைகள் இறக்கின்றன. குறிப்பாக 6 மாதங்கள் முதல் 2 வயது வரையான குழந்தை களுக்குத் திடீர் வயிற்றுப்போக்கு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது.



***அறிகுறிகள் :***

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்கு 2 விதம். ஒன்று சாதாரணமானது, மற்றது கிருமியால் ஏற்படுவது. சாதாரண வயிற்றுப் போக்கின் போது வாந்தி மற்றும் வயிற்று வலி ஏற்படும். குழந்தைகள் பாலை மறுக்கும், தூங்காமல் அழுது கொண்டே இருக்கும். கிருமிகள் தாக்கும் வயிற்றுப் போக்கு சற்று ஆபத்து அதிகமுள்ளது. இது 2 வகைகளில் வெளிப்படும். முதலில் குடல் தளர்வும், வயிற்றுப் போக்கு மெதுவாகவும் இருக்கும். ஒரு நாளைக்கு 5 முதல் 10 முறை பேதி ஏற்படலாம். மிகவும் நீராகவும் சில சமயங்களில் சளி வெளியேறும் சுவடுகளும் தென்படலாம். காய்ச்சலும் உடன் இருந்து வரும். இது தீவிரமானால் அழற்சியுடன் வயிற்றுப்போக்கு ஏற்படும்.

இன்னொரு வகையில் வயிற்றுப் போக்கிற்கு சாதகமான நிலை திடீரென ஏற்படும். வாந்தி, காய்ச்சல், மலம் பச்சை யாக வெளியேறுதல் போன்றவை ஏற்படும்.

***காரணங்கள் :***

குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. அசுத்தமான பால், உணவுப் பாதையில் கிருமி போன்றவைகளால் இது ஏற்படலாம். தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்குத் தாயின் சீரணக் கோளாறுகளால் வயிற்றுப்போக்கு ஏற்படலாம். ஆனால் வயிற்றுப்போக்குப் பொதுவாக மோசமான, ஆரோக்கியமற்ற சுற்றுச் சூழல், கவனமற்ற முறையில் உணவு தயாரித்தல் ஆகியவைகளால் ஏற்படுவதே. சற்றே வளர்ந்த குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு புரோட்டீன் சத்து அதிகமுள்ள இறைச்சி மற்றும் மீன் ஆகியவைகளை அதிக அளவில் உண்பதே காரணம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

## துவரம் பருப்பு முறுக்கு

***தேவையான பொருட்கள் :-***


| | |
|---|---|
| பச்சரிசி | - 4 கப் |
| துவரம் பருப்பு | -1/2 கப் (லேசாக வறுத்தது) |
| பொட்டுக்கடலை | - 1/2 கப் |
| சிகப்பு மிளகாய் | - 25 |
| உப்பு | - தேவையான அளவு |
| நல்லெண்ணெய் | - பொரிப்பதற்கு |

செய்முறை :-

அரிசி, பருப்பு, மிளகாய் எல்லா வற்றையும் கலந்து அரைக்கவும். பின்பு ஒரு அகலக் கிண்ணத்தில் மாவை சலித்துக் கொள்ளவும். தேவைக்கேற்ப உப்பு சேர்த்து கலந்து 1 கரண்டி சூடான எண்ணெய் விடவும். நன்றாகக் கலந்து விட்டு நான்காகப் பிரித்துக் கொள்ளவும். முதல் பாகத்தில் தண்ணீர் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். (ஒவ்வொரு பாகத்தையும் பொரிப்பதற்கு முன் தண்ணீர் சேர்த்து பிசையவும்.) முறுக்கு நாழியில், ஒரு கண் இருக்கும் தேன் குழல் அச்சைப் போட்டு சூடான எண்ணெயில் பெரிய முறுக்குகளாகப் பிழியவும். நன்றாக மொறுமொறுவென்று பொரிந்ததும் எண்ணெயில் இருந்து எடுத்து வடியவிட்டு ஆறிய பிறகு டப்பாவில் போட்டு வைத்து சாப்பிடவும்.

# மிளகிலே மருத்துவம்

சுறுசுறுவெனும் காரத்தன்மை கொண்ட மிளகு சளி, இருமல், விஷத்தன்மை, வாதம் முதலியவற்றிற்கு அருமருந்தாகப் பயன்படுத் தப்படுகிறது. மிளகு நெருப்பின் குணம் உடையது என்பார்கள்.




● தொண்டை வலி இருந்தால், கொஞ்சம் மிளகு, ஓமம், உப்பு ஆகிய மூன்றையும் சேர்த்து வாயில் போட்டு மென்றால் தொண்டை வலி குணமாகும்.

● மிளகைப் பொடி செய்து, சிறிது உப்பு சேர்த்து சூடாக்கி சிறிது நெய்யில் கலந்து கொண்டு சாப்பிட்டால் வயிற்று உப்புசம், பசியின்மை போன்றவை உடனே குணமாகும்.

● சளி, தடுமன் (ஜலதோஷம்) அதிக மாக இருந்தால், மிளகு ஒரு ஸ்பூன் எடுத்து நெய்யில் வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு தினமும் மூன்று வேளை அரை ஸ்பூன் பொடியைச் சாப்பிடுவது நல்லது. இரண்டு நாட்களிலேயே நல்ல குணம் காணலாம்.

● பசியில்லாமலிருந்தால், ஒரு ஸ்பூன் மிளகை வறுத்துப் பொடி செய்து கைப்பிடி யளவு துளசி இலையைப் போட்டுக் கொதிக்க வைத்து, சூடு ஆறியவுடன் தேனில் கலந்து குடித்தால் சரியாகும்.



● நன்றாய் சளி பிடித்துக் கொண்டு மூக்கு ஒழுகத் தொடங்கினால் மிளகை நன்றாக இடித்து சூரணம் செய்து வைத்துக் கொண்டு தேனில் கலந்து சாப்பிட்டு வர வேண்டும். இரண்டொரு நாட்களில் சரியாகி விடும்.

மிளகில் இத்தனை மருத்துவ குணம் இருப்பதால்தான், நாம் உணவில் தாராள மாகச் சேர்த்துக் கொள்கிறோம்.

# உடலை ஒரு ஓவியமாக்க.....


குறத்திகளும், ஹிப்பிகளும் மட்டுமே பச்சை குத்திக் கொள்வார்கள் என்பது போய் இப்பொழுது பச்சை குத்துவது உலகெங்கும் ∴பேஷனாக பரவி வருகிறது.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தியர் இக்கலவையை உலகிற்கு வழங்கினர். இதற்கான உதாரணத்தை அவர்கள் 'மம்மி' என்னும் புதையுடல்களில் செய்திருப்பதைக் காணலாம். அந்தக் கலையில் இன்று டாட்டு, பாடி ஆர்ட், ஸ்டாம்ஸ், ஹினா, பாடி பெயின்ட் என்று பல்வேறு விதங்கள் காணப்படுகின்றன.

நீங்கள் இன்று எந்த நிறத்திலும், உட லின் எந்த பாகத்திலும் எந்த வடிவத்தையும் பொறித்துக் கொள்ளலாம்.

ஊசியைக் கொண்டு நடைபாதையில் பச்சை குத்தி கொள்வது என்ற காலம் மாறிவிட்டது. இன்று இக்கலாசாரம் பிரபல்யம் பெற்று வெகுவேகமாகப் பரவி வருவதால், இந்தியாவிலும் உலகத் தரம் மிக்க வடிவமைப்பாளர்கள் உருவாகியுள்ளதோடு இதற்கான மையங்களும் உருவாகிக் கொண்டுள்ளன.

பச்சை குத்தும் பொழுது குத்திக் கொள்பவருக்கு வலி உண்டாகும். ஆனால் சில பெண்களுக்கு இது எறும்பு கடிப்பதைப் போன்ற உணர்வையே ஏற்படுத்துகிறதாம்!



முதலில் 60 நொடிகளுக்கு அவஸ்தை ஏற்பட்டாலும் உங்களுக்குப் பிடித்த பெயர், படம் உருவானவுடன் உங்கள் உடலில் ஏற்படும் வலி பறந்தோடி விடும். இது காது அல்லது மூக்கு குத்துவதைக் காட்டிலும் குறைவான அவஸ்தையே கொடுக்கக் கூடியது.

நீங்கள் இந்த சின்ன வலியைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாவிட்டால் வேறு வழிகளும் உண்டு. இன்று இந்தக் கலை வேறு ரூபம் எடுத்து, பச்சை குத்துவதற்குப் பதில் பச்சைப் பதிக்கும் கலையாக மாறியுள்ளது.

மற்றொரு முறை பாடிபெயின்ட்டிங். இதில் பச்சை நிறம் மட்டுமல்ல மற்ற நிறங்களையும் கொண்டு வரலாம். உங்களுக்கு வேண்டாம் என்று எண்ணும் பொழுது தண்ணீரால் கழுவி துடைத்து விடக்கூடிய அக்ரிலிக் நிறத்தைக் கொண்டு உடலில் பூசிக் கொள்ளலாம்.


இதைத் தவிர மருதாணியை கையில் பூசிக் கொள்வது நம் பாரம்பரிய மற்றும் பாதுகாப்பான முறையாகும். இப்பொழுது மருதாணி பூசுவதிலும் பாரம்பரிய முறைகளுடன் மெல்லிய வடிவங்கள் மற்றும் பூ வடிவங்களுடன் ஆபிரிக்கன் முறைகளும் புகுந்துள்ளன.

ஆபிரிக்கன் மருதாணி முறையில் உடல் முழுக்க கருப்பு நிறத்தைப் பூசிக்கொள்ள முடியும் என்றாலும், அது உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடியது. நீங்கள் 'ஹினா' வைக் கொண்டு உடலை அழகுபடுத்த அடிதல் தேனீர், கிராம்பு, எலுமிச்சை மற்றும் சர்க்கரை கலக்கவும்.

உடலில் பச்சை குத்திக் கொள்வதற்கும், வர்ணம் பூசிக் கொள்வதற்கும் முன் சில விஷயங்களில் அவசியம் கவனம் தேவை.

* 'ஸ்டெரிலைஸ்' செய்தால் எவ்வித கிருமிகளின் பாதிப்பும் இருக்காது.

* பச்சை குத்துபவர் கையுறைகள் அணிய வேண்டும்.



* அதில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

* பச்சை குத்துவதற்கு முன், குத்தப் போகின்ற வடிவத்தை அவசியம் ஒரு முறை காட்ட வேண்டும்.

* உங்கள் சொந்த ரசனையைப் பச்சை குத்துவதிலும் கடைபிடிக்கவும்.

உலகம் முழுக்க அறியப்பட்டுள்ள இக்கலைக்கு ஜப்பானியர்களிடையே வரவேற்பு இல்லை என்பது ஆச்சரியமான ஒரு விஷயம்!


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

01

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ. அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
14.12.2005

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி 01**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

# ஒரு தாய் மகள் 58

**சென்ற ● வாரம்**

**பேஜ், அவள் அம்மாவும் அக்காவும் வந்ததால் பெரிதும் கவலை அடைகிறாள். இருவரும் தனக்கு உதவி செய்யாமல் உபத்திரவம் செய்வதாகவே அவளுக்கு தோன்றியது. அவள் கவலைப்படும் போதெல்லாம் தாரென்ஸன் தான் அவளுக்குத் ஆறுதலாக இருக்கிறான். பேஜின் சிநேகிதி ஒருத்தி போன் பண்ணி பிராட் ஒரு பெண்ணுடன் சுற்றுவதைத் தான் பார்த்ததாகக் கூறுகிறாள்.**

ஆண்டி ஒரு முட்டாளல்ல, சொல்வதையெல்லாம் நம்பி விட. இருந்தாலும் அவனிடம் உண்மையைச் சொல்ல அவள் விரும்பவில்லை. 'உன் அப்பா எப்படியோ போகட்டும். உன்னையும் ஆலியையும் நான் கைவிட மாட்டேன்' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"அப்பா ராத்திரி சாப்பாட்டுக்கு வருவாராம்மா?"

"தெரியவில்லை" என்று கூறி, மேலே பேசா வண்ணம் அவனை மடியில் எடுத்துச் சிறிது நேரம் வைத்துக் கொண்டாள். பின்னர் சமையலறைக்குச் சென்று வேலைகளைக் கவனித்தாள்.

பெயரை அவர்கள் சொல்வதும் அவன் காதில் விழுந்திருந்தது. எல்லாச் சண்டையும் தன்னால்தான் என்று எண்ணி அந்தக் குழந்தையுள்ளம் வேதனை கொண்டது.

ஒருவழியாய்ச் சமையல் முடிந்து, எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். பிராடும் பேஜும் ஆண்டியும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பேஜின் அம்மா மட்டும் 'சமையல் ரொம்பப் பிரமாதம்' என்று மகளைப் பாராட்டிச் சளசளவென்று பேசிக்கொண்டிருந்தாள்.

பேஜின் இரண்டு விரல்களில் கொப்புளம் ஏற்பட்டிருந்தது. ஐஸ் கட்டியை வைத்துக் கட்டுப் போட்டிருந்தாள்.


அவளை ஆச்சரியப்படுத்தும் வண்ணம் பிராட் இரவுச் சாப்பாட்டுக்கு வந்தான். பேஜின் அம்மாவிடமும் அக்காவிடமும் மரியாதையாகப் பேசினான். தானும் சில சிற்றுண்டி வகைகளைத் தோட்டத்தில் செய்வதாகக் கூறி வாசல்புறம் சென்றான். ஆண்டியும் பின்னாலேயே போனான், அப்பாவுக்கு உதவி செய்ய.

"ரொம்ப வலிக்கிறதா அம்மா?" என்று ஆண்டி கேட்டதற்கு, "சே, சே ஒன்றுமில்லை" என்றாள் பேஜ்.

பிராட் அவளை எதுவும் கேட்கவில்லை. ஆண்டியிடம் தன்னைப் பற்றிப் பேஜ் சொல்லி விட்டாள் என்று அவன் உறுதியாக நம்பினான். அதை எண்

கொண்டாள். தோட்டத்தில் இரைந்து கிடந்த பாத்திரங்களை பிராட் ஒழுங்குபடுத்துவது தெரிந்தது.

"நிஜமாகவே இன்று சாப்பாடு ரொம்ப அருமை டியர்!" என்று சொல்லிக் கொண்டு உள்ளே வந்தாள் அவள் அம்மா.



தோட்டத்தில் சில நிமிடம் தனியாக இருந்த சமயம் பேஜ் பிராடைப் பிடித்துக் கொண்டாள். "இன்று காலை ஜாகிங் போனீர்கள் போலிருக்கிறது?" என்றாள்.

ஒரு நிமிடம் அவளை முறைத்துப் பார்த்தவன், "யார் சொன்னார்கள்?" என்றான்.

"யார் சொல்லியிருந்தாலென்ன?"

"அவனுக்குக் கோபம் மேலிட்டது உனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்!"

"ஏன் சம்பந்தமில்லாமல்? எனக்குச் சம்பந்தம் உண்டு. ஆலிக்குச் சம்பந்தம் உண்டு. ஆண்டிக்குச் சம்பந்தம் உண்டு. எங்கள் வாழ்க்கையை நாசம் பண்ணுகிறீர்கள் நீங்கள். ஆண்டிக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்திருக்கிறீர்கள். அவனுக்கு எல்லாம் தெரியும். அவன் முகத்தைக் கொஞ்சம் பாருங்கள். உங்களுக்கும் புரியும்."

"ஓகோ! நீயே அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருப்பாய்! சீ!" என்று சீறியவன் ஒரு தட்டை விட்டெறிந்து விட்டு வீட்டுக்குள் திரும்பிச் சென்றான்.

அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த பாத்திரத்தை இறக்கப் போய்க் கையைச் சுட்டுக் கொண்டு 'ஸ்!' என்று பேஜ் அலற, அப்பாவின் பின்னாலேயே அழுது கொண்டு ஓடினான் ஆண்டி.

அம்மா கையைச் சுட்டுக் கொண்டதும், அப்பா கத்தியதும் அவனால் தாள முடியாததாக இருந்தது. நடுநடுவே தன்

ணிக் குமுறிக் கொண்டிருந்தவன், எல்லாரும் போன பிறகு, சமையலறையில் தட்டுகளைக் கழுவிக் கொண்டிருந்தபோது மறுபடி சீறினான்.

ஆண்டி கதவுக்கு வெளியே நின்றிருந்ததை அவர்கள் பார்க்கவில்லை.

"நீதான் ஆண்டியிடம் என்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறாய்! உண்டா இல்லையா?" என்றான் பிராட்.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

"நான் சொல்லவில்லை. சொல்லவும் மாட்டேன்" என்றாள் பேஜ். "ஆனால் உங்கள் நடவடிக்கையே அவனுக்கு எல்லாவற்றையும் சொல்லி விட்டது. நீங்கள் வீட்டில் தங்குவதே கிடையாது. அப்புறம் அவன் வேறு என்ன நினைப்பான்? ஏன், என் இன்றைக்கு ஒருத்தர் சொன்ன மாதிரி நாளைக்கு அவனிடமும் ஒருத்தர் சொன்னால் என்ன பண்ணுவீர்கள்?"

"அந்த ராஸ்கலுக்கு இதிலே ஒரு சம்பந்தமும் கிடையாது!" கையிலிருந்த தட்டைக் குழாயடியில் எறிந்து விட்டு பிராட் கோபமாகச் சமையலறையை விட்டு வெளியேறினான்.

பீறிட்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு கண்ணைத் துடைத்துக்

"நீ கொஞ்சம் கம்மென்றிரு. இங்கே வீட்டில் நிலைமை சரியில்லை. நீ ஒரு பக்கம்" என்றாள் பேஜ் கடுமையாக.

அம்மா அலட்சியமாக, "எல்லா வீட்டிலும் இருப்பது தான். கொஞ்ச நாளில் சரியாகி விடும்" என்றாள்.

"இது சரியாகாது" என்றாள் பேஜ் உறுதியுடன். இனி மேலும் ஒளித்து மறைப்பானேன்? சொல்லிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தவளாக, "அவருக்கு எவளோ ஒரு பெண்ணின் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. வீடு இரண்டாகிக் கொண்டிருக்கிறது" என்றாள்.

அப்போதும் அவள் அம்மா அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. "பிராட் அப்படியெல்லாம் போகக்கூடியவரில்லை. ஆலிஸனின் பிரச்சினையினால் உனக்கு என்னென்னவோ தோன்றுகிறது.."

ஆலிஸனின் பிரச்சினை! குழந்தை அங்கே நினைவு நீச்சின்றி, எந்த நிமிடத்திலும் இறக்கப் போகிற மாதிரி கோமாவில் கிடக்கிறாள். அதைச் சாதாரணப் பிரச்சினை என்கிறாள் இவள்!

(தாய் தொடர்வாள்.....)

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

**17**



கண்டுபிடித்தவனே கதி கலங்கிப் போகும் அளவுக்கு தங்கள் தொழில் நுட்பத்தால் ஒன்றை மேம்படுத்தி மேம்படுத்தி உலகச் சந்தையில் மூலப் பொருளையே ஓரங்கட்டிவிடுகிற ஆற்றல் ஜப்பானியர் மூளைக்குள் முளைத்திருக்கிறது.

குளியலறைக்குள் சென்றதுமே அதற்கொரு கண்கூடான காட்சியைக் கண்டறிந்தேன்.

காலைக் கடனுக்குக் கழிவுக் கோப்பையை அணுகிய போது ஆனந்த அதிர்ச்சி காத்திருந்தது எனக்கு.

நல்ல குளிர் ஜப்பானின்.

கழிவுக் கோப்பையில் அப்படியே உட்கார்ந்தால் அடித்தொடை குளிரும்.

அந்த அதிர்ச்சி சில நேரங்களில் இயற்கையைக் கூடத் தடுத்துவிடும்.

ஊட்டி, கொடைக்கானல் சென்றால் கழிவுக் கோப்பையில் வெந்நீர் அளாவுவேன்; ஈரத்தைத் திசுத்தாளால் துடைப்பேன்; உஷ்ணம் அடங்குமுன் ஓடி உட்காருவேன்.


அந்தச் சிரமம் தரவில்லை ஜப்பானியக் கழிவுக்கோப்பை.

மொத்தக் கோப்பையும் 39 டிகிரி செல்ஷியலில் சூட்டுக்கிடந்தது. அதன் பக்கவாட்டில் நான்கு பொத்தான்கள் அமைக்கப்

அடப் பாவிகளே! மனித மூளை எப்படியெல்லாம் சிந்திக்கிறது.

ஒரு கவிஞனையும் ஓவியனையும் விட அதிகமான கற்பனையல்லவா ஒரு கழிவுக் கோப்பைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்க நண்பர்களை விசாரித்தேன்; அங்கும் கூட இந்தத் தொழில் நுட்பம் இல்லையாம்.



பட்டிருந்தன.

முதற்பொத்தானை அழுத்தினால் கழிவு வெளியேறும். இரண்டாம் பொத்தானை அழுத்தினால் எந்த இடம் தூய்மை செய்யப்பட வேண்டுமோ அந்த இடத்துக்கு மட்டும் உள்ளிருந்து செங்குத்தாக நீர்பரவி பாய்கிறது.

மூன்றாம் பொத்தான் பெண்களுக் காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதாம்; அது முன்னும் பின்னும் பரவிப் பாயுமாம்.

நான்காவது, நீர்ப் பிரவாகத்தின் கட்டுப்பாட்டுப் பொத்தான்.

எந்த அளவு நீர்ப் பீய்ச்சப் பிரியமோ அந்த அளவு பாய்ச்சிக் கொள்ளலாம்.

அங்கே கழிவுக் கோப்பை வேறு; கழுவுக் கோப்பை (Bidde) வேறு என்று இரண்டு தத்துவங்களாக இருக்கின்ற பொருளை ஒரே தொழில்நுட்பமாக இணைத்த பெருமை ஜப்பானிய மூளைக்கே உண்டு.


தயாரித்து ஐந்தாண்டுகள் புழக்கத்தில் இருந்தும் இந்தியாவுக்கு இது இன்னும் வந்து சேரவில்லை.

குடி தண்ணீரே கைவிட்டுவிட்ட தேசத்தில் இந்தத் தொழில்நுட்பம் எப்போது வந்து சேருமோ என்று ஏங்குகிறேன்.

(தொடரும்...)

நன்றி :- திருமதி வைரமுத்து

# கோடீஸ்வர கல்யாணம்



உலகில் மிகப் பெரிய பணக்காரர்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர் அதினா ஒனாசிஸ் கோடீஸ்வரரான இவர் உலகின் பணக்காரப் பெண்களில் முதல் இடத்தைப் பிடித்தவர் கிரீஸ் நாட்டைச் சேர்ந்த இவர் பிரபல கப்பல் கம்பெனி அதிபர். அவரது குடும்பத்தின் இதர நிறுவனங்களுக்கும் இவர்தான் வாரிசு. 20 வயதான இளம்பெண் அதினா ஒனாசிஸ் திடீர் திருமணம் செய்து கொண்டார் மணமகன் பெயர் ஆல்வாரோ அல்பான்சோ.

இவருக்கு வயது 32. அது மட்டுமல்ல இவர் ஏற்கெனவே திருமணம் ஆகி மனைவியை விவாகரத்துச் செய்தவர். ஒலிம்பிக் பதக்கம் பெற்ற இந்த விளையாட்டு வீரருக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. அதினாவுக்கும் இவருக்கும் சமீப காலமாக காதல் ஏற்பட்டிருந்தது.

சாபாலோ நகரில் இந்தத் திருமண நிகழ்ச்சி நடைபெற்றது. மிக எளிமையாக நடந்த இந்தத் திருமணத்தில் 700 பேர் மட்டுமே கலந்து கொண்டனர்.

# பத்திரிகை

**நவீன** உலகின் முக்கியமான அற்புதங்களுள் ஒன்று, பத்திரிகை! 'பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் இருக்க வேண்டும். முதலாவது, பொதுமக்களின் அபிப்பிராயத்தைத் தெளிவாக அறிந்து, அதை வெளிப்படுத்துவது, இரண்டாவது, மக்கள் மனங்களில் விரும்பத்தக்க நல் உணர்வுகளை வளர்த்தெடுப்பது. மூன்றாவது, மக்களின் குறைகளை எந்த அச்சமும் இன்றி பகிரங்கப்படுத்துவது, என்றார் அண்ணல் காந்தியடிகள்.

அச்சு இயந்திரங்களின் வருகை, உலக மக்களின் அறிவு வளர்ச்சியிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கியது. அறியாமை இருளில் அழுந்திக் கிடந்த மக்களுக்குப் புதிய வெளிச்சத்தைக் காட்டிய பெருமை, அச்சு இயந்திரங்கள் பெற்றெடுத்த புத்தகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் மட்டுமே உண்டு. சமூகம், பண்பாடு, கலை, அறிவியல். பொருளாதாரம், அரசியல், வணிகம். மருத்துவம், விவசாயம் என மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வேறு துறைகளைப் பற்றிய அறிவையும், தெளிவையும் பத்திரிகைகள் சுமந்து வந்தன; வருகின்றன.

புத்தகங்களும், பத்திரிகைகளும்தான் பிரெஞ்சுப் புரட்சிக்கும், அமெரிக்க விடுதலைப் போருக்கும் அடித் தளம் அமைத்தன. வால்டேர் ரூசோவின் படைப்புகள் அச்சு வாகனத்தில் அமர்ந்ததனால்தான், பிரெஞ்சு மக்களுக்கு ஆட்சியாளரிடம் இருந்த அச்சம் அகன்றது. தாமஸ் ஜெயின், தாமஸ் ஜெபர்சன். பெஞ்சமின் பிராங்க்ளின் போன்ற பேரறிஞர்களின் சுதந்திரச் சிந்தனைகள் அச்சேறியதன் விளைவாகவே, அமெரிக்கர்கள் அடிமை விலங்கொடிக்க ஆர்வத்துடன் போர்க் குரல் கொடுத்தனர்.

'தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம், குடிசைகளும் எரிக்கலாம்' என்பது




பத்திரிகைகளுக்கும் பொருந்தும். ஓடுகின்ற நிலத்தின் சாரத்துக்கேற்ப நீர் நிறம் மாறுவதுபோல, பத்திரிகையும் அதை நடத்துபவரின் எண்ணப் போக்குக்கு ஏற்ப சமூகத்தில் விளைவுகளைப் பயிராக்கும். ஜெர்மனியில் நாசிசத்தைப் பரப்ப, ஹிட்லர் முதலில் பத்திரிகையைத்தான் பயன்படுத்தினான். அவன் ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்திய 'வால்கிஷர்' என்ற பத்திரிகை, ஜெர்மானிய மக்களின் மனங்களில் நாள்தோறும் இனவெறி என்னும் நஞ்சைக் கலந்தது. பாசிசத்தின் தந்தையான முசோலினி ஆசிரியராக இருந்து, மிலான் நகரிலிருந்து வெளியிட்ட 'இல் - பாப்லோ - டி - இடாலியா' என்ற பத்திரிகை, இத்தாலிய மக்களின் இதயங்களில் பாசிச வெறியை வளர்த்தது. மதவாத நெருப்பை வளர்த்தது, கோட்சே நடத்திய 'இந்து ராஷ்டிரா'.

சமத்துவ சமுதாயத்தைச் சமைக்க வாழ்க்கையையே ஒரு மகா யக்ஞமாக மாற்றிக் கொண்ட மார்க்ஸ், தன் கொள்கைகளைப் பரப்புவதற்கு நடத்திய பத்திரிகைதான் 'ரைன்லாந்து கெஜட்' மார்க்ஸின் சித்தாந்தத்தில் மனம் பறிகொடுத்து, ருஷ்ய மண்ணில் சோஷலிசக் கொடியைப் பறக்கவிட முடிவெடுத்த லெனின், போல்ஷ்விக்குகளுக்காக ஜெனிவாவில் இருந்து நடத்திய பத்திரிகையின் பெயர், 'பாட்டாளி' என்ற பொருள் கொண்ட 'பிரோலிடேரியட்' ஐக்கிய இத்தாலியைக் கனவு கண்ட மாஜினி, இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்க 'யங் இத்தாலி' என்ற இதழை வெளியிட்டார். அதன் பாதிப்பில்தான், இந்திய விடுதலை வேள்வியை வளர்க்க தான் நடத்திய பத்திரிகைக்கு 'யங் இந்தியா' என்று பெயரிட்டார் காந்திஜி.

பத்திரிகைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றம், 1790களின் தொடக்கத்தில் முதன் முதலாகப் பத்திரிகையாளர்களை அனுமதித்தது. எட்மண்ட் பார்க் என்ற ஆங்கிலப் பேரறிஞர் நாடாளுமன் றத்தில் உரையாற்றும்போது பத்திரிகைகளை அரசாங்கத்தின் நான்காவது தூண்' என்று வர்ணித்தார்.

சட்டம் இயற்றும் நாடாளுமன்றம், நாட்டின் நிர்வாகத்தை நடத்தும் அமைச்சரவையையும் அதிகாரத்தையும் கண்காணிக்கிறது. நாடாளுமன்றம், நிர்வாகம் என்னும் இரு துறைகளின் நடவடிக்கைகளையும் நீதித்துறை பரிசீலிக்கிறது. பத்திரிகை இந்த மூன்று முக்கியமான துறைகளையும் விழிப்புடன் மேற்பார்வை செய்கிறது. அதனால்தான் பத்திரிகையுலகம், 'சமூகத்தின் காவல் நாய்' (வாட்ச் டாக்) என்று பாராட்டப்படுகிறது.

மஞ்சள் செய்திகள், பழிவாங்கும் விமர்சனங்கள், பரபரப்புக்காகச் செய்தி தயாரித்தல், பாரபட்சம் காட்டுதல், நாகரிகமற்ற நரகல் நடை, சமூகப் பொறுப்பற்ற தன்மை, அவதூறு, ஆபாசம், தனி நபர் தாக்குதல் போன்ற தீமைகளிலிருந்து பத்திரிகைகள் விலகி நிற்க வேண்டும். என்பதுதான், மன ஆரோக்கியம் உள்ள மக்களின் எதிர்பார்ப்பு, பத்திரிகைகளுக்குப் பொறுப்பு உணர்வும், பொதுச் சேவை நோக்கும் இருக்க வேண்டும். அவை உயர்ந்த தரத்தைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

தென் ஆபிரிக்காவில் 'இந்தியன் ஒபீனியன்' இந்தியாவில் 'யங் இந்தியா' 'ஹரிஜன்' போன்ற பத்திரிகைகளை நடத்திய மகாத்மா காந்தி, சேவை செய்வதே பத்திரிகைகளின் முதன்மை நோக்கமாகும். பத்திரிகைகள் மகத்தான வலிமை வாய்ந்தவை கட்டுப்பாடற்ற காட்டாற்று வெள்ளம் ஊரில் புகுந்து பயிர்களை நாசம் செய்வது போல், கட்டுப்படுத்தப்படாத பத்திரிகைகள் சமூகத்தை நாசம் செய்யும். ஆனால், பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு வெளியிலிருந்து வருவது தீமையை விளைவிக்கும். எனவே, கட்டுப்பாடு அதன் உள்ளிருந்தே செயல்படுத்தப்பட வேண்டும் என்றார். இன்று எத்தனை இதழ்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் இயங்குகின்றன என்பதுதான் கேள்வி.

சாதி, மதங்களின் காரணமாக ஏற்படும் கலவரங்க களைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் பத்திரிகைகளுக்குப் பொறுப்பு உணர்வும், கட்டுப்பாடும் அவசியம்! 'கலவரங்கள் குறித்துச் செய்தி வெளியிடும்போது, வெறியைத் தூண்டும் விதத்தில் தலைப்புச் செய்திகளை வெளியிடக் கூடாது' என்று பத்திரிகைக் கவுன்சிலின் வழி காட்டும் விதிமுறை வலியுறுத்துகிறது.

மகாத்மா காந்தி, கோட்சேவால் படுகொலை செய்யப்பட்ட செய்தி, கவர்னர் ஜெனரலாக அப்போ திருந்த மவுண்ட் பேட்டனிடம் தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சியடைந்த மவுண்ட் பேட்டன், தன் செய்தித் தொடர்பாளர் ஆலன் கேம்பெல் ஜான்சனுடன் பிர்லா மாளிகைக்கு விரைந்தார். வெறி பிடித்த நிலையில் அங்கு கூடி நின்ற கூட்டத்தில் ஒருவன் மவுண்ட் பேட்டனைப் பார்த்து, 'மகாத்மாவை ஒரு முஸ்லிம் கொன்றுவிட்டான்' என்று ஆவேசம் பொங்கக் கூச்சலிட்டான். உடனே மவுண்ட் பேட்டன், 'முட்டாளே! கொன்றவன் முஸ்லிம் என்று உனக்கு யார் சொன்னது? மகாத்மாவை மரணத்தில் தள்ளியவன் ஓர் இந்து' என்று உரத்த குரலில் உரைத்தார்.

ஜான்சனுக்கு மிகுந்த ஆச்சரியம். 'செய்தி கிடைத்ததும் நம்முடன் வந்தார். இங்கு வந்து சேரும் வரை இடையில் யாரையும் அவர் சந்திக்கவில்லை. அப்படியிருக்க, மகாத்மாவைக் கொன்றவன் இந்து என்று இவருக்கு எப்படித் தெரிந்தது?' என்று சந்தேகப்பட்டார். கவர்னர் ஜெனரலிடம் இதுபற்றிக் கேட்டார். மவுண்ட் பேட்டன் ஜான்சனிடம் மெல்லிய குரலில், உண்மை என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், அவன் கூச்சலிட்டது போல் ஒரு முஸ்லிம் இதைச் செய்திருந்தால், உலகம் இதுவரை சந்தித்திராத கோரமான இனப் படுகொலைகளை இந்தியா சந்திக்க வேண்டியிருக்கும். அப்படி எந்த அசம்பாவிதமும் அரங்கேறிவிடக் கூடாது என்ற தவிப்பில்தான் தெரிந்தே ஒரு பொய் சொன்னேன். பொறுத்துப் பார்ப்போம்' என்றார். அதற்குப் பெயர்தான். சமுதாயப் பொறுப்பு உணர்ச்சி.

மகாத்மா படுகொலை செய்யப்பட்டு, மண்ணில் சாய்ந்து உயிர் நீத்தபோது, நேரம் மாலை 5.20. முன்னேற்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு, நாடு முழுவதும் கலவரம் நிகழாமல் தடுக்கப் படுவதற்கான ஆயத்தங்கள் நிறைவேற்றப்பட்டதும், மாலை 6.00 மணிக்குப் பின், அகில இந்திய வானொலி, 'நாதுராம் விநாயக் கோட்சே என்ற இந்துவால் மகாத்மா காந்திஜி இன்று மாலை 5.20 மணிக்குப் பிர்லா மாளிகையில் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று திரும்பத் திரும்ப அறிவித்தபடி இருந்தது. அதனால்தான் கோடிக் கணக்கான முஸ்லிம்களின் உயிரும், உடைமையும் பாதுகாக் கப்பட்டன.

நாகரிகம் வளர வளர, மனிதன் செய்யும் குற்றங்களும், பாவங்களும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும். வணிகக் கலாசாரத்தில் மூச்சுத் திணறும் இன்றைய சமூகச் சூழலில், பிரச்சினைகள் பெருகி விட்டன. அவை குறித்துச் சரியான செய்திகளும், அவற்றுக்கான முறையான தீர்வுகளும் பத்திரிகை களால்தான் வழங்கப்பட முடியும். துல்லியமாகவும், முழுமையாகவும், விருப்பு வெறுப்புக்கு இடம் இல்லாமலும் செய்திகள் அமைய வேண்டும் அதற்குப் பத்திரிகைச் சுதந்திரம் பழுதுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்திய மண்ணில் சுதந்திரம் கண் விழித்த நாள் முதல், பத்திரிகைகளின் உரிமைக்குப் பங்கம் எதுவும் நேர்ந்து விடவில்லை. உலகின் பல நாடுகளில் பத்திரிகை உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், நேரு பூரண சுதந்திரத்தை வழங்கினார். 'சங்கர்ஸ் வீக்லி' உலகப் புகழ் பெற்ற கார்ட்டூன் பத்திரிகையாகப் பரிணமித்தது. சங்கரின் கார்ட்டூன் ஓவியங்களில் கேலி செய்யப்படாத அரசியல் தலைவர்களே இல்லை. அந்தப் பத்திரிகை 1948இல் நேருவால் வெளியிடப் பட்டது. வெளியீட்டு விழாவில், 'சங்கர், என்னையும், என் அரசையும் தாராளமாக விமர்சனம் செய்யுங்கள். தாக்காமல் விட்டு விடாதீர்கள்' என்றார் நேரு. 'சங்கர்ஸ் வீக்லி' தொடர்ந்து அதைத்தான் செய்தது. நேரு கொஞ்சமும் கோபப்படவில்லை. நெருக்கடி நிலை இந்திரா காந்தியால் அமுல்படுத்தப்பட்ட ஒரு குறுகிய காலத்தில் மட்டும் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டது. மற்றபடி, இன்றுவரை இந்தியப் பத்திரிகையுலகம் சுயேச்சையாகவும், சுதந்திரமாகவும் செயல்பட்டு வருகிறது. நாட்டின் சுதந்திரம் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது பத்திரிகைச் சுதந்திரம்.

ஆனால், பத்திரிகைச் சுதந்திரம் என்ற போர்வையில், தனி மனிதனின் அந்தரங்க வாழ்க்கை உரிமைக்குள் மூக்கை நீட்டலாகாது. மிகப் பெரிய அளவில் பொதுமக்களின் நலன் சம்பந்தப்பட்டி ருந்தால் மட்டுமே, தனி நபர்களின் அந்தரங்கத்தில் தலையிடப் பத்திரிகைகளுக்கு உரிமை உண்டு. அந்தரங்கம் எப்போதும் புனிதமானது. வன்முறை, வகுப்புவாதம், பயங்கரவாதம் போன்ற சமூக அமைதிக்கு எதிரான செயல்களை, எந்த நிலையிலும் பத்திரிகைகள் நியாயப்படுத்தக் கூடாது காம இச்சையை தூண்டுவதும், குற்றங்களுக்கு வழி வகுப்பதும் பத்திரிகைகளின் பணி இல்லை.

சர்வாதிகாரிகளுக்குச் சாவுமணி அடித்த சரித்திரம் பத்திரிகைகளுக்கு உண்டு. 'பத்திரிகையாளன் என்பவன் குறை காண்பவன், கண்டிப்பவன், அறிவுரை வழங்குபவன், ஆட்சியின் மீது தனியாணை செலுத்துபவன், நாட்டின் ஆசிரியனாகத் தன்னைக் கருதுபவன், ஆயிரம் துப்பாக்கிகளைவிட, நான்கு எதிரிப் பத்திரிகை யாளர்கள் அதிகமாக அஞ்சத் தக்கவர்கள்' என்றான் நெப்போலியன்.

'ஆண்டவன் அகிலத்தை எப்படி ஆட்சி செய்கிறான் என்று அறிந்துகொள்ள, நான் பத்திரிகை படிக்கிறேன்' என்றார் ஐசக் நியூட்டன்.

பத்திரிகை பாமர மக்களின் பள்ளி ஆசிரியன் ஆனால், அது உண்மைச் செய்திகளையே சுமந்து வர வேண்டும். புனைவும், பொய்யும் இல்லாமல் செய்திகள் சொல்லப்பட வேண்டும். நாம் வாழும் உலகின் ஒரு நாள் வரலாற்றை அன்றாடம் நமக்குச் சொல்பவை நாளிதழ்கள். நல்ல பத்திரிகைகளால் செதுக்கப்படும் சமூகம், நாகரிக உலகின் உச்சத்தில் போய் உட்காரும். அதனால்தான், அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை உருவாக்கிய தாமஸ் ஜெபர்சன். "பத்திரிகைகள் இல்லாத அரசாங்கம் தேவையா, அரசாங்கம் இல்லாத பத்திரிகைகள் தேவையா என்று என்னை முடிவெடுக்கச் சொன்னால், நான் அரசாங்கம் இல்லாத பத்திரிகைகளே போதும் என்பேன்" என்றார்.

பத்திரிகைகளின் சக்தியையும், பொறுப்பையும் உணர்ந்து ஆட்சியாளர்கள் வழிவிட்டு நிற்பதும், பத்திரிகையாளர்கள் தங்கள் பொறுப்பு அறிந்து நடப்பதும்தான் ஆரோக்கியமான சூழலாக இருக்கும்.

*(நன்றி A.V.)*

## மரண விசாரணை



**இலங்கையில் யானை ஒன்று விபத்தில் இறந்தால் மரண விசாரணை அதிகாரியின் விசாரணை இன்றி அந்த யானையின் உடலைப் புதைக்க முடியாது. இது அநேகர் அறியாத விடயம். கடந்த வாரம் கொழும்பு - மட்டக்களப்பு புகையிரதப் பாதையில் வெலிக்கந்தைப் பகுதியில் இரு யானைகள் மோதுண்டு பலியாகின. மரண விசாரணை அதிகாரி அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டு மரண விசாரணை நடத்தியதைப் பிரயாணிகள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.**

## இப்படியும் உலகம்

**த**மிழக நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரத்தினம்மாள் தம்பதிகளின் புதல்வியாகிய சுந்தரி 13 வயதுடையவர் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கும் சிறுமி. கடந்த வாரம் ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். இவ்விடயம் தொடர்பாக தமிழகப் பொலிஸார் விசாரணை நடத்திய போது அச்சிறுமியின் அண்ணன் முறையான நடராஜனும், குடும்பஸ்தர் ஒருவருமாகிய பாலசுந்தரம் என்பவரும் அச்சிறுமியைத் தமது பாலியல் வேட்கைக்கு பயன்படுத்தியது தெரியவந்தது. இந்நிலையில் அண்ணன் முறையானவர் எப்படி சுந்தரியைக் கரம் பிடிப்பது? அல்லது ஏற்கனவே திருமணமான பாலசுந்தர் சுந்தரியை எப்படி 2 ஆவது மனைவியாக்குவது? என தலையைப் பிய்க்கும் கொண்டிருக்கும் பொலிஸார் தற்போது டி.என்.ஏ. மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளனர். உலகம் எங்கே போகின்றது?



## முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# 1986இல் வடக்கு - கிழக்கு பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம்

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யோசனைகளை கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராகப் பணியாற்றிய ஜே.என்.தீக்ஷித், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் சமர்ப்பித்த அன்றைய தினமே புதுடில்லி பயணமானார். பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா - உல் - ஹக் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து இந்திய அரசுக்கு அறிவிப்பதற்காகவே அவர் புதுடில்லி பயணமானார். ஸியா - உல் - ஹக்கின் இலங்கை விஜயம் முதல்நாள்தான் பூர்த்தியடைந்திருந்தது. டாக்காவில் நடைபெற்ற 'சார்க்' மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பும் வழியிலேயே அவர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இரு நாட்கள் மேற்கொண்ட இலங்கை விஜயத்தின்போது அவர் அனுராதபுரத்திற்கு விஜயம் செய்து புத்த பெருமானுக்கு மலர்த்தட்டுகள் வைப்பதை ரூபவாஹினி தொலைக்காட்சி காட்டியது. இலங்கை




ஆயுதப் படையினரின் படைத்திறன்களை அதிகரிப்பதற்கும் மேலதிக பந்தோபஸ்து உபகரணங்களை வழங்குவதற்கும் பாகிஸ்தான் அதிபர் இணக்கம் தெரிவித்திருந்தார். இதே வருடம் மார்ச் மாதம் ஜனாதிபதி ஜெயவர்த்தனா பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் தொடர்ச்சியாகவே ஸியாவின் கொழும்பு விஜயம் அமைந்திருந்தது. இந்த விஜயத்தின்போது இலங்கை ஆயுதப் படையினருக்குப் பயிற்சியளிக்கவும் தமிழ் தீவிரவாதிகளுக்கெதிரான போராட்டத்தில் உதவியளிக்கவும் பாகிஸ்தான் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார். பாகிஸ்தான் அதிபருக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அளித்த உத்தியோகபூர்வ விருந்துப

**1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு வலயங்களை அரசு பிரகடனப்படுத்தியது. அதாவது இராணுவ முகாம்கள் அமைந்திருந்த பகுதியிலிருந்து ஆயிரம் மீற்றர்களுக்குள் உள்ள பகுதிகள் 'பாதுகாப்பு வலயங்கள்' என்று பிரகடனப் படுத்தப்பட்டன. இங்கு இராணுவத் தளபாட வசதிகள் அதிகரிக்கப்பட்டதோடு படையினரும் குவிக்கப்பட்டனர்.**

சாரத்தில் பாகிஸ்தானை இலங்கையின் உண்மையான நண்பனென்று ஜெயவர்த்தனா வர்ணித்தார். அத்துடன் இலங்கையைப் பொறுத்தவரை மூத்த சகோதரர் போல் இந்தியா கண்டிப்போடு நடக்க முனைவதாகவும் குற்றஞ் சாட்டினார். இலங்கைக்குத் தேவையான உதவிகளைப் பாகிஸ்தான் வழங்குமென்று ஸியா - உல் - ஹக் உறுதியளித்தார். "இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் பயங்கரவாதத்தைக் கையாள்வதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கப் பாகிஸ்தான் தயாராகவிருக்கிறது" என்று ஸியா - உல் - ஹக் உறுதியளித்தார்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

இதற்கிடையில் புதுடில்லியில் பத்திரிகைக்கு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி வழங்கிய பேட்டியில், இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணக் கொழும்பு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை இந்தியா வன்மையாக எதிர்ப்பதாகத் தெரிவித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்திருக்கும் யோசனைகள் குறித்து இலங்கை அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டினை எடுப்பதன் மூலம் சமாதானப் பேச்சுக்கான சூழலை ஏற்படுத்த வேண்டுமென்றும் ராஜிவ் காந்தி குறிப்பிட்டிருந்தார். கொழும்பு அரசு ஆயுதப் படையினரைக் கட்டியெழுப்புவது குறித்தும் இலங்கையில்

*(அரசியல் தொடர்)*

வன்செயல்கள் அதிகரித்து வருவது குறித்தும் அவர் கவலை தெரிவித்தார்.

1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான புதிய குறிப்பொன்றினைத் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசிடம் சமர்ப்பித்தது. இதனை டிசம்பர் 31ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கையளித்தார். எனினும் வடக்கு - கிழக்கு இணைப்பை ஜனாதிபதி ஜெயவர்த்தனா கடுமையாக எதிர்த்தார். தமிழீழத் தீவிரவாதக் குழுக்கள் இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லையென அறிவித்தன. ஆனால் கொழும்பு அரசாங்கம் முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேசுவதற்கு அவை எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகளுக்குப் பதிலளிப்பதை வேண்டுமென்றே இலங்கை அரசாங்கம் தாமதப்படுத்தி வந்தது. அது இராணுவ நடவடிக்கைகளைப் பலப்படுத்த ஆரம்பித்தது. 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு வலயங்களை அரசு பிரகடனப்படுத்தியது. அதாவது இராணுவ முகாம்கள் அமைந்திருந்த பகுதியிலிருந்து ஆயிரம் மீற்றர்களுக்குள் உள்ள பகுதிகள் 'பாதுகாப்பு வலயங்கள்' என்று பிரகடனப் படுத்தப்பட்டன. இங்கு இராணுவத் தளபாட வசதிகள் அதிகரிக்கப்பட்டதோடு படையினரும் குவிக்கப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முப்பதாம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகளுக்கு இலங்கை அரசு பதிலளித்தது இந்த 57 பக்க ஆவணத்தை புதுடில்லியில் இலங்கை உயர் ஸ்தானிகராகப் பணியாற்றிய பேர்னார்ட் திலகரட்ன, ரொமேஷ் பண்டாரியிடம் கையளித்தார். தமிழர் கூட்டணி தெரிவித்த முக்கிய யோசனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. சமஷ்டித் தீர்வு நிராகரிக்கப்பட்டதோடு நாட்டின் ஒற்றையாட்சித் தன்மை மாற்றப்பட முடியாத அரசியலமைப்பு விவகாரமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழர் தாயகக் கோரிக்கையும் வடக்கு - கிழக்கு இணைப்பும்கூட நிராகரிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் பதில் யோசனைகளோடு புதுடில்லியிலிருந்து சென்னைக்குப் பறந்து வந்த ரொமேஷ் பண்டாரி, தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனையும், தமிழர் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோரையும் சந்தித்து, இலங்கை அரசின் ஆவணத்தைக் கையளித்துக் கலந்துரையாடினார். மறுவாரம் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த பிரதமர் ராஜிவ் காந்தி, திருச்சி விமான நிலையத்தில் தன்னோடிணைந்து புதுடில்லி வருமாறு தமிழர் கூட்டணித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். இலங்கை அரசின் பதில் குறித்து ராஜிவ் காந்தி தனது அதிருப்தியை புதுடில்லியில் வெளியிட்டார். இதனையடுத்து இலங்கை அரசாங்கம் புது யோசனைகள் அடங்கிய மற்றொரு ஆவணத்தைச் சமர்ப்பித்தது. இந்திய அரசியலமைப்புக்கேற்ப யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வடக்கு - கிழக்கிற்கு வழங்குவதாகக் கொழும்பு தெரிவித்திருந்தது. வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத் இந்த யோசனைகளைச் சமர்ப்பித்திருந்தார். இது ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் வழங்கப்பட்டது. தமிழ் மக்கள் எதிர்பார்த்த அதிகாரப் பகிர்வு அபிலாசையை யூனியன் பிரதேசப் பாணியிலான நிர்வாக அமைப்பு ஈடுசெய்யப் போவதில்லையெனக் கூறி அதனை தமிழர் கூட்டணித் தலைவர்கள் நிராகரித்தனர்.

இது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை ஆத்திரப்படுத்தியது. அரசாங்கத்தின் யோசனைகள் நிராகரிக்கப்படுமானால் அரசாங்கம் துருப்புகளைக் கட்டவிழ்த்து விடுமென்று ஜெயவர்த்தனா எச்சரிக்கை விடுத்தார். ஜெயவர்த்தனாவை சாந்தப்படுத்திய இந்திய அரசாங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளையும் அழைத்துக் கலந்துரையாடல் நடத்துமாறு ஆலோசனை கூறியது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கூட்டப்பட்ட கூட்டம் 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமானது. இதில் கலந்து கொள்ள தமிழர் கூட்டணி மறுத்தது. அதற்கு மூன்று காரணங்களை அது கூறியது. சிங்களக் கட்சிகளின் இணக்கத்தைப் பெறுவதற்காகவே இக் கூட்டம் நடத்தப்படுவதால் தமிழர் கூட்டணி பங்குபற்றத் தேவையில்லையென்பது ஒரு காரணம். காத்திரமான எந்த யோசனைகளையும் அரசு சமர்ப்பிக்கவில்லையென்பது இரண்டாவது காரணம். தமிழீழ தீவிரவாதக் குழுக்கள் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லையென்பது மூன்றாவது காரணம்.

மேலும் சில யோசனைகளை உள்ளடக்கி, கொழும்பு அரசாங்கம் புதிய ஆவணமொன்றினைக் கையளித்தது. இதுகுறித்து தமிழ் ஈழக் குழுக்களின் தலைவர்களோடு கலந்துரையாட தமிழர் கூட்டணி தீர்மானித்தது. அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனோடு இரு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகிய இயக்கத் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர். எம்.ஜி.இராமச்சந்திரன், போராட்டக் குழுக்களின் தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். ஜூலை மாதம் 5ஆம் திகதி கூட்டணித் தலைவர்கள் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டு, கொழும்பில் கூட்டப்படும் அரசியல் கட்சிகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டனர்.

(தொடர்ந்து வடியும்....)




அப்படியானால் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் ரேணுகா நிச்சயமாக மனிதப் பெண்ணே அல்ல என்பதும் புரிந்தது.

சௌபர்ணிகா அனுப்பியதாக அவள் குறிப்பிட்ட போது முதலில் குமார் நம்பவில்லை. அது உண்மையாகத்தான் இருக்குமென்று இப்போது தோன்றியது.

மெதுவாக நடந்து சென்ற ரேணுகா, ஹோம குண்டத்தின் பின்புறம் நின்றிருந்த இளம் பெண்ணின் பின்னால் போய் நின்றாள்.

அதன்பிறகு அங்கு நடந்தது முற்றிலும் நம்ப முடியாத அதிசயமான ஒரு காட்சியாக இருந்தது.

ஒரு புகைச்சுருள் மாதிரி



மாறிய ரேணுகா, மிக விரைவிலேயே அந்த மலைவாசிப் பெண்ணின் உடலுக்குள் ஒன்றிக் கலந்தாள். வினாடி நேரத்துக்குள் ரேணுகா முற்றிலுமாக மறைந்தே போனாள்.

"என்னால நம்பவே முடியலை, ரேணுகா முழுசாவே மாயமா மறைஞ்சுட்டாளே!" பிரபாகரன்தான் கனவில் பேசுபவன் போல் பேசினான்.

"இந்த மாதிரி சம்பவங்களை நாம் இதுவரைக்கும்

**எழுதுவது**
**சிவன்**

கேள்விப்பட்டதோட சரி. இப்போ நேரடியாகவே பார்க்கிற வாய்ப்பு கிடைச்சிருக்கு" - குமார் மந்திரிப்பது போல் பேசினார்.

"நான் இதுவரைக்கும் யாரெல்லாமோ சத்ரு சம்ஹாரம் நடத்தினதாக் கேள்விப்பட்டிருக்கிறேன்."

பத்திரிகைகள் சிலதிலயும் வாசிச்சிருக்கேன். ஆனா, அதெல்லாம் உண்மையா இருக்காதுன்னுதான் நினைச்சுட்டிருந்தேன்."

பிரபாகரன் கோடெளனின் வெளிப்புறத்திலிருந்து பலகைகளின் நடுவே இருந்த இடைவெளி வழியாக உட்புறம் நின்றுகொண்டிருந்த மலைவாசிப் பெண்ணையே கவனித்துக் கொண்டிருந்தான்.

நிமிடங்கள் சில கடந்தன.

அந்தப் பெண்ணிடம் ஏதோ ஒரு மாற்றம் தென்பட்டது. அவளது உடம்பில் ஒட்டியிருந்த குங்குமத்தின் நிறம் முதலில் மறையத் தொடங்கியது. அது மட்டுமின்றி அவளது உடம்பில் இன்னதென்று விளக்க முடியாத ஏதோ ஓர் ஒளி பரவிக்கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்குள் நெருப்பில் கனிந்த ஒரு வெண்கலச் சிலைபோல் மாறிவிட்டிருந்தாள்.

அந்த உடம்பில் வந்து விழுந்த பூவிதழ்கள் கருகத் தொடங்கின. ஜயந்தன் வீசிய குங்குமமும், ஹோமப்பொடியும் அவள் மீது பட்டவுடன் நெருப்புத் துணுக்களாகச் சிதறின.

நடப்பதெல்லாம் தன்னுடைய மகத்தான மாந்திரீக சக்தியின் விளைவு என்றுதான் ஜயந்தன் கர்வத்துடன் நினைத்துக்கொண்டார். எனவே அதையொட்டி அவரது உதடுகள் மந்திரத்தை உரு விட்டுக் கொண்டிருந்தன.

அந்தப் பெண்ணிடம் மீண்டும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அது.....யாருமே எதிர்பார்க்காத விதத்தில் ஜயந்தன் கூட யூகிக்கமுடியாத விதத்தில் அமைந்திருந்தது அந்த மாற்றம்.

அந்த மலைவாசிப் பெண் குனிந்த தலையுடன் தரையில் உட்கார்ந்தாள்.

திடுமென்று முன்புறமாகக் கைகளை நீட்டியவள் ஹோமகுண்டத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் நெருப்புக் கங்குகளுக்குள் விரல்களைச் செருகி நெருப்புத் துண்டுகளை வாரி வாரி எதிரே இருந்த ஜயந்தன் மீதும், அவரது மடியில் இருந்த பிணத்தின் மீதும் வீசியெறிந்தாள்.

எதிர்பாராத இந்தச் சம்பவத்தால் ஜயந்தனின் கோபம் சட்டென்று உயர்ந்தது. உடனே இடதுபுறம் திரும்பியவர், வெண்கலக் கிண்டி ஒன்றில் பிடித்து வைத்திருந்த சேவலின் இரத்தத்தைக் கையில் ஊற்றி, அதை அவளுக்கு நேராகத் தெளித்தார்.

இரத்தத் துளிகள் உடம்பில் பட்டதும் அந்தப் பெண் பின்புறமாக மல்லாந்து விழுந்து அசைவற்றுப் போனாள்.

மடியில் கிடந்த பிணத்தை ஒருபுறமாக இழுத்து எறிந்துவிட்டு ஜயந்தன் எழுந்தார்.

மாந்திரீகனின் பரபரப்பைக் கவனித்த சந்துநாயர் கேட்டார் "ஏன்....என்ன ஆச்சு?"

"ஹோமம் தோல்வியடைஞ்சிடுச்சு. ஏதோ ஒரு சக்தி பின்னணியில வலுவா வேலை செய்யுதுங்கிறது உறுதியாயிடுச்சு. முதலில் அந்தச் சக்தியைக் கண்டுபிடிக்க வேண்டும்" - ஜயந்தன் கோபம் நிறைந்தவராக வெளியேற முயன்றார்.


"நான் ஏதாவது மாற்று ஏற்பாடோ, பொருட்களோ கொண்டுவரணுமா?" - சந்துநாயர் கேட்டார்.

"நீங்க யாரும் எதுவும் செய்யவேண்டியதில்லை. இதை நானேதான் பார்த்துக்கணும்." ஜயந்தனது குரல் உறுதியுடன் வெளிவந்தது.


வெளியே மலைஜாதிப் பெண்ணின் அப்பா, அம்மா நின்றுகொண்டிருந்தனர். "உங்கள் மகளை அழைத்துக் கொண்டு போங்கள்!" என்று சொல்லிவிட்டு எங்கேயோ பார்த்தார் ஜயந்தன்!

*(வாசனை வீசும்....)*

# பெண் என்பவள்



இந்தியா பாரம்பரியமும், கலாசாரமும் நிறைந்த தேசம். ஆனால் அவைகளை முழுமையாகப் புரிந்துகொண்டவர்கள் இங்கே மிகக் குறைவு. எதற்கெடுத்தாலும் நாம் அமெரிக்காவையும், மற்ற மேற்கந்திய நாடுகளையும் பார்த்து அவைகளைப் பின்பற்ற முயல்வது நமக்குள்ளே



ஊறிப்போய்விட்டது. அந்த நாடுகளில் எல்லாமே மோசம் என்று நான் கூறவில்லை. எங்கேயும் நல்லதும், கெட்டதும் கலந்துதான் இருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அங்கே நிலவுகிற நல்ல விஷயங்களைவிட, கெட்டவைதான் நம்முடைய கவனத்தை அதிகமாக ஈர்க்கின்றன.

உதாரணத்துக்கு, திருமணம். இங்கே திருமணம் புனிதமானது. ஆயிரம் காலத்துப் பயிர் என்றெல்லாம் மதிக்கப்படும் ஒரு விஷயம். ஆனால், அமெரிக்காவில், திருமணம் என்பது வாழ்க்கையின் ஒரு கட்டம். அங்கே நடைபெறும் மூன்று திருமணங்களில் ஒன்று, சூட்டோடு சூடாக விவாகரத்தில் போய் முடிந்து விடுகிறது. அங்கே திருமணம், விவாகரத்து, மறுமணம் போன்றவை எல்லாம் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. அந்த நிலைமை இங்கேயும் அதிகரித்து வருகிறது என்பது கவலையுடன் கவனிக்கப்படவேண்டிய ஒரு விஷயம்.

***திருமணம் :*** இதுபற்றி பலரும் பல்வேறு தருணங்களில் கூறிய ஒரு சில கருத்துக்களை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். திருமணம் என்பது காதல் கல்லறை என்று கூறுகிறார் ஒருவர். அவரது கருத்துப்படி, காதல் என்பது, திருமணத்துடன் முற்றுப் புள்ளி விழுந்து விடுகிற ஒரு விஷயம்.

திருமணத்துக்குப்பின், கணவனும், மனைவியும் ஒருவரையொருவர், காதலிப்பது என்பது சாத்தியப்படாத விஷயம். இன்னொருவர், இன்னும் ஒரு படி மேலே போய், திருமணம் என்பது சட்டம் அங்கீகரிக்கும் விபசாரம் என்று கூறியுள்ளார்.

ஆனால், திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நிலவுகிற உறவு. இதில் மனதுக்கும் இடமிருக்கிறது என்ற கோணத்தில் பார்த்து கருத்துச் சொன்னவர்களும் உண்டு. ஒருவர், திருமணத்தில் கணவன் என்பவன் மீது குறைந்த அளவில் அன்பைச் செலுத்தி, அதிகமாக அவனைப் புரிந்து கொண்டாலே போதும். ஆனால் பெண் அப்படி இல்லை. அவள் மீது அபரிமிதமான அன்பு பொழிந்தாலே போதும். பெண்ணைப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டாம். அது சிக்கல் நிறைந்தது. நகைச்சுவையாகச் சொல்லப்பட்டிருந்தாலும், ஆண், பெண் இருபாலாரையும் மனோதத்துவ ரீதியில் அணுகும் கருத்து இது.



பெண்ணைப் பற்றி இப்படி ஒரு கருத்தும் சொல்லுவார்கள். பெண் என்பவள் ஒரு நெருப்பு. அவளை மிகவும் நெருங்கிவிட்டால், சுட்டு எரித்து விடுவாள். ரொம்பவும் எட்டத்தில் நின்றுவிட்டாலோ. பெண்ணின் கதகதப்பை உணரவே முடியாது.

இந்தக் கருத்தை நான் சற்றே மாற்றிக் கூற விரும்புகிறேன். பெண் என்பவள் ஒரு விளக்கு போல. அதனைக் கொண்டு வீட்டில் உள்ள இருளைப் போக்கி, வெளிச்சத்தைக் கொடுக்கவும் முடியும். அதே சமயம் அந்த வீட்டையே கொளுத்தி அழித்து விடவும் முடியும். அதுபோலவே, பெண் ஒருத்தியால், வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்படியும் செய்ய முடியும். துன்பக் கடலில் மூழ்கடிக்கச் செய்யவும் முடியும்.


வாழ்க்கையில் பொதுவாகவே மனிதர்களுக்கிடையேயும், குறிப்பாக கணவன் - மனைவிக் இடையிலேயும் இரண்டு விஷயங்கள் கண்டிப்பாக இருந்தே தீரும். அவை இல்லாமல் வாழ்க்கை என்பது சாத்தியமே இல்லை. அந்த இரண்டு விஷயங்கள் என்ன தெரியுமா? ஒன்று கருத்து வேறுபாடு. இன்னொன்று - பிரச்சினைகள்.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சமயத்தில் ஏற்படுகிற கருத்து வேறுபாடுகளும் பிரச்சினைகளும் அற்பமானவைகளாகவும் இருக்கலாம் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும்படியாகவும் இருக்கலாம்.

சில தருணங்களில், நீங்கள் வீட்டு நுழைவாயிலில் போடப்படுகிற ஒரு மிதியடியைப் போலக்கூட உணரலாம். வீட்டுக்கு வருகிறவர் யாராக இருந்தாலும், வீட்டுக்குள்ளே நுழைவதற்கு முன்பு, ஒருசில விநாடிகள் நின்று, தன் செருப்புக்களில் உள்ள அழுக்குகளையும், அசிங்கங்களையும் அங்கே போடப்பட்டிருக்கிற மிதியடியில் துடைத்துவிட்டு, உள்ளே வருவார்களே! அதைப்போல, பல்வேறு பிரச்சினைகளும், உங்கள் தலை மீதே வந்து விழலாம்.

கருத்து வேறுபாடு ஆனாலும் சரி, பிரச்சினைகள் ஆனாலும் சரி, நாம் அவைகளைச் சந்தித்தே தீர வேண்டும். அது எப்படி சாத்தியமாகும்? கருத்து மாறுபாடு என்பது தவிர்க்க முடியாதது. நமக்கு நம்முடைய கருத்து எத்தனை சரியோ, முக்கியமானதோ அதுபோலவே அடுத்தவருக்கும் அவரது கருத்து முக்கியமானது; அவருக்கு அவரது கருத்துதான் சரி என்கிற எண்ணம் இருக்கும். இந்த அடிப்படை விஷயத்தைப் புரிந்து கொள்ளுகிற மெச்சூரிடி வேண்டும்.

அடுத்ததாக,



பிரச்சினைகள். அவை இல்லாமல் மனிதர்கள் கிடையாது; வாழ்க்கை கிடையாது; ஏன், உலகமே கிடையாது. பிரச்சினைகள், வாழ்வின் ஒரு அங்கம் என்று புரிந்து கொள்ளும் புத்திசாலித்தனம் நமக்கு வரவேண்டும்.

பதஞ்சலி என்பவர் யோகாசனக் கலையின் முன்னோடிகளில் முக்கியமானவர். அவரது 'யோக சூத்திரம்' வாழ்க்கையின் பல ஆழமான பரிமாணங்களை எடுத்துக்கூறும் நூல். அதிலே அவர் கருத்து மாறுபாடு, விவாதம் பற்றியும் விவரமாக எடுத்துச் சொல்கிறார்.

ஒரு விஷயம் குறித்து கருத்துச் சொல்லுவதில் மூன்று விதமான அணுகுமுறை உள்ளதாக அவர் சொல்லுகிறார். முதலாவது தர்க்கம். இரண்டாவது குதர்க்கம். மூன்றாவது விதர்க்கம். தர்க்கம் என்பது, எது ஒன்றானாலும் அதைப்பற்றி தனக்கென ஒரு கருத்தை ஏற்படுத்திக் கொள்வது. : குதர்க்கம் என்பது, அந்த கருத்துதான் சரியானது என்று காரணங்களை அடுக்கிக்கொண்டே போவது. விதர்க்கம் என்பது ஒரு பொருள் குறித்து, மாறுபட்ட கருத்துக்களை தானே அலசிப்பார்த்து, சரியானதா எனது கருத்து என்று தானே கண்டுணர்ந்து கொள்வது.

ஆனால், இன்று பொதுவாகவே என்ன நடக்கிறது. ஒவ்வொருவரும் தன் கருத்துத்தான் சரி. அடுத்தவர் சொல்வது தவறு என்று அசைக்க முடியாத எண்ணம் கொண்டிருக்கிறார்கள். இதனால், இருதரப்பினரும், தான் சொல்வதுதான் சரி என்று விவாதம் புரிகிறார்கள். அடுத்தவரும் தன்னுடைய கருத்துத்தான் சரி என்று ஒப்புக்கொள்ள வைக்கவேண்டும். அதுதான் தனக்கு வெற்றி என்கிற எண்ணத்தில் கருத்து மோதல் தொடர்கிறது; தொடர்கிறது; முடிவே இல்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 146க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எஸ். தேவிகா, பாலையூற்று, திருகோணமலை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ஜி.கனகசிங்கம், கிழக்கு வீதி, பதுளை.
2. த.ரேணுகா, பிரதான வீதி, புத்தளம்.
3. வே.விமலேந்திரன், மடுல்சீமை, பதுளை.
4. சி.காஞ்சனா, டிக்கோயா வீதி. ஹட்டன்.
5. எஸ்.எழில் வேந்தன். மானிப்பாய், யாழ்ப்பாணம்.
6. ஜி.மங்கையற்கரசி, சொய்சாபுர. மொரட்டுவ.
7. ப.மதியழகன், பிரதான வீதி, ஓட்டமாவடி.
8. கு. பழனிசாமி, பிரதான வீதி, தலவாக்கலை.
9. பவானி. கதிரேசன் வீதி, கொழும்பு 13.
10. பார்த்தீபன், களுபோவில, தெகிவளை.

## குறுக்கெழுத்துப் போட்டி 148

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | ■ | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | ■ | 22 | ■ | 24 |
| 25 | 26 | 27 | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | ■ |

### இடமிருந்து வலம்

1. இலக்கண வரையறைகளுடன் அமையப் பெற்ற நூல்.
7. தளபாடங்கள் செய்ய உபயோகப்படும். (குழம்பியுள்ளது).
11. குலம் என்றும் பொருள்படும்.
15. யானையின் கொம்பு. (குழம்பியுள்ளது).
19. பார்வையின் மூலாதாரம்.
25. இன்றைய நவீனத்தின் முக்கிய பங்காளி. (குழம்பியுள்ளது).
29. நடிகை (திரும்பியுள்ளது)
31. 'எண்ணும் எழுத்தும்' என்பதில் வரும் எண் இதனையே குறிக்கும். (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. மொழியை ஒழுங்குபடுத்தி அதற்கு அழகு சேர்க்கும் நூல்
2. பன்மையைக் குறிக்கும் சொல் (தலைகீழ்).
3. போத்தல் போன்றவற்றின் மூடிகளை இப்படியும் கூறலாம். (குழம்பியுள்ளது).
5. மாலை நேரம் என்றும் பொருள்படும். நிறப் பொருட்களையும் குறிக்கும். (குழம்பியுள்ளது).
6. சூழ்ச்சி அல்லது குள்ளத்தனம் என்று பொருள் (குழம்பியுள்ளது).
16. இடையூறு என்று கூறலாம்.
20. பொறி என்று பொருள் (குழம்பியுள்ளது).
27. கணக்கிடு அல்லது மதிப்பிடு என்று கொள்ளலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 146 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 யா | 2 ர | 3 தி | 4 யா | 5 ற் | ■ |
| 7 லை | 8 க | ■ | 10 ழ் | 11 கூ | ■ |
| 13 வ | 14 டி | 15 கா | ■ | 17 ம | 18 தீ |
| 19 ண | ■ | 21 த | 22 லா | 23 ம் | ■ |
| 25 ம் | 26 ம | 27 ல் | 28 கு | ■ | 30 ய் |
| ■ | 32 றி | ■ | 34 க் | 35 கு | 36 ரா |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 13.12.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

**குறுக்கெழுத்துப் போட்டி இல-148**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இணை பிரியா இதயங்கள்

**கா**லை 6.30 மணி.

வானொலியில் செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. கண்களைக் கசக்கி எழுந்தான் சஞ்சய். அப்போது செய்தியில் இன்று உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகளை இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்று இணையத்தள முகவரி கூறப்பட்டது. அதை அவசர அவசரமாக எழுதி வைத்தான் சஞ்சய். காலையில் குளித்துவிட்டு, சாப்பிட்டுவிட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படுகையில் அம்மாவிடம் தரண் வீட்டுக்குப் போய்ட்டு அப்படியே ரிசல்ஸ்சையும் பார்த்துவிட்டு வருகிறேன் என்றான் சஞ்சய். தரணின் வீட்டை நெருங்குகையில், தரணும் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். தரணைக் கண்டதும் உன்னைப் பார்க்கத்தான் வருகிறேன் என்றான் சஞ்சய். உடனே, நானும் உன்னைப் பார்க்கத்தான் புறப்பட்டேன் என்றான் தரண். எதுக்கு என்றான் சஞ்சய்? "இன்று பரீட்சை முடிவுகள் இணையத்தளத்தில் வெளியாகுதில்ல. அதைப் பார்க்கத்தான்" என்றான் தரண். "நானும் அதற்குத்தான் வந்தேன்" என்றான் சஞ்சய். இருவரும் புறப்பட்டார்கள். சென்று கொண்டிருக்கையில் தரண் கேட்டான் என்னடா டென்ஷனாக இருக்கிறாய்? வேறென்ன ரிசல்ஸ் பார்க்கப்போறமில்ல அதுதான் என்றான் சஞ்சய். அதுக்கு ஏன்டா பயப்படுகிறாய் நம்ம ரெண்டு பேருக்கும் ஒரேமாதிரியான முடிவுதான் கிடைக்கும். நம்ம நண்பர்களான இந்த ஏழு வருடத்தில் படிப்பைப் பொறுத்த வரையில் எங்கயாவது நாம கோட்டவிட்டிருக்கமா? நாம எழுதின சாதாரணதரப் பரீட்சையில் கூட ரெண்டு பேருக்கும் ஒரே ரிசல்ஸ்தானே! பிறகு எதுக்குப் பயம் என்றான் தரண். அது இல்லடா நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரியான முடிவு வரும் என்று எனக்கும் நிறைய நம்பிக்கை இருக்குது. ஆனா இதுவரைக்கும் நாம எதுலையுமே பிரிஞ்சது இல்லை. விளையாட்டுப் போட்டியிலும் ரெண்டு பேரும் ஒரே இல்லத்தக்கு விளையாடினோம். எல்லா வகுப்பிலும் ஒரே பிரிவில் படிச்சோம்.

உயர்தரத்திலும் இருவரும் கலைத் துறையையே தெரிவு செய்தோம். இப்ப இந்த உயர்தர ரிசல்ஸ் நம்மல பிரிச்சு வெவ்வேறு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்து விட்டால்.... அதை நினைத்தால் தான் பயமாகவும் கவலையாகவும் இருக்கிறது என்றான் சஞ்சய். சரி அதைப்பிறகு யோசிப்போம் வா என்று கூறியவாறே இன்டர்நெட் க.'.பேக்குள் சென்றான் தரண். கூடவே சஞ்சயும் போனான். பரீட்சை முடிவோ எதிர்பார்த்தது போல் இருவருக்கும் ஒரே மாதிரியான மூன்று ஏ. கலைத்துறையில் என்ற படியால் பல்கலைக்கழகத்திற்கான அனுமதி கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. இருவருக்கும் ரொம்ப சந்தோஷமாக இருந்தது. தரணும் சஞ்சயும் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது தரண் கேட்டான் சஞ்சய் உன் மாமா மகள் நிவேதாவை நீ விரும்புகிறாய் தானே? ஆமா அதென்ன தெரியாத ஆள் மாதிரி புதுசா கேக்கிற? என்றான் சஞ்சய். தரணோ இல்ல, அவளும் உன்னை விரும்புகிறாளா? என்றான். அதுதான் எனக்கு அவள் அவளுக்கு நான் என்று எங்க அம்மா அப்பாவும் அவள்ற அம்மா அப்பாவும் எப்பவோ பேசி முடிவான விடயம் தானே. அவளுக்கும் விருப்பம் இருக்கும் என்றுதான் நினைக்கிறேன் என்றான் சஞ்சய். நினைக்கிறேன் என்பதையெல்லாம் ஒரு மூலையில் போட்டுவிட்டு இது விடயமாக நிவேதாவோடு பேசு என்றான் தரண். உடனே சஞ்சய் கேட்டான் ஏன் உனக்கு ஏதும் சந்தேகமாக இருக்கிறதா? அல்லது நிவேதா யாரையும் விரும்புகிறாளா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவள் மனசில் என்ன இருக்குது என்பதை நீயே கேட்டு அறிந்து கொள்வது உனக்குத்தானே நல்லம். மற்றப்படி ஒன்றுமில்லை என்றான் தரண். நிவேதாவுக்கும் விருப்பம் இருக்கிறது என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இருந்தாலும் உனக்காக பேசுகிறேன் என்றான் சஞ்சய். இதற்கிடையில் இருவருக்கும் எதிர்பாராத இன்னுமொரு சந்தோஷம் வந்து சேர்ந்தது. அது யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தில் கல்வி கற்பதற்கான அனுமதி இருவருக்கும் கிடைத்துதான். அந்த சந்தோஷத்துடனே நிவேதாவுடன் பேசினான் சஞ்சய். நிவேதா நீ யாரையாவது காதலிக்கிறாயா? என்றான்.

உடனே அவளும் ஆமாம் அத்தான் இது விடயமாக நானே உங்களுடன் பேச இருந்தேன். நல்லவேளை நீங்களே ஆரம்பித்து விட்டீர்கள் என்றாள். அது யார்? என்றான். என்ன தெரியாத மாதிரி கேட்கிறீர்களா? அல்லது நானே சொல்லவேணும் என்று ஆசைப்படுறீங்களா? அப்படியானால் பரவாயில்லை. அவன் பெயர் சஞ்சய் என்றாள் நிவேதா. சிரிப்போடு திரும்பி எனக்குத் தெரியும் என்று அவளைக் கட்டி அணைக்க முற்பட்டான். அவள் வெட்கத்தில் விலகி ஓடினாள். அதன் பின் சஞ்சயோடு பேசுவதற்கே வெட்கப்பட்டாள் நிவேதா. சஞ்சயும் பேச எத்தனித்த போதெல்லாம் நிவேதா ஓடி ஒளிந்தாள். சஞ்சயும் பல்கலைக்கழக விடுமுறைக் காலங்களில் ஊருக்கு வருவான். நிவேதாவும் அஞ்சி அஞ்சிப் பேசுவாள். அவளிடம் ஒரு முத்தம் கேட்டு தவம் கிடந்தான் சஞ்சய். ஆனால் அவளோ தொடக்கூட விடமாட்டாள். ஒருநாள் சஞ்சய், நிவேதாவோடு பேசிக்கொண்டிருக்கும்போது, ஒரு முத்தம் என்று கெஞ்சினான். அவளோ இனிமேல் உங்களோடு தனிமையில் இருந்து பேசக்கூடமாட்டேன் என்று கோபித்தாள். சஞ்சய்க்கும் கோபம் வந்துவிட உரத்தக்குரலில் கேட்டான்: உன்னைக் காதலித்து விட்டு வேறு யாரிடமும் போயா முத்தம் கேட்பது என்றான். அவளும் ஏன் போய்க் கேட்டுப்பார்க்கிறதுதானே என்றாள். சஞ்சயும் சரி, இனிமேல் உங்கிட்ட எதையும் கேட்க மாட்டேன் என்றான் சமாதானமாக. அவளும் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு அத்



தான் இந்த ஆண்டோடு உங்க படிப்பு முடியுதுதானே. அதுக்கப்புறம் நம்ம கல்யாணம் தான். அதன் பிறகு நீங்க கேட்காமலே நான் தினமும் நூறு முத்தம் தர்றேன் என்றாள். உடனே அவளை அருகில் இழுத்து, அதில் இருந்து கடைசியாக ஒரே ஒரு முத்தத்தை இப்ப அட்வான்ஸாகத் தா, மீதியை பிறகு தாவேன் என்றான் சஞ்சய்.

நீங்க ரொம்ப மோசம் அத்தான் என்று தள்ளிவிட்டாள் நிவேதா. சரி பரவாயில்லை வந்து மொத்தமாக வாங்கிக் கொள்கிறேன் என்றான் சஞ்சய். இரு தினங்களில் யாழ். புறப்பட்டார்கள் சஞ்சயும், தரணும்.

இறுதியாண்டு பரீட்சையும் முடிந்தது சஞ்சயும், தரணும். அங்கு ஏனைய நண்பர்களிடமும் ஆட்டோகிராப் வாங்கி, பிரியா விடையும் பெற்று ஊருக்குத் திரும்பினார்கள். அந்த சோகத்திலும் சஞ்சயின் முகத்தில் ஒரு சந்தோஷம் தெரிந்தது.

பஸ்ஸில் வைத்து சஞ்சயைப் பார்த்து தரண் கேட்டான், இன்று ரொம்ப சந்தோஷமாக இருக் கிறாய். ஆமாண்டா நான் போய் இறங்கிய உடனே நிவேதா ஓடி வந்து என்னைக் கட்டி அணைச்சு முத்தம் தரப்போற அந்தக் காட்சியை நினைக்க நினைக்க.... என்றபோது எதிரே வந்த வாகனமொன்றோடு மோது வதைத் தவிர்ப்பதற்காக திரும்பிய பஸ், பாதையை விட்டு விலகி பெரிய பள்ளம் ஒன்றில் விழுந்து புரண்டு உருண்டது. அந்த இடத்திலேயே சஞ்சய், தரண் உட்பட பலர் இறந்தனர். ஒரு நொடிப் பொழுதில் காதல், கனவுகளோடு கலைய நட்பு, கைகோர்த்தது மரணத்தில். சஞ்சய், தரண் இருவரது சடலமும் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. சஞ்சயின் உயிரற்ற உடலை கட்டி அணைத்து அவன் குறும்புத்தனங்களை யெல்லாம் நினைத்து நினைத்து அழுதாள் நிவேதா. உறவுகளும் கூடியிருந்து ஒப்பாரி வைக்க, சஞ்சயைக் கட்டியணைத்தபடியே விஷ மருந்திய நிவேதாவின் உயிரற்ற உடலும் சரிந்து விழுந்தது.

கலைந்த காதல் கனவை கல்லறைக் குள் காவியமாக்கினாள் நிவேதா.

**–வ. சந்திரபிரசாத், மாமாங்கம்**

# சூழ்நிலை வாழ்க்கை

"**நி**வேதி! நிவேதி! எங்கடி போய் தொலைஞ்ச? ம்...ம்...விடிஞ்சி குளியல்ல இருந்து தூங்குறவரைக்கும் இவ அப்பன நானே பாத்துக்கணும். அவர பாத்துக்கிறது காணாம, இவ வேற செவுடு. ஏன்டி நான் கூப்பிடுறது கேக்கல்ல? அப்படி எந்த கோட்டயடி பிடிக்கபோற? உன்னத்தான்டி கேக்கிறன் காதுல விழல்ல?"

"ஏன்ம்மா என் உயிர வாங்கிற. கொஞ்சம் நிம்மதியா இருக்க விடமாட்ட?"

"ஆமாடி இதுவும் சொல்லுவ, இன்னமும் சொல்லுவ. உங்கப்பா பக்கவாதத்துல படுத்ததில இருந்து இந்தக் குடும்பத்த காப்பாத்த எப்ப அந்த தையல் மெஷின மிதிச்சனோ இன்னும் என் கால் ஓயலடி. இங்க பாரு நிவேதி குட்டி, அம்மா சொல்லுறத கேளு. இந்த வரனையும் வேணாம்னு சொல்லிறாதம்மா, ரொம்ப நல்ல இடம். உன் வயசுல எல்லா பொண்ணுங்களும் கட்டிட்டாங்க. எனக்கும் உன் கல்யாணத்த பாக்க ஆச இருக்காதா?"

"யோசிச்சு நல்ல முடிவா எடும்மா."

விசாலம் மீண்டும் தையல் மெஷினில் அமர்ந்து தன் தொழிலைக் கவனிக்கத் தொடங்கினாள். தன் தாயையே கவலையோடு பார்த்துக் கொண்டிருந்த நிவேதி, பாவம் இவள் மனதில் தன் மகளைப் பற்றிய எத்தனை எதிர்பார்ப்புக்கள். எந்த தாய்க்கும் இருக்க வேண்டிய கவலைதான். அதுவும் இவர்களுக்கு நான் ஒரே மகள். அப்பாவும் படுத்த படுக்கையாகி விட்டார். அவர்களுக்கு என் எதிர்காலத்தைப் பற்றிய பயம் இருக்குமல்லவா? நான் எவ்வளவு



வேதனைப் படுத்துகிறேன் இவர்களை. ஏன் என்னால் கல்யாணத்துக்கு சம்மதிக்க முடியல்ல? மனம் லேசாக கசிந்தது. ஓ! மீண்டும் வந்துவிட்டாயா ராகுல்! என் மனதை விட்டுப் போய்விடு. ஏன் என்னை சித்திரவதைப்படுத்துகிற ராகுல். இப்படியெல்லாம் கேட்கணும்னு தோணுது. ஆனா என் மனசு அதுக்கு மறுப்பு தெரிவிக்குது ராகுல். நீ இறந்தாலும் என் மனசுல குடியிருக்கிற ராகுல். உனக்கொன்னு தெரியுமா? நான் ரொம்ப அதிஷ்டக்காரி. நீ இளமையாவே என் மனசுல எப்பவும் இருப்ப. நம் காதல் நினைவுகள் எப்பவுமே என் மனசை விட்டு அழியாது. உன் நினைவுகளோடே காலம் முழுக்க வாழம்னு நினைக்கிறன் ராகுல். ஆனா இந்த உலகம் என்ன விட்டுவைக்காது ராகுல். என்ன மன்னிச்சுரு.

நான் ஒரு முடிவுக்கு வந்துட்டன். நான் கல்யாணம் பண்ணிக்கலாமுன்னு முடிவு பண்ணிட்டன். என் ஆசைகள், கனவுகள் எல்லாம் நீ போன பிறகே நான் குழி தோண்டி பொதச்சிட்டன். இனிமே மத்தவங்கள் சந்தோஷப்படுத்துறதுக்காக நான் கல்யாணம் பண்ணிக்கப் போறன். என்ன பொறுத்தவரைக்கும் இது இரண்டாவது கல்யாணம். உனக்கும் எனக்கும் ஏற்கனவே மனசளவுல கல்யாணம் முடிஞ்சு போச்சே. இந்தக் கல்யாணம் சமூகத்துக்காகப் பண்ணிக்கப்போறன்.

முடிஞ்ச வரைக்கும் என்ன கட்டிக்கப் போறவருக்கு ஒரு நல்ல மனைவியா வாழப்போறன்.

நிவேதா ஒரு தீர்மானத்தோடு தன் தாயை நோக்கிச் சென்றாள்.

**-பா. நதா, திருமலை.**

# குழந்தைக்காக.....

**அ**ழகேசனின் முடிவு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சிலருக்குக் கவலையாயிருந்தது; சிலருக்கு ஏளனமாயிருந்தது; இன்னும் சிலருக்கு ஆத்திரமாயும் இருந்தது. அப்படி என்னதான் முடிவு எடுத்துவிட்டார் அவர்.... 'திருமணம் செய்யப் போகிறேன்' என்று சொன்னது ஒரு விடயமா.....?!

இல்லைத்தான்...ஆனால் இரண்டாம் திருமணம் செய்யப்போகிறேன் என்று சொன்னதும், மகளையே அவளது இரண்டாவது தாயைத் தெரிவு செய்யச் சொன்னதும்தான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணமாய் அமைந்தது.

எட்டு வருடங்கள் எட்டு நிமிடங்களாய் கரைந்து போனது எப்படி என்று அவரால் ஊகிக்கமுடியவில்லை. அத்தனை இனிமையாகவும், மகிழ்ச்சியாகவும் சென்றது அவர்களது மணவாழ்க்கை. அது 'நெருப்பில் விழுந்த மலர்போல' இத்தனை சுலபத்தில் கருகிப்போகும் என்று எவரும் எண்ணிப்பார்க்கவில்லை.

"பத்மாவதி" அவர் உச்சரிக்கும் ஐந்தெழுத்து மந்திரம். அவர் மனைவியின் பெயர். மனைவி என்பதை விட ஒரு நல்ல வாழ்க்கைத்துணை என்றே சொல்லலாம். அவருக்கு ஒரு ஆசானாக, நல்ல நண்பனாக, ஒரு தாயாக, செல்லக் குழந்தையாக என்று எல்லாமே மனைவி பத்மாதான். சாதாரண உதவித் தொழிலாளராக அலுவலகத்தில் சேர்ந்த அவரை உயர்தர உத்தியோகத்தர் நிலைக்குக் கொண்டு வந்தவரும் அவர்தான். சமயங்களில் அழகேசருக்கு ஒரு ஆசிரியராகவும் அவர் இருந்திருக்கிறார். உண்மையில் அவர் ஒரு ஆசிரியரும்கூடத்தான். இருவரும் காதலித்துத்தான் திருமணம் செய்து கொண்டார்கள். இருவரது வீட்டிலும் பெரிய எதிர்ப்பு ஒன்றும் இருக்கவில்லை. சாதாரணமான காதலுக்குரிய சிறிய எதிர்ப்பு தென்பட்டதுதான். ஆனால் பிறகு எல்லாம் சரியாகி இருவரும் பெற்றோர், பெரியவர்கள் ஆசீர்வாதத்துடன் 'வாழ்க்கை ஒப்பந்தம்' செய்து கொண்டார்கள். ஒரு வருடத்திலேயே முத்தான பெண் குழந்தையும் பிறந்தது. அவர்கள் வாழ்வில் உயர்ச்சியும் ஏற்பட்டது.

"எவர் கண்பட்டதோ தெரியவில்லை....இப்படி ஆகிவிட்டதே" என்று எல்லோரும் அங்கலாய்த்தார்கள். இதிலே கண்படுவதற்கோ, காது படுவதற்கோ ஒன்றுமில்லை. அவரவர் ஆயுட்காலம் முடிவடைந்ததும் மரணம் வந்து அவர்களைத் தழுவிக்கொள்ளும் என்பதுதான் உண்மை. இந்த உண்மை எல்லோருக்கும் தெரிந்திருந்தும் எவரும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. மரணம் மட்டும்தான் நிச்சயமானது என்பதை எவரும் உணர்ந்து கொள்வதில்லை. அதனால்தான் இத்தனை பிரச்சினைகளும் சண்டை சச்சரவுகளும்.


அந்த மகராசியின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டது போலும். அதனால்தான் காலன் நோய் எனும் ஆடை அணிந்துவந்து அவளின் உயிரைக் கொண்டு சென்றுவிட்டான். காலன் ஒரு வேடதாரிதான். ஒவ்வொருவரையும் வெவ்வேறு வேடமணிந்து வந்து அவன் கடமையை முடித்துச் சென்றுவிடுவான். அவன் மிகவும் கடமையுணர்ச்சியுடையவனும் கூடத்தான். எவரையும் அவன் வீட்டுச் சென்றதுமில்லை.

உற்றார், உறவினர், நண்பர்கள், அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் என அத்தனை பேரும் அழுதார்கள். கதறினார்கள். கடவுளைத் திட்டினார்கள். கொடுத்தால் வாழ்த்துவதும், பறித்தால் திட்டுவதும் தானே மனிதப் பண்பு. இவர்கள் ஒவ்வொருவருக்குமான திகதிகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்பதை எவரும் எண்ணிப் பார்க்கவில்லை. யதார்த்த வாழ்க்கையை எவரும் வாழ்வதில்லை. அப்படி வாழ்வதும் முடியாத ஒன்றுதான். ஆனால் யதார்த்தத்தை உணர்ந்ததால்தான் இன்று அழகேசனும் அத்தனை பேருடைய பார்வைக்கும் ஆளாகியிருக்கிறார்.

அன்று மனைவியின் மரணம் அவரை மிகவும் பாதித்ததுதான். பிரிவுத் துயரம் அவருக்கும் இருந்ததுதான்..... ஆனால் அவர் மரணத் தத்துவத்தை உணர்ந்திருந்தார். அதனால் அவர் அழவில்லை..... அவர் கவலைப்பட்டதெல்லாம் அவர் மகளைப் பற்றித்தான். தாயில்லாமல் எப்படி அவளால் வாழ முடியும்? தன்னால் தனியாக எப்படி அவளை வளர்க்க முடியும்?

தனக்கு இனி அம்மா இல்லை என்ற கவலையும், ஏக்கமும் அந்தச் சிறுமியின் முகத்திலும், செயலிலும் நன்கு புலப்பட்டது. எவரோடும் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. அவளையொத்த சிறுவர்களுடன் விளையாடுவதில்லை. படிப்பிலும் சற்றுக் கவனக் குறைவாகவே இருந்தாள். எந்நேரமும் ஓர் ஓரமாக ஒதுங்கியிருந்து, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து இருப்பதுமாக இருந்தாள். அழகேசனும் முயன்று பார்த்தார்.

"மகள்.....அம்மா இல்லாட்டி என்ன...? அப்பா உங்களோடதானே இருக்கிறன்...



இப்படியே இருந்தா எப்படி.... நல்லா சாப்பிடவேணும், படிக்கவேணும், விளையாட வேணும்... அப்பதானே... அம்மா மேல இருந்து பிள்ளையப் பார்த்துக் கொண்டிருப்பா... பார்த்து சந்தோஷப்படுவா..." என்று அறிவுரைகள் சொன்னார். அவளில் இன்னும் கூடுதல் கவனமெடுத்து அன்பு செலுத்தினார்.

"ஆனாலும்...என்ன செய்தாலும், ஒரு அப்பா அம்மாவாக முடியாது' என்பதை நாளடைவில் புரிந்து கொண்டார். ஒரு பெண் பிள்ளைக்கு அம்மாவின் அரவணைப்பும், ஆதரவும், அறிவுரைகளும் கட்டாயம் வேண்டும். அவர்களின் பல பிரச்சினைகளுக்கு அம்மாவால் மட்டுமே தீர்வுகாண முடியும் என்பதையும் அறிந்துகொண்டார். அதுதான் அவரின் திருமண ஏற்பாட்டிற்கான காரணம்.

ஊரார் தன்னைப்பற்றி என்ன சொன்னாலும் பரவாயில்லை. என்ன எண்ணினாலும் பரவாயில்லை. தனது குழந்தையின் எதிர்காலம்தான் தனக்கு முக்கியம் என்று மேற்கொண்டு வேலைகளைக் கவனித்தார்.

பலர் பலமாதிரியாகப் பேசினார்கள். "மனைவி போய் ஒரு வருஷம் கூட ஆகயில்ல, அதுக்குள்ள இந்தாளுக்கு இன்னொரு பொம்பிள கேக்குது...." என்று வாய்கூசாமல் பேசினார்கள். அறிவுரைகள் சொன்னார்கள். சிலர் அவரை ஆதரித்தாலும் பலரின் எதிர்ப்பு அவரை சஞ்சலத்துக்கு உள்ளாக்கியது. ஒருவேளை தான் நினைப்பது தவறோ, செய்வது பிழையோ...என்று எண்ணினார். இதற்குப் பதில் சொல்லக்கூடிய ஒருவர் தன் மகள்தான் என்பதைப் புரிந்து கொண்டார்...நேரே மகளிடம் சென்றார்.

வழமைபோல் தந்தையைக் கண்டதும், ஓடிவந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு அவரை இறுக அணைத்த குழந்தை, அவர் காதருகில் "அப்பா, எப்பப்பா புது அம்மா வருவாங்க...?" என்று ஆசையாகக் கேட்டது.

**-திருமலை இ.மதன்.**

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

## சிந்தித்துப் பார்க்க...

# தோல்வி தான் வெற்றியின் முதல் படி

எந்த ஒரு சாதனையையும் புரிய, நமது ஆற்றல்களை வெளிப்படுத்தி, சரியாகத் திட்டமிட்டு திறம்படச் செயலாற்றி, இடைப்படும் தடைகளை நீக்கி. முன்னேறுவதற்கும், வெற்றிக் கனியைப் பறிப்பதற்கும், எதிர்பராத பிரச்சினைகளையும் மனோபலம் மிக அத்தியாவசியமாகிறது. முன்னேற்றப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருக்கம் போது தடைகளையும், எதிர்ப்புகளையும் நாம் எதிர்கொள் கிறோம். இதனால் நமது மனம் தளர்ந்தோ, ஊக்கமிழந்தோ, நம்பிக்கை யிழந்தோ போக நாம் முயற்சியை கைவிட ஏதுவாகின்றது. இக்கட்டத்தில் நம்மைத் தகுதியற்றவராகவும் நம்மை உருவகப்படுத்துகிறது. நமது மனம் இச்சயத்தில் தான் பொறுமையுடன் சகிப்புத் தன்மையுடனும் விடா முயற்சியுடனும் செயலாற்ற வேண்டும்.

வரவிருப்பதை அல்லது நடக்கவிருப் பதை நம்மால் மாற்ற முடியாது. ஆயினும், நமது மனோபாவத்தின்படி நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தை ஏற்று செயல்பட்டே ஆக வேண்டும். ஒவ்வொரு சூழலில் இருந்தும் ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். நன்மைகளை நாம் செய்தால் தீமைகளை வென்றிடலாம். ஆகவே, எதிலும் நன்மைகளையே எண்ணிச் செய்யுங்கள்.

வெற்றி உன்பது இறுதியில் மட்டும் அல்லாமல் இடையிலும் கிடைக்கக்கூடிய ஒன்று தான். புத்திசாலித்தனத்தை விட தினசரி நடவடிக்கைகளில் திறமையாக நடந்து கொள்வதும் வெற்றிக்கு வழி வகுக்கும். தோல்வி என்பது தற்காலிகமே. தோல்வி ஏற்பட்டால் அதில் வெற்றிக்கான விதையைத் தேடுங்கள்.

# என் இந்தக் கண்ணீர்?

முடிவாகத்தான் சொல்லுகிறாயா? வல்லபன் தன் தோளில் சாய்ந்திருந்த அமுதாவிடம் கேட்டான்.

அமுதா ஆம், முடிவாகத்தான் சொல்லு கிறேன். என் தந்தை ஒரு போதும் நம் காதலுக்கு வாழ்த்துச் சொல்லப் போவதில்லை என்றாள்.

தன் தோளில் சரிந்திருந்த அமுதாவின் கன்னத்தில் விரல்களால் கோடுகிழித்துக் கொண்டே வல்லபன் சில விநாடிகள் யோசித்தான்.

உனக்கு யார் வேண்டும் அமுதா. நானா? உன் தந்தையா?

அமுதா தாமதிக்காமல் உடனே பதில் சொன்னாள்:-

உயிர்.

வல்லபனுக்கு உடனே புரியவில்லை. புருவங்களை உயர்த்தினான்.

என்ன சொல்லுகிறாய் அமுதா நீ?

உங்கள் கேள்விக்கு பதில் சொன்னேன்.

இந்த நேரத்திலும் போய் விளையாடுகிறாய் நீ.



அமுதா தன் முகம் நகர்த்தி வல்லபன் கன்னத்தில் தேன் இதழ்களால் முத்திரை பதித்தாள்.

என் உயிர் நீங்கள்தானே! என்று வல்லபன் சந்தேகத்தை தீர்த்துவைத்தாள்.

சந்தேகம் விலகியபோது வல்லபன் மனதில் நூறு புரவிகளின் வேகத்தில் உற்சாகம். ஆறு யானைகளின் பலத்தில் நம்பிக்கை.

தந்தது ரசிகன்

அமுதாவின் நெற்றியில் தன் உதடுகளால் உற்சாகத்தை உணருவித்தான். நெற்றியில் இருந்து உதடுகள் ஊர்ந்து கீழே நகர, அமுதா தன் இதழ் அரங்கில் வரவேற்புக் கொடுத்து அவன் உற்சாகத்தில் பங்கெடுத்தான்.

பசித்தவன் முன்னால் அறுசுவை விருந்து படைக்கப்பட்டது போல, பாவையின் இதழ்கள் காளையின் உதடுகளுக்கு!

பஞ்சின் இதமாய் மனது உணரும் பாவையின் வயிற்றில் காளையின் கரம் சுதந்திரம் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்த, அமுதா கூச்சத்தில் அசைந்து,

கொஞ்சம் இடம் கொடுத்தால் போதுமே இந்த ஆண்களுக்கு. கரத்தை தடுத்தாள்.

இன்ப சுகத்தில் உள்ளம் மயங்க, வல்லபன் உதடுகளில் வாலிப வார்த்தைகள் உற்பத்தியாகின.

கெஞ்சித்தான் பெறவேண்டும்.

கொஞ்சுவதற்கான அனுமதியும் என்று பெண்கள் செய்யும் அடம் இருக்கிறதே அது இன்பக் கோட்டைக்குச் செல்லும் பாதையில் நீங்கள் போடுத் தடம், ஆண்கள் குப்புற விழுந்தால் உங்களுக்கெல்லாம் குதூகலம்.

கெஞ்ச வைத்தால் தானே பூவின் பெறுமதி வண்டுக்கு தெரியும்.

பொருத்தமில்லாத உதாரணம்
எப்படி?
வண்டென்று சொன்னாய் நீ என்னை!
மலர் பல தேடி தினம்
ஓடும் குண
முண்டு வண்
டுக்கு! ஒரு
மலர்
அதுவே
பொன்மலர், உயிர்மலர் என்று சுற்றிவரும் என்னைப் போய் வண்டென்று உன் வாயால் சொல்லலாமோ?

அமுதா குறும்பாகப் புன்னகைத்தாள். வல்லபன் கன்னத்தில் வலிக்காமல் கிள்ளி விட்டாள்.

தாங்கவில்லை உன்பேச்சால் என் மனம்.

ஓஹோ.... அதற்கு என்ன செய்ய வேண்டுமாம்?

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதே தர்மம்!

குற்றம் செய்ய தூண்டுபவர்கள் தண்டிக் கப்படுவதும் இங்கே உள்ள வழக்கம்.

தூண்டியதும் நீ தான். குற்றம் தோன்றியதும் உன்னிடம்தான்.

தயங்காதே! தர்மத்தை காப்பாற்று.

உத்தரவு பிரபு! குறைந்தபட்ச தண்டனையாக இந்த ஏழைக்கு தாருங்கள்.

மீண்டும் ஒரு குற்றம் என்ன?

பொய் சொல்வதும் குற்றம்தானே?

உண்மை! ஆனால் நான் சொன்ன பொய் என்னவோ பிரபு?

ஏழையென்றாய் உன்னை! ஈரேழு உலகங்களும் ஒத்துக்கொள்ளாது நீ உரைத்த பொய்யை!

சற்று விளக்கிச் சொல்லுங்கள் பிரபு.

விளக்குகிறேன் கேள்! என்ன வளம் இல்லை இந்த திருமேனியில்? திரண்டு கனிந்த பழங்கள், விருந்துக்கென்றே தயாராக வெட்டி வைக்கப்பட்டது போன்ற இரண்டு நல்ல இதழ் சுளைகள்...

போதும்...போதும்

அந்த வார்த்தையை சொல்ல வேண்டியது நீயல்ல நான்! வள்ளலுக்கு அழகு வழங்கிக் கொண்டிருப்பது, வாங்கும் என் போன்ற ஏழைகளுக்கு சிறப்பு போதும் என்று சொல்லும் வார்த்தையை உச்சரிப்பது. ஆனால் வழங்கப்படும்வரை வாங்கிக் கொண்டுமிருப்பது.

இருவரும் நகைத்தனர். இதுவரை பேசிய கேலிகள் இனித்தன.

இருவரும் கலந்தனர். இடையில் இருந்த வெட்கம் என்ற வேலியைக் கடந்தனர்.

வானில் நிலா நாகரீகம் கருதி மேகத்திரைக்குள் முகம் மறைத்தது.

அமுதாவின் அம்மா அழுதுகொண்டிருந்தாள்.

ஆறுதல் சொல்ல அருகில் இருந்த அம்மாவின் தோழி.

பொருத்தமான துணையைத்தானே அமுதா தேடிக்கொண்டாள். அவன் வழி நாடிச்சென்றாள். வாழ்த்துவதை விடுத்து வாய்விட்டு அழுவது முறையோ?

அம்மா அழுவதை நிறுத்தி விடை சொன்னாள்.

எம் சம்மதம் இன்றி திருமணம் முடித்தாள் என்பதை நினைத்து வந்தது அல்ல இந்தக் கவலை!

அம்மாவின் தோழிக்கு வந்தது வியப்பு.

அப்படியெனில் எதற்கிந்த கவலை? ஏன் இந்த அழுகை?

கண்களை துடைத்தபடி அம்மா சொன்னாள்.

அடியே, பாதம் வலிக்கும் என்று அவளை மார்பில் போட்டு வளர்த்தவளடி நான். அதனால் பஞ்சு போல மாறியதடி அவள் பாதம். பாத அழகுக்காக செம்பஞ்சுக் குழம்பை நோகாமல் நான் பூசும் போதும் வலிக்கிறது என்பாளே என்மகள்.

கைப்பிடித்தவன் துணையாக கல்லும் முள்ளும் உள்ள கானக வழியில் அவள் எப்படி நடப்பாளோ? அதுதானடி என் நெஞ்சிலே நெருப்பு!

அம்மா சொல்ல தோழி உறைந்து போனாள்.

காதலனோடு செல்லும் மகளை நினைத்து கலங்கும் தாயின் நிலையைத் தான் கடைச்சங்கத்தமிழ் இலக்கியமான நாலடியார் என்ற நூலில் வரும் ஒரு பாடல் கண்முன்னே நிறுத்துறது. அப்பாடல் இதுதான் :

***அறங்காம்பல் நாறும் வாய் அம்மருகிற்கு***
***- அன்னோ***
***பால்கானம் ஆற்றின கொல்லோ -***
***அறக்கார்ந்த***
***பஞ்சிகொண்டு ஊட்டினும் பையெனப்***
***பையென என்று***
***அஞ்சிப் பின்வாங்கும் அடி***

## சிந்தியா பதில்கள்

**✍ தாய்லாந்துக்குப் பேச்சு நடத்தப் போன புலிகள் என்ன செய்தார்கள் என்பது பற்றி பாலசிங்கம் கூறியதைக் கேட்டேன். அதிர்ந்து விட்டேன். நீங்கள்?**

–அ.சிதம்பரநாதன், மன்னார்.

கேட்டேன். இதய வீணை நடத்துபவர்கள் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பியதால் கேட்க முடிந்தது. ஆலோசகர் யாரோடும் ஆலோசிக்காமலே அப்படிக் கொட்டிவிட்டார். அதுக்காக பின்னாளில் வருந்தியிருப்பார். பெடியளோடு தானும் சொப்பிங் போனதாகச் சொன்னதுதான் கொஞ்சம் ஓவராக இருந்தது.

**✍ யாழ்ப்பாணத்தில் படையினர் மீது நடத்தப்படும் கிளைமோர் தாக்குதல்களை மக்கள் தான் செய்கிறார்கள் என்று பி.பி.ஸிக்கு புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி பச்சையாகப் பொய் சொல்கிறாரே?**

–பா.அருமைத்துரை, கோண்டாவில்.

புலிகள் தான் மக்கள், மக்கள் தான் புலிகள் என்றும் அவர்தானே முன்னர் சொன்னவர் அப்போது



ப்ரியா மணி

சும்மாதானே இருந்தீர்கள். இப்போது மட்டும் என்ன எதிர்க்கேள்வி கேட்கிறீர்கள். எதிர்காலத்தில் குடும்பச் சண்டைகளுக்கெல்லாம் கிளைமோர் வெடிக்குமோ என்னவோ. இதுக்கிடையில் அந்தக் கிளைமோர் வெடிப்புகளையும் படையினரின் இறப்புகளையும் வீடியோ படம்பிடித்து அதே மக்கள் ஊருக்குள் காட்டிக் கொண்டு திரிகிறார்களாம். நீங்கள் பார்க்கவில்லையா?....

**✍ இரண்டு வாரமாக 'முரசு' வெளிவரவில்லையே?**

–கு.செல்வராசா, கந்தளாய்.

மூன்றாவது வாரமாகவும் வரவில்லையே என்று உங்களால் கேட்க முடியாதே...திருப்தியா?

**✍ இலங்கை அணியிடம் பலித்த இந்தியாவின் திட்டம் தென் ஆபிரிக்க அணியிடம் பலிக்கவில்லையே?**

–எம்.ஏ.அஷ்வர், தென்னக்கும்பர.

கங்குலியும் நீங்களும்தான் இதற்காகச் சந்தோசப்பட வேண்டும். என்னைப் பொறுத்தவரை கதம்... கதம்...

**✍ ஐக்கிய இலங்கைக்குள்தான் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா திட்டவட்டமாகச் சொல்லி விட்டது. அப்படியானால் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு காணப்படும் என்று கூறி வரும் புதிய அரசாங்கத்தின் நிலை என்னவாகும்?**

–தே.யோகநாதன், யாழ்ப்பாணம்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் ஒரே மாதிரியானதுதான் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகிறது. இந்தியாவின் தோழமையை விரும்புபவர்கள் மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். மறுபக்கத்தில் தமிழ் மக்களின் நலனில் இந்தியாவுக்கு அக்கறையில்லை என்பவர்களுக்கு இது நல்ல சாட்டை அடி. இவ்விடயத்தில் பேராசிரியர்கள் மௌனம் காப்பது ஏனோ தெரியவில்லை.

**✍ பாலு மகேந்திராவின் 'அது ஒரு கனாக்காலம்' பார்த்து விட்டீர்களா?**

–றம்சியா, கல்முனை.

பார்த்துவிட்டேன். எதிர்பார்த்தளவுக்குக் கனாக்காலம் இல்லை. தனுசுக்கும் - பிரியாமணிக்கும் நல்ல இயக்குநரிடம் பணியாற்றிய அனுபவம் நிச்சயம் கிடைத்திருக்கும். மூன்றாம் பிறைக்குப் பிறகு ஒரு கனாக்காலம் பார்க்கலாம்.

**✍ தொடர்ச்சியாக அடை மழை பெய்ததே, என்ன செய்தீர்கள்?**

–மு.சசிகலா, வெள்ளவத்தை.

வெள்ளப் பாதிப்புகளைக் கேள்விப்பட்டு மிகவும் நொந்து போனேன். போன வருடமும் இப்படித்தான். முதலில் கடுமையான மழை பெய்தது. பின்னர் கிறிஸ்மஸ் வந்தது. பிறகு சுனாமி வந்தது. மீண்டும் அதுபோல ஏதும் நடந்து விடுமோ என்ற பயம்தான் எனக்கு....

**✍ காதலிக்கும்போது இருக்கும் அன்பும் மரியாதையும் கல்யாணத்துக்குப் பிறகு இருப்பதில்லையே ஏன்?**

–செ.பத்மினி, கண்டி.

போலியான எதுவும் அம்பலப்பட்ட பிறகு உப்புச் சப்பில்லாமல் தான் இருக்கும். அதை அன்பு, காதல் என்று நீங்களே சொல்லிக் கொண்டால் மற்றவரால் என்ன செய்ய முடியும்.

**✍ தாழமுக்கம் ஏற்பட்டிருப்பதால் பெய்துவரும் கடுமையான மழையில் தமிழ் நாடு வெள்ளத்தில் மிதப்பதாகச் சொல்கிறார்களே?**

–இரா.சிவகுமார், மாத்தளை.


அப்படிப் பார்த்தால் தமிழ் நாட்டை விடச் சிறியதான இலங்கை, இந்து சமுத்திரத்தில் மிதக்கிறது என்று ஏற்றுக்கொள்கிறீர்களா?

**✍ ஜனாதிபதி மஹிந்தவின் சிந்தனையைத் தாங்கி சமர்ப்பிக்கப்பட இருக்கும் புதிய வரவு - செலவுத் திட்டம் முன்னர் அறிவித்த நலத் திட்டங்களை அமுல்படுத்துமா அல்லது அவை தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட வாக்குறுதிகளாக இருக்குமா?**

–க.மகாலிங்கம், மட்டக்குளிய.

இன்னொரு முறையும் ஜனாதிபதிப் பதவிக்காக மக்களிடம் போக வேண்டியிருக்கும் என்பதை அவ்வளவு கெதியில் மறந்து விடுவார் என்று நம்பவில்லை. ஆனாலும் ஒன்றை விட மற்றொன்று வேறுபட்டதாகவே இருக்கும் என்பதால் அதீத எதிர்பார்ப்பைக் கைவிடுவது நல்லது.

**✍ முஸ்லிம் மக்கள் மீது புரியப்படுகின்ற கொலைகள், தாக்குதல்கள் தொடருமாக இருந்தால் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முஸ்லிம்களும் ஆயுதம் தூக்க**



ப்ரியா மணி

**வேண்டி வருமோ?**


–எம்.ஏ.நஷ்ருள்ளா, காத்தான்குடி.

தற்காப்புக்காக ஆயுதம் ஏந்துவதில் தப்பில்லை. ஆனால் அந்த ஆயுதங்கள் அப்பாவி மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்படக் கூடாது. அவ்வாறு நடந்தால் எதற்காக இந்த ஆயுதம் தூக்கப்பட்டதோ, அதற்காகவே இன்னொரு ஆயுதம் தூக்கப்படலாம். இப்படி மாறி மாறி ஆயுதம் தூக்கப்பட்டால் பிறகு ஆயுதங்களைத் தூக்க எவரும் மிஞ்சியிருக்கப் போவதில்லை.




மேற்கிந்தியத் தீவுகள் அணியைப் பிரதிநிதித்துவப் படுத்திய க்ளயிட் வோல் கொட் 1954 - 55களில் அவுஸ்திரேலிய அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டித் தொடரின் போது 5 சதங்களைப் பெற்றுள்ளார்.

1926ஆம் வருடம் ஜனவரி மாதம் 17ஆம் திகதி பார்படோஸ் புனித மைக்கல் நகரில் பிறந்த இவர் 1947-48களில் இருந்து 1959-60கள் வரை 44 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 3,798 (சராசரி 56.68) ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.




இதேநேரம் மேற்கிந்தியத் தீவுகள் அணியைப் பிரதி நிதித்துவப்படுத்தியுள்ள சிறந்த வலது கை துடுப்பாட்ட வீரரான எவர்டன் விக்ஸ் என்பவர் 947-48களில் இங்கிலாந்து அணிக்கெதிராக கிங்ஸ்டன்னில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின்போது 141 ஓட்டங்களைப் பெற்ற துடன் அதன் பின்னர் 1948-49களில் இந்திய அணிக் கெதிராக இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது முறையே 128, 194, 162, 104 ஓட்டங் களைப் பெற்றுள்ளார்.அடுத்த டெஸ்ட் போட்டியில் இவர் 90 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்துள்ளார்.

1925ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி பார்படோஸ் புனித மைக்கல் நகரில் பிறந்த இவர் 1947-48களில் இருந்து 1957-58கள் வரையில் 48 டெஸ்ட் போட்டிகளில்' கலந்து கொண்டு 4,455 (சராசரி) 58.61) ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இந்த வகையில் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் உலகப் புகழ் 'த்ரீ டபிள்யூஸ்' என அழைக்கப்படுப வர்களில் மேற்கூறிய இருவரும் அடங்குவர்.

அடுத்தவர் பிரேன்க் வொரல் என்பவராவார்.

இலங்கை அணி சார்பில் தோன்றியுள்ள சிறந்த தொழில்நுட்பத்துடன் விளையாடக்கூடிய துடுப்பாட்ட வீரரான மாவன் அத்தபத்து, டெஸ்ட் போட்டிகளின் போது 5 முறை இரட்டைச் சதங்களைப் பெற்றுள்ளார். (2003 ஆம் வருடம் ஜூன் மாதம் வரையில்) எனவே இவர் இலங்கையின் இரட்டைச் சத இயந்திரம் என அழைக்கப்படுகின்றார்.

கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வரலாற்றில் கூடுதலான இரட்டைச் சதங்களைப் பெற்றவர்கள் வரிசையில் மாவன் நான்காவது இடத்தை வகிக் கின்றார்.

இதன்படி, அவுஸ்திரேலிய அணியைச் சார்ந்த ஸ்ரீமத் டொனல்ட் பிரட்மன் 12, இரட்டைச் சதங்களையும், இங்கி லாந்து அணியைச் சேர்ந்த வொலி ஹெமண்ட் 7 இரட்டைச் ச்தங்களையும், பாகிஸ்தான் அணியின் ஜாவெட் மியன்டாரட் 6 இரட்டைச் சதங்களையும் பெற்றுள்ளனர்.

1970ஆம் வருடம் நவம்பர் மாதம் 22ஆம் திகதி களுத்துறையில் பிறந்த மாவன் அத்தபத்து, கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் எஸ்.எஸ்.ஸி. விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்.

சிறந்த வலது கைத் துடுப்பாட்ட வீரரான இவர், 1990-91களில் இந்திய அணிக்கு எதிராக சண்டிகாரில் வைத்து முதன் முதலில் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தோன்றியுள்ள கிரிக்கெட் வீரர்களுள் மிகச் சிறந்த வீரராகக் கருதப்படும் ஸ்டீவ் வோ சிறந்த டெஸ்ட் போட்டித் தலைவரும் ஆவார். தொடர்ந்து 16 போட்டிகளில் தனது அணியை வெல்ல வைத்து உலக சாதனையை இவர் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

36 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியுள்ள இவர், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் க்லய்வ்லொயிட் படைத்த சாதனையை சமப்படுத்தியுள்ளார். லொயிட் 74 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கி இதில் 36




போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளார்.

1965ஆம் வருடம் ஜூன் மாதம் 02ஆம் திகதி சிட்னி நகரில் பிறந்த ஸ்டீவ் வோ, சிறந்த வலது கை துடுப்பாட்ட வீரராவார். அதே நேரம் வலது கை மித வேக பந்து வீச்சாளருமாவார்.

2003ஆம் வருடம் ஜனவரி மாதம் 03ஆம் திகதி 10,000 டெஸ்ட் ஓட்டங்களை தனது 156ஆவது டெஸ்ட் போட்டியின் போது தான் பிறந்த சிட்னியிலேயே பூர்த்தி செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துடன் இவர் எலன் போர்டர் (11,174) சுனில் கவாஸ்கர் (10,122) ஆகிய 10,000 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்களுடன் இணைந்து கொண்டார்.

இவர் தனது 10,000 ஓட்டங்களைப் பெற்றபோது, உலகில் ஆகக் கூடிய டெஸ்ட் போட்டிகளில் (156) கலந்து கொண்டவர் என்ற சாதனையையும் படைத் துள்ளார். இதே நேரம் டெஸ்ட் போட்டிகளின் போது 109 'கெட்ச்' களை இவர் கைப்பற்றியுள்ளார்.

10,000 ஓட்டங்களை இவர் பெற்ற போது, இவரது சராசரி எண்ணிக்கை 49.50ஆகும். 28 சதங்கள் இதில் அடங்கும். இதற்கு முன்பதாக அதிக சதங்களை சுனில் கவாஸ்கர் (34) சச்சின் டெண்டுல்கர் (31), டொனல்ட் பிரட்மன் (29) ஆகியோர் பெற்றிருந்தனர்.

325 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள ஸ்டீவ் வோ, 3 சதங்கள் 45 அரைச் சதங்கள் அடங்கலாக 7,569 (சராசரி 32.90) ஓட்டங் களைப் பெற்றுள்ளார். ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 111 ஆகும்.

1985ஆம் வருடம் டிசம்பர் மாதம் மெல்பர்னில் வைத்து இந்திய அணிக்கு எதிராக முதன் முதலில் டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்ட இவர், 1985-86 களில் முதன் முதலில் நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் சர்வதேசப் போட்டியில் கலந்துகொண்டார்.

**- மைந்தன்**

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W. | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 2, கூட்டெண் - 9

2, 11, 20, 29 போன்ற திகதியில் பிறந்து, திகதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 9 வருமேயானால், இவர்கள் சந்திரன், செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்களுடைய பிறப்பெண்ணாகிய 2க்கு கூட்டெண் ணாகிய 9 எதிரியாக இருப்பதால், தனக்குத்தானே கெடுதலைத் தேடிக்கொள்ளுவர். தவறு என்று தெரிந்தும் அக்காரியங்களில் இறங்கி மாட்டிக் கொண்டு பின் வருந்துவர். இதனால் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயரை அமைத்துக் கொண்டாலோ, அல்லது இயற்கையாக அமைந் திருந்தாலோ எல்லா செல்வங்களும் பெற்று வளமான வாழ்க்கையைப் பெறுவர்.

மனபலம் மிகுந்த இவர்கள் எதையும் துணிந்து செய்து வெற்றி அல்லது தோல்வியைச் சந்திப்போம் என்ற எண்ணங்கொண்டவர். பிடிவாதமும், தன்னம் பிக்கையும் கொண்ட இவர்களுக்குப் பெயர் நன்கு அமைந்திருந்தால் எல்லாம் வெற்றி ஆகும். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் தோல்வி அடைவர். பின் வயது ஏற ஏற நிதானமாகச் செயல் படுவர். எப்பொழுதும் காரசாரமாகப் பேசும் ஆற்றலும், குறுக்குக் கேள்வி கேட்கும் ஞானமும் கொண்டு விளங்குவர். வழக்கறிஞராக இருந்தால் நன்கு குறுக்கு விசாரணை செய்வர்.

பொதுவாக இவர்கள் எல்லோரிடமும், வம்புக் காரர் என்ற பட்டத்தைப் பெறுவர். பஞ்சாயம் செய்வதாலும் சமாதானம் செய்யும் திறமையாலும், ஆத்மீகத் துறையைத் தெரிந்து வைத்திருப்பதாலும், பலரைத் தன்வசமாக்கிக் கொள்ளுவர். இவர்களைக் கண்டு எதிரிகள் அஞ்சுவர்.

ஆனால் இவர்களுக்கு, எப்பொழுதும் எதிர்ப்பு கள் உண்டு. உத்தியோகம் செய்பவர்களா யிருந்தால் உத்தியோகம் பார்க்கும் இடங்களில் எதிர்ப்புகள் இருந்துகொண்டே இருக்கும்.

நல்ல மனம் கொண்ட இவர்கள் திடீரென்று தோன்றும் முரட்டுக் குணத்தால், தன் பெயரைக் கெடுத்துக் கொள்ளுவர். மருத்துவம், சாஸ்திரம், சமயம் போன்ற துறைகளில் அதிக நாட்டம் செலுத்துவர். இந்த எண்களில் பிறந்த சிலருக்கு பெயர் நன்கு அமையவில்லையென்றால், குறிப்பிட்ட வயதில் திருமணம் நடைபெறுவதில்லை. அப்படி நடந்தாலும், சிக்கலான திருமணமாகத்தானிருக்கும். திருப்தி இல்லாத குடும்பம் நடத்தும் அவர்கள், பெயரைத் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமா னதாக மாற்றி அமைத்துக் கொண்டால் எல்லா வளமும் பெற்று வாழ்வர்.

### தொழில்

இவர்களுக்கு விவசாயம், கமிசன், கான்ட்ராக்ட், போதித்தல், வழக்குத் தீர்த்தல் போன்றவற்றால் பணம் சேரும்.

### நோய்

மூலம், உஷ்ண சம்பந்தப்பட்ட வியாதிகள் அனைத்தும் வர வாய்ப்பிருப்பதால், பெயரைத் தனது பிறந்த திகதிக்குத் தகுந்த மாதிரி அமைத்துக் கொண்டால் நோய் மாறலாம்.

### பெயர் அமைக்கும் முறை

சந்திரனும், செவ்வாயும் ஆதிக்கம் பெற்ற இவர்களுக்குச் சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 69 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொண்டு சீரும், சிறப்புமாக வாழலாம்.

### பின்பற்ற வேண்டியவை

*யோகமான எண் - 6,5.*
*யோகமான திகதிகள் - 6, 15, 24; 5, 14, 23.*
*யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, சந்திர காந்தக்கல்.*
*யோகமான நிறம் - வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்.*
*ஆகாத நிறம் - சிவப்பு.*
*ஆகாத திகதிகள் - 9, 18, 27.*

*அடுத்த வாரம் பிறப்பெண் 3, கூட்டெண் 1 பற்றிப் பார்ப்போம்*

9ஆம் பக்கத் தொடர்ச்சி.....

## உரிமை மடல்......

தேர்தலில் வாக்களிப்பது கடுமையான தண்டனைக்குரிய குற்றம் என்றும் துரோகம் என்றும் புலிகளின் பினாமி அமைப்புகள் விடுத்திருந்த எச்சரிக்கையே தமிழ் மக்கள் புலிகளின் கோரிக்கைக்கு செவி சாய்க்க விரும்பவில்லை என்பதன் வெளிப்பாடு என்று சர்வதேச நாட்டுப் பிரதிநிதிகளும், தொண்டர் நிறுவனங்களும் பேசிக்கொள்கின்றார்கள்!

வடக்கு - கிழக்கு மக்கள் வாக்களிக்க முடியாதபடி புலிகள் தடுத்தமை மோசமான ஜனநாயக உரிமை மீறல் என்று ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு சார்பாக அதன் தலைவர் குஷ்னகன் அவர்கள் ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் தெரிவித்திருக்கின்றார்.

இதே போல் அமெரிக்காவும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டிப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வாக்களிக்கும் சுதந்திரம் மீதான தடை குறித்து தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

மக்கள் புலிகளது கோரிக்கை மீது நம்பிக்கை கொண்டு தேர்தலை பகிஷ்கரிப்பவர்களாக இருந்திருந்தால்....

புலிகள் மக்களை அச்சுறுத்தியிருக்கவேண்டிய தேவை இருந்திருக்காது!

மக்கள் மீதும், எமது ஆதரவாளர்கள், மீதும் தோழர்கள் மீதும் கொலை அச்சுறுத்தல் விடுக்க வேண்டிய தேவை இருந்திருக்காது....

ஆகவே, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிக்க விரும்பியிருக்கின்றார்கள்!

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் ஆர்வம் கொண்டிருக்கின்றார்கள்!

சமாதானத்தின் மீதும் அதற்கான எமது நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை மீதும் மக்கள் நாட்டம் கொண்டிருக்கின்றார்கள்!

மக்களாகிய உங்களது விருப்பங்களையும், ஆர்வங்களையும், சமாதானம் குறித்த எண்ணங்களையும் புலிகள் தங்களது பலாத்காரத்தின் மூலம் அச்சுறுத்தல் மூலம், கொலைகள் மூலம், கொலை முயற்சிகள் மூலம் தடுத்து நிறுத்தவே எண்ணியிருக்கின்றார்கள்!

ஆனாலும் தேர்தல் நடைமுறை குறித்து ஈ.பி.டி.பி.யினராகிய நாம் ஜனநாயக வழிமுறையினை மட்டுமே கடைப்பிடித்திருக்கின்றோம்!

படையினர் கூட, புலிகளின் வரிந்து கட்டி இழுக்கும் வன்முறைக்குப் பலியாகி விடாமல் தேர்தல் நடைமுறை குறித்துப் பொறுமை காத்திருக் கின்றார்கள்!

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என்று மூவின மக்களும் கலந்து வாழும் வன்னி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலி களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையிலும் பாரிய அளவில் மக்களின் வாக்களிக்கும் சுதந்திரத்திற்குத் தடைபோட முடியாமல் போயுள்ளது.

ஆனாலும், யாழ். மாவட்ட மக்களின் வாக்களிக்கும் சுதந்திரத்தை புலிகள் தங்களது கடுமையான எச்சரிக்கை மற்றும் வன்முறைகள் மூலம் தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள்!

மக்கள் மீது புலிகளுக்கு நம்பிக்கை இருந்திருந்தால்.... தங்களது கோரிக்கையினை மக்கள் ஏற்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்திருந்தால்.... மக்களை சுதந்திரமாகத் தமது முடிவுகளை எடுப்பதற்கு அனுமதித்திருக்க வேண்டும்!

வன்முறைக் கலாசாரத்தை புலிகள் கட்டவிழ்த்து விட்டிருக்காவிட்டால் மக்கள் தங்களது வாக்குப் பலத்தினால் வரலாற்றை எழுதியிருப்பார்கள்!

வடக்கு - கிழக்கு, மலையகம், மற்றும் தென்னிலங்கை எங்கும் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்கள் புலிகளின் கோரிக்கையினையும் அச்சுறுத்தலையும் எதிர்கொண்டு - தேர்தலில் ஆர்வம் கொண்டு - வாக்களித்தமைக்கு ஈ.பி.டி.பி. நன்றி கூறுகின்றது!

யாருக்கு வாக்களித்தாலும் மக்களாகிய உங்களது ஜனநாயக நடைமுறை குறித்த ஆர்வத்தை நாம் வரவேற்கின்றோம்.

எமது கோரிக்கையினை ஏற்று, கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு வாக்களித்து அவரை இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பதில் உங்களது பங்கையும் சிறிய அளவிலானாலும் செலுத்தியிருக்க முடிந்தது குறித்து நான் நன்றி கூற விரும்புகிறேன்!

எமது கோரிக்கையினை ஏற்று வாக்களித்தவர்கள்....வாக்களிக்க விரும் பியும் புலிகளின் அச்சுறுத்தலால் வாக்களிக்க முடியாமல் போனவர்கள்..... அனைவரதும் ஜனநாயக எண்ணங்கள் குறித்து நான் மனம் திறந்து பாராட்டுகின்றேன்!

எந்தளவிற்கு உங்களது தேர்தல் குறித்த பங்களிப்பு இருக்குமோ, அந்தளவிற்கு எம்மால் சொன்னபடி ஜனாதிபதியுடன் பேரம் பேசி இந்த மண் ணில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும் என்ற யதார்த்த நிலையினையும் கடந்து சமாதானத்திற்காகவும் அர்த்தமுள்ள அரசியல் தீர்விற்காகவும் நாம் உழைப்போம்!

உங்களது வாக்களிக்கும் சுதந்திரத்தைப் புலிகள் தடுத்து நிறுத்தியமை குறித்து நாம் உரிய நேரத்தில் உரிய இடத்தில் கலந்து பேசுவோம்!

நாம் சொன்னபடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை கொண்டு உழைப்பார் என்பதை நாம் தெரிவிக்க விரும்புகின்றோம்!

புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது வருடாந்த உரையில் குறிப்பிட்டது போல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கலாம் என்ற கருத்தை நாம் வரவேற்கின்றோம்!

ஆனால், இது சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டதாக இருக்க வேண்டும்! துயரப்படுகின்ற மக்கள் மீதான விசுவாச எண்ணமாக இருக்க வேண்டும்! உள்ளொன்றும் புறமொன்றுமாக இல்லாமல் உண்மையானதாக இருக்க வேண்டும்!

கடந்த காலங்களைப்போல் சாத்தியப்படாத..... நடைமுறைக்கு ஒத்துவராத.... சிக்கல்களை மட்டும் உருவாக்கும் நிபந்தனைகளை விதித்து தமது யுத்த எண்ணங்களைப் பலப்படுத்த புலிகள் எடுத்துக்கொள்ளும் கால அவகாசமாக இது இருந்துவிடக் கூடாது!

பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாற்று ஜனநாயகச் சக்திகளை அழித்தொழிப்பதற்காகவும் வரியென்றும் கப்பம் என்றும் மக்களை சுரண்டி எடுப்பதற்காகவும் புலிகள் பயன்படுத்திக்கொள்ளும் கால அவகாசமாக இது அமைந்துவிடக் கூடாது!

**நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!**

ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ரணில் அரசோடு நடத்தி முடித்த புலித் தலைமை அதில் எந்த வெற்றியை ஈட்டியிருக்கின்றது?....

பேச்சுவார்த்தை என்று கூறி உலகத்தைச் சுற்றி வந்த புலித் தலைமை சென்று வந்த நாடுகளில், எதை விரும்பி எங்கு சென்றிருக்கின்றார்கள் என்பதை புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெளிவாக தெரிவித்திருக்கின்றார்.

மக்களாகிய உங்களது பணத்தில் தங்களது சுகபோகங்களை அனுபவிப்பதற்கு மட்டுமே புலிகள் உலகத்தைச் சுற்றி வந்திருக்கின்றார்கள் என்பது புலிகளின் ஆலேசகர் அன்ரன் பாலசிங்கத்தின் உரை மூலம் வெளிப்பட்டு நிற்கிறது.

பொய்யான பரப்புரைகளை நம்பி உலக நாடுகள் சில தனது இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருப்பது தனக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது வருடாந்த உரையில் குறிப்பிட்டுள்ளார்.

எது பொய்யான பரப்புரை என்று புலித் தலைமையிடம் நான் மக்களாகிய உங்கள் சார்பாகப் பகிரங்கமாகக் கேட்க விரும்புகின்றேன்!

சிறார்களைப் படையணிக்குச் சேர்ப்பதை நிறுத்துங்கள்! மாற்று இயக்கப் போராளிகள் மீதான படுகொலைகளை நிறுத்துங்கள்! வன்முறை கலாசாரத்தை நிறுத்துங்கள்.... அப்படி நிறுத்தும் பட்சத்தில் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து புலிகளை நீக்கிவிட முடியும் என சர்வதேச நாடுகள் பலவும் பகிரங்கமாக அறிவித்திருந்ததை இங்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்!

புலித் தலைமை இவைகளை ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு எந்தக் காலத்தில் முன்வந்தது என நான் கேட்கின்றேன்?.....கொலைகளை நிறுத்தி விட்டு.... வன்முறை கலாசாரத்தை நிறுத்திவிட்டு..... சிறுவர்களைப் பலாத்காரமாகப் படையணிக்குச் சேர்ப்பதை நிறுத்தி விட்டு.... புலித்தலைமை உலக நாடுகள் மீது குற்றம் சுமத்தியிருந்தால் அதில் நியாயம் இருந்திருக்கும்!

சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் அவசியத்திற்காகவே தாம் பேச்சுவார்த்தைக்குப் போயிருப்பதாகக் கூறும் புலிகளின் தலைமை தமது படுகொலைகள் மூலம் மட்டுமே சர்வதேச சமூகத் தின் ஆதரவை இழந்து நிற்கிறது!

ஆயுத வன்முறையில் காதல் கொண்ட போர் வெறியர்கள் அல்ல என்றும் சமாதான மென்முறையில் பற்றுறுதி கொண்டவர்கள் என்றும் உலகிற்கு உணர்த்தவே பேச்சுவார்த்தைக்குச் சென்றிருப்பதாகக் கூறும் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்திலும் ஆயுத வன்முறை மீது மோகம் கொண்டு படுகொலைகளைப் புரிந்திருப்பதால் மட்டுமே உலக நாடு கள் அவர்களைப் பயங்கரவாதிகளாகத் தொடர்ந்தும் பிரகடனப்படுத்தி வருகின்றன!

**உன் கால்களில் குத்திய முட்கள்**
**அடுத்தவன் தூவி விட்டவைகள் அல்ல!**
**நீயே தூவி விட்டவைகள்**

என்றான் ஒரு கவிஞன்! இதை உணர்ந்து ஆயுத வன்முறை கலாசாரத் தையும் படுகொலைகளையும் நிறுத்தி.... ஆயுதங்களின் மீதான மோகத்தை நிறுத்தி.... யுத்த எண்ணங்களைக் கைவிட்டு..... மக்களின் மகிழ்ச்சிக்காக இதய சுத்தியோடு பேச்சு வார்த்தை மேசைக்கு வர வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் சார்பாகப் புலிகளின் தலைமைக்கு நான் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன்!

நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையில் எமது தாயக தேசத்தில் சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கு ஈ.பி.டி.பி. தொடர்ந்து உழைக்கும்!

மறுபடியும் ஒரு உரிமை மடலில் சந்திப்போம்!

*மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!*
*சொல்வதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!*
*உறவுக்குக் கைகொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!*
*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!....*

பிரியமுடன்
செயலாளர் நாயகம்

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :- இதயவீணை**

# மோசஸ் (கி.மு. 13ஆம் நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

மோசஸின் முக்கிய மூன்று பெருஞ்சாதனைகளில் முதலாவதாக, எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறிச் செல்வதற்குத் தலைமை தாங்கிய அரசியல் தலைவர் என்ற பெருமைக்கு அவர் உரியவராகிறார். இந்தப் பெருமைக்கு அவர் தகுதியுடையவரேயாவார். இரண்டாவதாக, விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து ஏடுகளும் மோசஸுக்கு உரிமைப்படுத்தப்பட்டுள்ளன. தோற்றம், வெளித்தோற்றம், கிளை மரபு, மக்கள் கணிப்பு,



ஐந்தாம் ஏடு ஆகிய ஐந்தும் இந்த ஏடுகளாகும். இந்த ஏடுகளும், "மோசஸின் ஐந்தேடுகள்" என அழைக்கப்படுகின்றன. இவை யூதர்களின் 'திருமறை'யாக அமைந்துள்ளன. இந்த ஏடுகளில், மோசஸின் இறை நீதித் தொகுதியும் (Mosaic Code) அடங்கியுள்ளது. விவிலியக் காலத்தில் யூதர்களின் வாழ்க்கையை நெறிப்படுத்திய நெறிமுறைகளையும் இது உள்ளடக்கியிருக்கிறது. 'பத்துக் கட்டளை'களும் இதில் அடங்கும்.

இறைநீதித் தொகுதியும், பத்துக் கட்டளைகளும் உலகில் பெருஞ் செல்வாக்கைப் பெற்றுள்ளமையால், அவற்றைப் படைத்த ஆசிரியர் நிச்சயமாகத் தலைசிறந்தவராகவும், ஒப்புயர்வற்றவராகவும் போற்றத்தக்கவராகவும் உள்ளார். ஆயினும், இந்த ஏடுகளின் ஆசிரியர் ஒருவர் அல்லர் என்பதை பெரும்பாலான விவிலிய நூலறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இந்த நூல்களைப் பல ஆசிரியர்கள் இயற்றியிருக்க வேண்டும். இந்நூல்களில் அடங்கியுள்ள பொருள்களில் பெரும் பகுதி மோசஸ் இறந்த பிறகு நெடுங்காலத்திற்குப் பின்னரே எழுத்து வடிவம் பெற்றது. அப்போதிருந்த ஹீப்ரு மரபு நெறிகளைத் தொகுப்பதில் மோசஸ் முக்கிய பங்கு



ஏற்றிருக்கக் கூடும். ஹீப்ரு வாழ்க்கை நெறிகளை அவரே வகுத்தமைத்திருக்கலாம். ஆனால் அவருடைய பணியின் அளவு எவ்வளவு என்பதைத் துல்லியமாக மதிப்பிடுவதற்கு உண்மையில் வழி ஏதுமில்லை.

மூன்றாவது - யூதர்களின் ஒரு கடவுட் கோட்பாட்டினை நிறுவியர் மோசஸ்தாசன் என்று பலர் கருதுகின்றனர். அவ்விதம் கருதுவதற்கு ஆதாரமே இல்லை. மோசஸ் பற்றிய தகவல்களை அறிவதற்கு ஒரே ஆதாரம் பழைய ஏற்பாடுதான். அந்தப் பழைய ஏற்பாட்டில், ஒரு கடவுட் கோட்பாட்டை நிறுவியவர் ஆபிரகாம் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும், ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறலாம். மோசஸ் மட்டும் இல்லாது போயிருப்பின், யூதரின் ஒரு கடவுட் கோட்பாடு என்றோ மறைந்து போயிருக்கும். இக்கோட்பாட்டினைப் பேணிக்காத்து, பிந்திய தலைமுறையினருக்கு அளித்ததில் மோசஸ் பெரும் பங்கு கொண்டார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. உலகில் இரு பெரிய சமயங்களாகிய கிறிஸ்தவமும் இஸ்லாமும், யூதர்களின் ஒரு கடவுட் கோட்பாட்டிலிருந்து தான் தோன்றின. "ஒருவனே தேவன்" என்ற கொள்கையில் மோசஸ் மிகத் தீவிரமாக நம்பிக்கை கொண்டிருந்தார். இந்தக் கொள்கை உலகின் பெரும் பகுதிக்குப் பரவியது. அந்த வகையில் தான் மோசஸின் முக்கியத்துவம் புரிகிறது.

**அடுத்த வாரம் அகஸ்டஸ் சீசர் வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**

***-காதில பூ கந்தசாமி-***

வணக்கமுங்கோ!

ரெண்டு வாரமா உங்க பிரிஞ்சு இருந்த அவஸ்தை வார்த்தைகளால மட்டும் சொல்ல ஏலாதுங்கோ. மனசில பட்டதை உங்களோடை ஒருக்காப் பேசாட்டில் ஏதோ பைத்தியம் பிடிச்சுடுமாப் போலை இருக்குதுங்கோ. உந்த ரெண்டு வாரத்திலையும் எத்தினை வகையான பிரச்சினையுங்கோ. அதுகளை தெரிஞ்சுகொண்டு சும்மா இருக்கிறது எவ்வளவு கஷ்டமான காரியமெண்டதை புரிஞ்சுகொண்டேனுங்கோ. மகா ஜனங்கள் எப்பிடித்தான் அத்தனையையும் பொறுத்துக் கொண்டும், சகிச்சுக் கொண்டும் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு இருக்கிறீயளோ எண்டு நினைக்கேக்க நெஞ்செல்லாம் அடைச்சுக்கொண்டு வருகுதுங்கோ. உப்பிடி சொல்லிக் கொண்டே போகலாமுங்கோ. பிறகு நீங்கள் நினைப்பியள், என்னடா இண்டைக்கு ஓவர் பீலிங் காட்டுறான் எண்டு எண்டதால போன வாரத்தில நடந்த விசயத்தில இருந்து ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொல்லப் போறனுங்கோ. அதுவும் ஆலோசகர் பாலாண்ணையின்ர கதைதானுங்கோ.

ரணில் அரசாங்கத்தோடை பேச்சு வார்த்தை நடத்திறதுக்கு தாய்லாந்துக்குப்போய் இருக்கேக்க, பெடியள் என்ன செய்திச்சினம் எண்டதை பாலா அண்ண விவரிச்சதைக் கேட்டியளோ தெரியாது. கேட்டவையளுக்கு புல்லரிச்சு இருக்கும். ஏன் தெரியுமோ? ஒரு உண்மையைச் சொல்லுறன் எண்டு ஆரம்பிச்ச பாலா அண்ண பேங்கொக்கில பேச்சுவார்த்தைக்குப் போன பெடியள் பொழுதுபட்டால் சொப்பிங் போயிடுவினமாம். பிறகு இரவுப்படத்தான் ரூமுக்குத் திரும்புவினமாம். அவையளோடை சேர்ந்து தானும் போனவராம். அங்க போனால் பொம்மைகள் மாதிரி பேங்கொக் பெட்டையளாம். அவையளைப் பெடியள் சைட் அடிச்சிச்சினமாம். தானும் சேர்ந்து சைட் அடிச்சாராம். எண்டாலும் தன்னை ஒரு வெள்ளைக்காரி கடிவாளம் போட்டுப் பிடிச்சிக் கொண்டிருந்தாளாம் எண்டு வாய் கூசாம பாலா அண்ண சொன்னதைக் கேட்டு எனக்கு வெக்கமாப் போட்டுதுங்கோ. ஆனால் உவர் உப்பிடி லண்டனில, தாய்லாந்தில என்ன நடந்ததெண்டதை விவரிச்சுக் கொண்டிருக்கிறதைக் கேட்டு ஏதோ உலக மகா சாதனையைத்தான் செய்துபோட்டினம் எண்ட கணக்கா வரின்ர கதையைக் கேட்டுக் கொண்டிருந்த எங்கட புலம்பெயர்ந்த மக்கள் அதுவும் லண்டனில இருக்கிற எங்கட சனம் விசிலடிச்சு, கை தட்டி ஆரவாரப்படுத்தினதைப் பார்த்தால், பாலா அண்ணையின்ர வாயாலை எல்லா உண்மைகளையும் கக்கச் செய்ய வேணும் எண்டதுக்காகவே அவரை உற்சாகப்படுத்துமாப் போலை பப்பாசியில ஏத்தினமோ எண்டும் ஒருபக்கம் நினைக்கத் தோணுதுங்கோ.

பாலா அண்ணை என்ன நினைச்சுக் கொண்டு உதையெல்லாம் சொன்னாரோ தெரியல்லை. ரொம்பவும் அசிங்கம் அசிங்கமாப் பேசிப்போட்டார் எண்டது தானுங்கோ உண்மை. இனிமேல் பெடியள் வெளிநாடுகளில தான் பேச்சு நடத்துவோமெண்டு கேட்டால் அங்க போய் பாலா அண்ண சொல்லுமாப் போல அந்த சொப்பிங் செய்யதான் உப்புடிக் கேக்கினமோ எண்டு தானேங்கோ யோசிக்கிற சனங்கள் நினைப்பினம். அதுமட்டுமே நினைப்பினம்.

தமிழ் மக்களின்ர அரசியல் தீர்வு எப்படியானதாக இருக்க வேணுமெண்ட பேச்சுக்குப் போறவை அங்க போய் அப்புடியான சொப்பிங் செய்திச்சினம் எண்டால் என்ன நடக்கும்? கடைசியில பேச்சுவார்த்தையில சிங்கள அரசாங்கம் எங்களை ஏமாற்றிப்போட்டுது. பேச்சுவார்த்தைகளில முன்னேற்றம் இல்லை எண்டு பெடியள் சொன்னாலும் அதை யாரும் நம்பமாட்டினமெல்லோ.

உதுகளை யோசிக்காம பாலா அண்ண உப்புடியெல்லாம் உளறியிருக்கக் கூடாதுங்கோ. அவர் உப்புடி உளறினதால இப்பவெல்லாம் பெடியளைப் பார்க்கேக்க எங்களுக்கே கூச்சமா இருக்குதுங்கோ...வயசு போன நேரத்தில பாலா அண்ணையும் சேர்ந்து சைட் அடிச்சனெண்டு சொன்னது இன்னும் அபத்தமுங்கோ. மறைக்க வேண்டியதை ஓப்பினாக் காட்டினால் அது ஆபாசம், அநாகரிகம் எண்டதை உந்த ஆலோசகருக்கே புரிஞ்சுகொள்ள முடியாமப் போட்டுதே எண்டது தானுங்கோ என்ர மண்டையைப் போட்டுக் குடைஞ்சு கொண்டிருக்கு.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(08.12.2005 தொடங்கி 14.12.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம் - சூரியன், புதன். தனு - வெள்ளி. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி- கேது. துலாம் - வியாழன். சந்திரன் சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் கஷ்டம், பணவரவு தாமதம், அந்நியர் உதவி, குடும்ப நன்மை, செலவு மிகுதி, வெளியிட வாசம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகளின் கெடுதி, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசிரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் சகாயம்,குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த எண்ணம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், உத்தியோக நன்மை, பலவிதப்பேறு, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் அலைச்சல், வீண் குறை கேட்டல், உறவினர் தொல்லை, பணச் செலவு, மனக்கஷ்டம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் பலிதம், புதிய முயற்சி, மனக்குறை நீங்கும், இனசன மகிழ்ச்சி, வெளியார் தொல்லை, குடும்பப் பகை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் கலக்கம், பணக் கஷ்டம், வெளியிடப் பயணம், புதிய முயற்சி, மனக்குறையதிகம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகத் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் அலைச்சல், பணச் செலவு, வீண் கலக்கம், தேக சுகக் கஷ்டம், குடும்பப் பாரம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் மகிழ்ச்சி, பணவரவு, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், குடும்பச் செலவு, உத்தியோக நன்மை, புதிய பதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 06.**

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் பலிதம், பணச் செலவு, முயற்சி மேன்மை, காரியானுகூலம், பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோக மகிழ்ச்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, பலவித பேறு, கடன் தொல்லை, உறவினர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகளால் நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் பலிதம், பணவரவு, உயர்ந்த எண்ணம், தூர இடப்பயணம், குடும்பத் தொல்லை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் சகாயம், மனப்பயம் நீங்கும், குடும்பச் சுகம், உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்....
செய்திகளாய்...
நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www.tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### சி. சசிகுமார் / 20.11.2005

மேரீவிலையைச் சேர்ந்த சிவகுமார் - ஆத்மஜோதி தம்பதியரின் செல்வப் புதல்வன் சசிகுமார் தனது முதலாவது பிறந்த நாளை 20.11.2005 அன்று லெபனானில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். சசி குட்டியை அன்பு அப்பா - அம்மா, மேரீவிலையில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா இருவரும், சித்தப்பா அஜித்குமார் - மீனாகொலையில் அம்மம்மா, அம்மப்பா, தங்கை தனுஷ்னி, மாமா சத்யமூர்த்தி, காந்தன், பாஸ்கர், சங்கர்தாஸ், மாமாமார் சிவராஜா, சாமி, லெபனான் மாமிமார் சாவித்திரி, வாணி, கண்ணகி, சுமதி, தமயந்தி, சவூதி நளானி லங்கேஸ் இந்தியா சிவந்த மலர், கற்பகமலர், மச்சான்மார் தினேஸ், சுரேஸ், ஜோனி, ஜோய், மச்சாள் மரியா, சசிகலா இந்தியா தாத்தாமார், வீரபுத்திரன், ராமையா, மாரிமுத்து, தங்கவேல் ராஜரட்னம் கோவிந்தராஜ் சிவராம் தம்பிராஜ் சண்முகவேல் சுப்பிரமணியம் ஆண்டி முருகைய்யா கிருஷ்ணமூர்த்தி இந்தியா பெருமாள் சேவுகன், சித்திமார் ரட்னஜோதி, பாப்பா செல்வீ ராணி. கலா, மலர், சியமளா பேபீ சந்திரகலா பவானி வேலம்மாள் தங்கம்மா மாரியம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் லெபனானில் வசிக்கும் நண்பர்கள், நண்பிகள் அனைவரும் மேரிவிலை முருகன் அருள் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


தகவல்: பி.சிவகுமார், ஜோதி, 11, Rueamine Helou, Baabda, Lebanon.

## பறவைக் காய்ச்சல்

உலகெங்கும் பறவைக் காய்ச்சல் பறவைக் காய்ச்சல் என்று ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளாக மலேசியா, சீனா போன்ற நாடுகள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமது நாட்டுக்கும் இந்நோய் வந்து விட்டதோ என்று பல நாடுகள் தமது நாட்டுப் பெரும்பான்மை பறவைகளை மருத்துவ பரிசோதனைக்குட் படுத்திக் கொண்டிருக்கின்றன. அதற்காகவே தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டு விசேட உபகரணங்களைப் பாவித்தும் வருகின்றன.

இங்கும் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள பூங்காவில் புறாக்களுக்கு உணவளிக்கிறார் ஒரு நிபுணர். அவுஸ்திரேலியாவில் பறவைக் காய்ச்சல் நோய் உள்ளதா என்பதைக் கண்டறிய நிபுணர்கள் குழுக்கள் இவ்வாறு பறவைகளுக்கு மருந்து கலந்த உணவுகளை வழங்கிவருகின்றன. பறவைக்கே மருந்து கலந்த உணவு அந்நாட்டில் இங்கு......






## வெற்றித் தடுமாற்றம்

ஓட்ட வீர, வீராங்கனைகள் தமது வெற்றி எல்லைக் கோட்டை மிக வேகமாக தொடும் போது தடுமாறுவது வழமைதான் அந்தவகையில் தான் மணிலாவில் 23ஆவது 'ஷீ கேம்ஸ்' நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 400 மீற்றர் மகளிர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்ற மியன்மார் வீராங்கனை இன் - இன் - கின் வெற்றி எல்லைக் கோட்டைத் தொட்டு தடுமாறி விழுந்தபோது எடுக்கப்பட்ட வித்தியாசமான கிளிக் இதுவாகும்.


வெற்றி பெற்று முதலாவதாக வரும்போது ஒருகணம் தடுமாறி விழுவது வழமையாகி விட்டது தானே?

## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து / 01.12.2005

### செல்வி பு. திரிஜா


முந்தல் குடியிருப்பைச் சேர்ந்த புஸ்பநாதன் - சிவாந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வி திரிஜா (பூஜா) தனது இரண்டாவது பிறந்த நன்னாளை (தனது தந்தையின் பிறந்த நாளன்றே) 01.12.2005 அன்று Canada Scarborough இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா - அம்மா, ஆசை அம்மப்பா - அம்மம்மா, தினேஸ் (புவனேஸ்) மாமா, பரம் மாமா - கமலா அத்தை, மச்சாள்மார் அபிதா, சர்மிளா, நாதன் பாட்டா - ராணி பாட்டி, சித்திமார் திவ்யா, சூர்யா, சரண்யா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் திரிஜா குட்டியை Toranto துர்க்கை அம்மன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் :- அப்பா - Canada.



## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### அ. அரிக்ஷா 30.11.2005



புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த Swiss இல் வசிக்கும் திரு.திருமதி அருள்நேசன் சாந்தகௌரி (சாந்தினி) தம்பதியரின் செல்வப்புதல்வி அரிக்ஷா தனது 1ஆவது பிறந்ததினத்தை 10.12.2005 அன்று வெகுவிமரிசையாக Swissஇல் கொண்டாடுகிறார். அன்புச் செல்வம் அரிக்ஷாவை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்தி, அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நயினை நாகபூசணி துணை கொண்டு பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க, வளர்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பப்பா

## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### ர.ராகுல் /04.12.2005

இலண்டனில் வசிக்கும் ரகுநாதன் - கமலினி தம்பதியரின் செல்வப் புதல்வன் ராகுல் 04.12.2005 அன்று தனது முதலாவது பிறந்த நாளை இலண்டனில் கொண்டாடினார். ராகுலை - அன்பு அப்பா, அம்மா, கவிஷா அக்கா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், மச்சாள்மார், சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, மாமா, மாமி, மச்சாள்மார், டென்மார்க்கில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான்மார், இலண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்கா, மல்லாவியில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார், பூட்டாச்சி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

–தகவல் :- கண்ணன் சித்தப்பா (கொழும்பு)

